581

EASY SELECTIONS

FROM

TAMIL POETRY

[WITH NOTES]

581

SENIOR

4.19

Part II—For VIII Class or III Form

11 NOV 1919

பால நீதிச் செய்யுள் நூற்றிரட்டு

[உரையுடன்]

ஸீனியர்

(இரண்டாம் பகுதி—எட்டாம் வகுப்புக்கு அல்லது மூன்றும் பாரத்துக்கு)

MACMILLAN AND CO., LIMITED

MADRAS BOMBAY, CALCUTTA, LONDON

1919

ts Reserved

[விலை, 5 அணா

TB
031,6(S)
M19.2
17148

திவான் பஹதூர்—வி. கிருஷ்ணமாச்சாரியார் இயற்றிய

இயற்கை விளக்க வாசகங்கள்.

சிறுவயதிலேயே 'ஸைன்ஸ்' என்னும் இயற்கை ஞானத்தைப் பிள்ளைகளுக்குச் சிறிது சிறிதாகப் புகட்டவேண்டுமென்பது இப்பொழுது உயர்ந்த கல்வியதிகாரிகள் பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மேல் நாட்டுப் பள்ளிக்கூடங்களில், பாலர் வகுப்பு முதற்கொண்டே இயற்கைஞானம் கற்பிக்கப்படுவது அவசியமாய் விட்டது. நம் நாட்டிலும் பிள்ளைகள் அறிவில் சிறந்து வளர்ந்து தம் நாட்டுக்கும் தங்களுக்கும் உபகாரிகளாவதென்றால், நம் பள்ளிக்கூடங்களிலும் இயற்கை ஞானம் போதிப்பது அவசியமாதல் வேண்டும். பல வருஷங்களுக்கு முன்னேயே இவ்வுண்மையை அறிந்து, காலஞ்சென்ற திவான் பஹதூர் கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் இயற்கை விளக்க வாசகங்கள் என்ற தொகுதியில் பல பாட புஸ்தகங்கள் எழுதி வெளியிட்டார்கள். அவை கல்வியதிகாரிகளாலும் உபாத்திமார்களாலும் மிகவும் பாராட்டப்பட்டன. ஆனால் [illegible] காலத்துக்கும் தற்காலத்துக்கும் இடையே, இயற்கை ஞானமும் போதனமுறையும் மிக விருத்தி யடைந்துள்ளபடியால், அவ் விருத்தியை அனுசரித்து அவையாவும் திருத்தி மாற்றி விரித்துப் புதுமுறையில் வெளியிடப்பட்டுள்ளன. அவை வருமாறு:

	ரூ.	அ.	பை.
முதற் புஸ்தகம்	0	3	0
இரண்டாம் புஸ்தகம்	0	5	0
மூன்றும் புஸ்தகம்	0	5	0
நான்காம் புஸ்தகம் (அச்சில்)			
ஐந்தாம் புஸ்தகம் (அச்சில்)			

திவான் பஹதூர்: ச. பவானந்தம் பிள்ளை அவர்கள்
எப். ஆர். எச். எஸ்—லண்டன்: எம். ஆர். [illegible] எஸ்—லண்டன்.

தொகுத்த

தமிழ் இலக்கியத் திரட்டு.

ஒரு நாட்டாரின் நாகரிக விருத்தியை [illegible] சாதனமாயிருப்பது அந்நாட்டாரின் இலக்கியமே. நம் தமிழ்நாட்டு முற்கால இலக்கியம் பிறநாட்டு முற்கால இலக்கியங்களுக்குப் பின்வாங்காத பெருமையும் அழகுமையும் உடையதாயிருக்கிறது. ஆயினும், அது தற்கால மாணவர்க்குப் பயன்படா வகையில் பரந்து கிடக்கிறது. அதனை மாணவர்க்குப் பயன்படும் வகையில் சிறு சிறு பகுதிகளாகத் திரட்டிக்கொடுப்பதே இத்தொகுதியின் நோக்கம். இதில் இதுகாறும் இரண்டு பகுதிகள் வெளிவந்துள்ளன.

பகுதி I. (14 வசனபாடங்கள், 12 செய்யுட்பாடங்கள்) ..	0
பகுதி II. (15 வசனபாடங்கள், 8 செய்யுட்பாடங்கள்) ..	0

581
481

EASY SELECTIONS

FROM

TAMIL POETRY

[WITH NOTES]

SENIOR

Part—II for VIII Class or III Form.

11 NOV 1919

பால நீதிச் செய்யுள்

நூற்றிரட்டு

உரையுடன்

ஸீனியர்

(இரண்டாம் பகுதி—எட்டாம் வகுப்பு அல்லது மூன்றும் பாரத்துக்கு)

மாக்மில்லன் அண்டு கம்பெனி, லிமிடெட்
சென்னை, பம்பாய், கல்கத்தா, லண்டன்
1919
[ரிஜிஸ்தர் செய்தது]

Price, 5 Annas] [விலை, 5 அணா

171408

உள்ளுறை:

1. திரிகடுகம்

(நல்லாதனார் அருளிச் செய்தது)

2. நான்மணிக் கடிகை

(விளம்பி நாகனார் அருளிச் செய்தது)

திரிகடுகம்

கடவுள் வாழ்த்து

கண்ணகன் ஞால மளந்ததூஉம், காமருசீர்த்
தண்ணறும்பூங்குருந்தஞ் சாய்த்ததூஉம்,–நண்ணிய
மாயச் சகட முதைத்ததூஉம், இம்மூன்றும்
பூவைப்பூ வண்ண னடி.

(ப–ரை.) கண் அகல்–இடம் அகன்ற, ஞாலம்–பூமியை, அளந்ததூஉம்–அளந்ததும், காமரு–அழகு பொருந்திய, சீர்–சிறப்பையுடைய, தண் நறும்பூ–குளிர்ச்சியும் சுத்தமுமான மலர்களையுடைய, குருந்தம்–குருந்தமரத்தை, சாய்த்ததூஉம்–வீழ்த்தினதும், நண்ணிய–(கஞ்சனு லேவப்பட்டுத் தன்னை வருத்தும்படி) கிட்டிவந்த, மாயச்சகடம்–வஞ் சகமான வண்டியை, உதைத்ததூஉம்–உதைத்ததும், இம்மூன்றும்–(ஆகிய) இம்மூன்றும் (செய்தவை), பூவைப்பூ–காயாமலர்போலும், வண்ணன்–நிறத்தினையுடைய திருமாலின், அடி–திருவடியாம்.

நூல்

அருந்ததிக் கற்புடை யாரும், திருந்திய
தொல்குடியின் மாண்டார் தொடர்ச்சியும், சொல்லின்
அரிலகற்றுங் கேள்வியார் நட்பும், இம் மூன்றும்
திரிகடுகம் போலு மருந்து. 1

(ப–ரை.) அருந்ததிக் கற்புடையாரும்–வசிட்டமுனிவன் மனை வியினது கற்பை ஒத்த கற்பினையுடைய மனைவியரும்; திருந்திய–(மனமும் செய்கையும்) கோணுதலில்லாத, தொல்குடியின் மாண்டார்–பழமையாகிய குடிப்பிறப்பில் மாட்சிமைப்பட்டவரோடு, தொடர்ச் சியும்–கூடியிருத்தலும்; சொல்லின்–(பிறர் சொல்லும்) சொற்பொரு ளில், அரில் அகற்றும்–(பயனின்மையாகிய) குற்றத்தை நீக்கிப் பய னைக்கொள்ளுகின்ற, கேள்வியார் நட்பும்–கேள்வியையுடையாரோடு செய்யும் நட்பும்; இம்மூன்றும்–ஆகிய இம்மூன்று செய்கையும், திரி கடுகம்போலும் மருந்து–(இல்வாழ்வானுக்குத்) திரிகடுகத்தை ஒக்கும் மருந்துகளாம்.

தன்குணங் குன்றுத் தகைமையும், தாவில்சீர்
இன்குணத்தா ரேவின செய்தலும்,—நன்குணர்வின்
நான்மறை யாளர் வழிச்செலவும், இம்மூன்றும்
மேன்முறை யாளர் தொழில். 2

(ப—ரை.) தன்குணம் – இயற்கையாகிய பெருங்குணம், குன்றுத் தகைமையும்—குறைதலில்லாத பெருமையும்; தா இல்—அழிதலில்லாத, சீர் இன் குணத்தார் – கீர்த்தியைத்தருகின்ற இனிமையாகிய இயற்கையையுடைய நல்லோர், ஏவின செய்தலும்—ஏவிய கருமங்களைச் செய்தலும்; நன்கு உணர்வின்—(உயிர்களுக்கு) நன்மையைத் தருவதனை அறிதலுடைய, நால் மறையாளர் வழி—அந்தணர்கள் கூறிய வழியில், செலவும்—நடத்தலும்; இம்மூன்றும்—ஆகிய இம்மூன்று செயலும், மேல் முறையாளர் தொழில்—மேலாகிய ஒழுக்கத்தை யாளுதலுடையாரது தொழில்களாம்.

கல்லார்க் கினனா யொழுகலும், காழ்கொண்ட
இல்லாளைக் கோலாற் புடைத்தலும்,—இல்லம்
சிறியாரைக் கொண்டு புகலும், இம் மூன்றும்
அறியாமை யான்வருங் கேடு. 3

(ப—ரை.) கல்லார்க்கு—கற்றறியாதவருக்கு, இனன் ஆய்—உறவினனாகி, ஒழுகலும்—நடத்தலும்; காழ் கொண்ட—கற்பினுறுதியைக் கொண்ட, இல்லாளை—மனையாளை, கோலால் புடைத்தலும்—(கோபம் வந்தகாலத்தில்) கோலினால் அடித்தலும்; இல்லம்—இல்லறத்தில், சிறியாரைக்கொண்டு—சிற்றறிவுடையாரது சொல்லைக்கேட்டு, புகலும்—(அதை நடத்தப்) புகுதலும்; இம்மூன்றும்—ஆகிய இம்மூன்றுசெயலும், அறியாமையான்—(ஒருவனுக்குப்) பேதைமையினால், வரும் கேடு—உண்டாகும் கேடுகளாம்.

பகைமுன்னர் வாழ்க்கை செயலும், தொகைநின்ற
பெற்றத்துட் கோலின்றிச் சேறலும்,—முற்றன்னைக்
காய்வானைக் கைவாங்கிக் கோடலும், இம்மூன்றும்
சாவ துறுவான் றொழில். 4

(ப—ரை.) பகை முன்னர்—(பொருமையால்) பகைக்குங் குணமுடையார் முன்னே, வாழ்க்கை செயலும்—(பெருஞ்செல்வத்தோடு) வாழ்தலும்; தொகை நின்ற—கூட்டமாய் நின்ற, பெற்றத்துள்—மாடுகளுக்கு நடுவில், கோல் இன்றிச் சேறலும்—கோலில்லாமல் செல்லுத

லும; தன்னைக காய்வானை–தன்னைப்பகைக்கு மியல்புடையானை, முன் கைவாங்கி –முன்னேவிட்டு நீங்கி, கோடலும்–(பின்னே அவனை) நட் புக்கொள்ளுதலும்; இம்மூன்றும் – ஆகிய இம்மூன்றுசெயலும், சாவ– இறக்கும்படி, உறுவான் தொழில்–துன்பமடைவோனது தொழிலாம்.

வழங்காத் துறையிழிந்து நீர்ப்போக்கும், ஒப்ப
விழைவிலாப் பெண்டிர் விருப்பும்—உழந்து
விருந்தினனாய் வேற்றூர் புகலும், இம் மூன்றும்
அருந்துயரங் காட்டு நெறி. 5

(ப–ரை.) வழங்கா–(யாவரும்) இறங்கிப்போகாத, துறை இழிந்து– துறையிலிறங்கி, நீர் போக்கும்–பெருநீரில்போகுதலும்; ஒப்ப–(மனம்) ஒப்பாக, விழைவு இலா – விருப்பமில்லாத, பெண்டிர் விருப்பும்– பெண்களிடத்து விருப்பங் கொள்ளுதலும்; உழந்து – (நடையால்) வருந்தி, விருந்தினன் ஆய் – (உணவின் விருப்பத்தால்) விருந்தின னாகி, வேறு ஊர்–அயலூரில், புகலும்–புகுதலும்; இம்மூன்றும்–ஆகிய இம்மூன்று செயலும், அரு துயரம் காட்டும் நெறி – அருமையாகிய துன்பத்தைக் காட்டும் வழியாம்.

பிறர்தன்னைப் பேணுங்கா ணாலும், பேணுர்
திறன்வேறு கூறிற் பொறையும்,—அறவினையைக்
காராண்மை போல வொழுகலும், இம்மூன்றும்
ஊராண்மை யென்னுஞ் செருக்கு. 6

(ப–ரை.) பிறர்–அயலவர், தன்னைப் பேணுங்கால்–தன்னைவிரும்பி மேன்மைப்படுத்துமிடத்து, நாணலும் - (அதற்குத் தக்கவன் அல்லே னென்று) நாணுதலும்; பேணுர்–பகைவர், திறன்–(தன்னிடத்துள்ள நற்குண நற்செய்கையின்) வகைக்கு, வேறு – வேறுகிய தீக்குணச் செயல்களை, கூறின் – (தன்மேலேற்றிச்) சொல்லுமிடத்து, பொறை யும்–பொறுத்தலும்; அறவினையை – உபகாரச்செய்கையை, கார் ஆண் மை போல–மேகம் ஆளுதல்போல, ஒழுகலும்–(கைம்மாறு வேண்டா மல் உபகாரச் செய்கையை மேற்கொண்டு) நடத்தலும்; இம்மூன்றும்– ஆகிய இம்மூன்று செயலும், ஊர் ஆண்மை என்னும் – (தனது) ஊரி லுள்ளாரை ஆளுதலென்று சொல்லப்படும், செருக்கு–செல்வமாம்.

வாளாமீ னுள்ள றலைப்படலும், ஆளல்லான
செல்வக் குடியுட் பிறத்தலும்,—பல்லவையுள்
அஞ்சுவான் கற்ற வருநூலும், இம்மூன்றும்
துஞ்சூமன் கண்ட கனவு. 7

(ப–ரை.) வாளை மீன் – வாளை மீனை, உள்ளல் – உள்ளானென்னும் பறவை, தலைப்படலும் – பொருதற்கு முயலுதலும்; ஆள் அல்லான் – ஆளுந்தன்மையில்லாதவன், செல்வக்குடியுள்–நிறைந்தசெல்வமுடைய குடியில், பிறத்தலும்–பிறப்பதும்; பல் அவையுள் – (கற்றோர்) பலர் கூடியசபையில், அஞ்சுவான்–அஞ்சுமியல்புடையவன், கற்ற–கற்றறிந்த, அரு நூலும் – அருமையாகிய நூலினுணர்ச்சியும்; இம்மூன்றும் – ஆகிய இம்மூன்று செயலும், திஞ்சு – தூங்கின, ஊமன் கண்ட கனவு–ஊமனுல் காணப்பட்ட கனவை ஒக்கும்.

தொல்லவையுட் டோன்றுங் குடிமையும் தோக்கிருந்த
நல்லவையுண் மேம்பட்ட கல்வியும்,–வெல்சமத்து
வேந்துவப்ப வட்டார்த்த வென்றியும், இம்மூன்றும்
தாந்தம்மைக் கூறுப் பொருள். 8

(ப–ரை.) தொல் அவையுள்–பழமையை ஆராயவல்லோர் கூடிய சபையில், தோன்றும்–(மேலாக) விளங்கும், குடிமையும்–உயர் குடிப் பிறப்பும், தொக்கு இருந்த – கூடியிருந்த, நல் அவையுள் – நல்லோர் சபையில், மேம்பட்ட கல்வியும்–மேன்மையடைந்த கல்விப்புலமையும்; வெல் சமத்து – (பகைவரை) வெல்ல வல்லே.ரது போரில், வேந்து உவப்ப–(தன்னையுடைய) அரசன் மகிழும்படி, அட்டு–(பகைவரைக்) கொலைசெய்து, ஆர்த்த–வீர ஒலிசெய்த, வென்றியும்–வெற்றியும்; இம் மூன்றும்–ஆகிய இம்மூன்றும், தாம்–(அவற்றையுடையோர்) தாம், தம் மைக் கூறு–தம்மைப் புகழ்ந்து சொல்லாத, பொருள்–பொருளாம்

பெருமை யுடையா ரினத்தி னகறல்,
உரிமையில் பெண்டிரைக் காமுற்று வாழ்தல்,
விழுமிய வல்ல துணிதல், இம் மூன்றும்
முழுமக்கள் காத லவை. 9

(ப–ரை.) பெருமை உடையார் (அறிவொழுக்கங்களில்) மிகுதி யையுடையாரது, இனத்தின் – இனத்தினின்று, அகறல் – நீங்குதலும்; உரிமை இல்–உரியராதலில்லாத, பெண்டிரை–மாதர்களை, காமுற்று – விரும்பி, வாழ்தல்–(அவரோடு) வாழ்தலும்; விழுமிய அல்ல–சிறந்தவை அல்லாதவைகளை, துணிதல்–(சிறந்தவையாகத்) துணிதலும்; இம்மூன் றும்–ஆகிய இம்மூன்றும், முழுமக்கள்–மூடர், காதலவை–ஆசைசெய் பவையாம்.

கணக்காய ரில்லாத வூரும், பிணக்கறுக்கு
மூத்தோரை யில்லா வவைக்களனும்,–பாத்துண்ணும்
தன்மையி லாள ரயலிருப்பும், இம்மூன்றும்
நன்மை பயத்த லில. 10

(ப–ரை.) கணக்காயர் – பாடம் ஓதுவிப்பாரை, இல்லாத ஊரும் – உடையதாயிராத ஊரிலிருத்தலும்; பிணக்கு – (ஒரு பொருளைப்பற்றி இருவர் மாறுபட்டபோது) அம்மாறுபாட்டை, அறுக்கும் – நீக்கவல்ல, மூத்தோரை – (கல்வியறிவு கேள்விகளில்) முதிர்ந்தவரை, இல்லா அவைக்களனும்–உடையதாயிராத சபையிலிருத்தலும்; பாத்து–(பிரமசாரி முதலானோர்க்குப்) பகுத்துக்கொடுத்து, உண்ணும் – (தானும்) உண்ணுகிற, தன்மையிலாளர்–தன்மையில்லாதவர்க்கு, அயல் இருப்பும்–அயலில் இருத்தலும்; இம்மூன்றும்–இந்தமூன்றும், நன்மை பயத்தல் இல–(ஒருவனுக்கு) நன்மையைத் தருதலில்லன ஆம்.

விளியாதான் கூத்தாட்டுக் காண்டலும், வீழக்
களியாதான் காவா துரையும்,—தெளியாதான்
கூரையுட் பல்காலுஞ் சேறலும், இம்மூன்றும்
ஊரெல்லா நோவ துடைத்து. 11

(ப–ரை.) விளியாதான் – (இனிமையாகப்) பாடாதவன், கூத்து ஆட்டு–கூத்தாட்டத்தை, காண்டலும்–காணுதலும்; வீழ–(மயக்கத்தால்) விழும்படி, களியாதான் – (மதுவுண்டு) களியாதவன், காவாது – (தன் நாவைக்) காக்கமாட்டாமல், உரையும்–(குற்றமாகிய ஒன்றைச்) சொல்லுதலும்; தெளியாதான்–(தன்னைத்) தேறாதவனுடைய, கூரையுள்–வீட்டில், பல்காலும் – பலமுறையும், சேறலும் – செல்லுதலும்; இம்மூன்றும்–ஆகிய இம்மூன்றும், ஊர் எல்லாம் – ஊரிலுள்ளோரெல்லாம், நோவது–துன்பப்படுங் குற்றத்தை, உடைத்து–உடையன.

தாளாள னென்பான் கடன்படா வாழ்பவன்;
வேளாள னென்பான் விருந்திருக்க வுண்ணுதான்;
கோளாள னென்பான் மறவாதான்: இம்மூவர்
கேளாக வாழ்த லினிது. 12

(ப–ரை.) தாள் ஆளன் – முயற்சியை யாளுதலுடையான், என்பான் – என்று சிறப்பித்துச் சொல்லப்படுவோன், கடன்படா – கடன்படாமல், வாழ்பவன்–வாழ்தலுடையான்; வேள் ஆளன் என்பான்–உபகாரி என்று சொல்லப்படுவோன், விருந்து–(வந்த) விருந்தினர், இருக்க–(பசித்து) இருக்கையில், உண்ணுதான்–(தனித்து) உண்ணுதவன்,

கோள் ஆளன் என்பான்–(ஆசிரியன் கூறிய நூற்பொருளை) அமையக் கொள்ளு மாணாக்கனென்று சொல்லப்படுவோன், மறவாதான்–(கேட்ட வற்றை) மறத்தலில்லாதவன்; இம்மூவர்–ஆகிய இம்மூவரும், கேள் ஆக–(தனக்கு) நட்பினராயிருக்க, வாழ்தல்–(ஒருவன்) வாழ்வது, இனி து–(அவனுக்கு) நன்மை தருவதாம்.

சீல மறிவா னிளங்கிளை; சாலக்
குடியோம்பல் வல்லா னரசன்;—வடுவின்றி
மாண்ட குணத்தான் றவசி:என் றிம்மூவர்
யாண்டும் பெறற்கரி யார். 13

(ப–ரை.) சீலம் – (தாய் தந்தையருடைய) குணத்தை, அறிவான்– அறிந்து நடப்பவன், இளகிளை – உத்திரனுவான்; குடி–தன் ஆளுகை யின்கீழ் நின்றவர்களை, சால–மிகவும், ஓம்பல் வல்லான்–காத்தல் வல்ல வன், அரசன்–அரசனுவான்; வடு இன்றி – (காமம் வெகுளி மயக்கமா கிய) குற்றமில்லாமல்; மாண்ட–(தன் ஒழுக்கத்தில் சலியாது நிற்றலா கிய) மாட்சிமையுள்ள, குணத்தான்–குணத்தன்மையுடையவன், தவசி– தவசி ஆவான்; என்ற–என்று சொல்லப்பட்ட, இம்மூவர் – இந்தமூவ ரும், யாண்டும் – எக்காலத்திலும், பெறற்கு – (தாய் தந்தையர்முதலிய அம்மூவகையாராலும்) பெறுதற்கு, அரியார்–அரியராவர்.

இழுக்க லியல்பிற் றிளமை; பழித்தவை
சொல்லுதல் வற்றாகும் பேதைமை; யாண்டும்
செறுவொடு நிற்குஞ் சிறுமை:இம் மூன்றும்
குறுகா ரறிவுடை யார். 14

(ப–ரை.) இளமை – இளமைப்பருவமுடையான், இழுக்கல்–(நல் லொழுக்கத்தினின்று) வழுவுதல், இயல்பிற்று – இயல்பாயுள்ளான்; பேதைமை–அறிவிலான், பழித்தவை–(அறிவுடையோரால்) பழிக்கப் பட்ட சொற்களை, சொல்லுதல் வற்று ஆகும்–சொல்லுதல் வல்லவனு வன்; சிறுமை–கீழ்மகன், யாண்டும்–காரணமில்லாத காலத்தும், செறு வொடு–கறுவுதலுடையனுகி, நிற்கும் – நிற்பான்; (ஆதலால்) இம்மூன் றும்–இம்மூவரையும், அறிவு உடையார்–(மேல்வினைவை) அறிதலுடை யார், குறுகார்–நெருங்கார்.

பொய்வழங்கி வாழும் பொறியறையும், கைதிரிந்து
தாழ்விடத்து நோக்கருதுந் தட்டையும்,—ஊழினுல்
ஒட்டி வினைநலம் பார்ப்பானும், இம்மூவர்
நட்கப் படாஅ தவர். 15

(ப–ரை.) பொய் வழங்கி–பொய்ச்சொற்களைச் சொல்லி, வாழும்–(அதனால்) உயிர் வாழ்கின்ற, பொறி அறையும் – அறிவில்லாதவனும்; கைதிரிந்து–(பணியத்தக்காரைப் பணியும்) முறைமை வேறுபட்டு (இலஞ்சி), தாழ் இடத்தும் – (அதனால்) வறுமையடைந்த காலத்தும், நேர் கருதும் – (அவரைத் தன்னோடு) சமமாக எண்ணுகின்ற, தட்டையும்–மூங்கிற்றடியை ஒத்தவனும்; ஊழினால் – (நட்புச்செய்யும்) முறைமையில், ஒட்டி–(ஒருவனை) நட்புக்கொண்டு, வினை–(தான்செய்யும் நட்பாகிய) தொழிலுக்கு, நலம்–பயனை, பார்ப்பானும்–ஆராய்பவனும்; இம்மூவர் – (ஆகிய) இம்மூவரும், நட்கப்படாதவர் – நட்புக்கொள்ளப்படாதவர்.

மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும், மாசில்சீர்ப்
பெண்ணினுட் கற்புடையாட் பேற்றானும்,—உண்ணுநீர்க்
கூவல் குறைவின்றித் தொட்டானும். இம்மூவர்
சாவா வுடம்பெய்தி னார். 16

(ப–ரை.) மண்ணின்மேல்–பூவுலகில், வான் புகழ்–(இரப்பவர்க்கு இல்லையென்னாது ஈந்து) சிறந்த புகழை, நட்டானும்–நிலைபெறச்செய்தவனும்; பெண்ணினுள்–பெண்களில், மாசு இல்–குற்றமின்மையாகிய, சீர்–சிறப்பையுடைய, கற்பு உடையாள்–கற்பையுடையவளை, பெற்றானும்–பெற்றோனும்; உண்ணும் நீர்–உண்ணுதற்குரிய நீரையுடைய, கூவல்–கிணற்றை, குறைவு இன்றி–குறைவில்லாமல், தொட்டானும்–தோண்டினவனும்; இம்மூவர்–ஆகிய இம்மூவரும், சாவா–இறத்தலில்லாத, உடம்பு–தேவசரீரத்தை, எய்தினர்–அடைந்தவராவர்.

மூப்பின்கண் ணன்மைக் ககன்றானும், கற்புடையாள்
வாய்ப்பவும் போற்றுத் தலைமகனும்,–வாய்ப்பகையுள்
சொல்வென்றி வேண்டு மிலிங்கியும், இம்மூவர்
கல்விப் புணைகைவிட் டார். 17

(ப–ரை.) மூப்பின்கண்–மூப்பிலும், நன்மைக்கு–துறவறத்துக்கு, அகன்றானும் – (அஞ்சி) நீங்கினவனும்; கற்பு உடையாள்–கற்புடைய மனைவி, வாய்ப்பவும்–கிடைத்தும், போற்று–(இல்லறத்தைப்) பாதுகாவாத, தலைமகனும்–நாயகனும்; வாய்ப்பகையுள்–வாய்ச் (சொல்லாற்) பகைகொள்பவர்களிடையே (சென்று), சொல் வென்றி–(தான்கூறிய) சொல்லினது வெற்றியை, வேண்டும்–விரும்பிச் சாதிக்கின்ற, இலிங்கியும்–தவவேடத்தானும்; இம்மூவர்–ஆகிய இம்மூவரும், கல்விப்புணை–கல்வியறிவாகிய தோணியை, கைவிட்டார்–முற்றும் நீங்கினவராவர்.

ஒருதலையான் வந்துறூஉ மூப்பும், உணர்ந்தார்க்
கிருதலையு மின்னுப் பிரிவும்,—உருவினை
உள்ளுருக்கித் தின்னும் பெரும்பிணியும், இம்மூன்றும்
கள்வரி னஞ்சப் படும். 18

(ப–ரை.) ஒருதலையான்–(கணவன் மனைவி என்னும் இருவருள்) ஒருவரிடத்து, வந்து உறும்–வந்துசேருகின்ற, மூப்பும்–முதுமைப் பருவமும்; உணர்ந்தார்க்கு–நட்பினருக்கு, இருதலையும்–(பிரியப்பட்டவரும் பிரியாதவருமாகிய) இரண்டிடத்தும், இன்னுப்பிரிவும்–துன்பத்தைத் தருகின்ற பிரிவும், உருவினை–உடம்பை, உள்–உள்ளிடத்துள்ள தசைமுதலியவற்றை, உருக்கி–கரையச்செய்து, தின்னும்–வருத்துகின்ற, பெருபிணியும்–(மருந்து முதலியவற்றால்) தீராத வியாதியும்; இம்மூன்றும்–ஆகிய இம்மூன்றும், கள்வரின்–கள்வர்க்கு அஞ்சுவதுபோல, அஞ்சப்படும்–பயப்படப்படும்.

கொல்யானைக் கோடுங் குணமிலியும், எல்லில்
பிறன்கடை நின்றெழுகு வானும்,—மறந்தெரியா
தாடும்பாம் பாட்டு மறிவிலியும், இம்மூவர்
நாடுங்காற் றூங்கு பவர். 19

(ப–ரை.) கொல் யானைக்கு–கொல்லுந் தொழிற்குரிய யானைக்கு, ஓடும்–(அஞ்சிப்போர்க்களத்தினின்று) ஓடுகின்ற, குணமிலியும்–வீரத்தன்மை யில்லாதவனும்; எல்லில்–இரவில், பிறன் கடை–(அயலானுக் குரியதை விரும்பி) அவன் வாயிலில், நின்று–(தனக்கு வாய்ப்பான சமயம்பார்த்து) நின்று, ஒழுகுவானும்–(அத்தியொழுக்கத்தில்) நடப்பவனும்; ஆடும் பாம்பு–ஆடுந்தொழிலுள்ள பாம்பை, மறம் தெரியாது–(நன்றிசெய்தார்க்கும் தீமையைச் செய்கின்ற) கொடுமையை உணராமல், ஆட்டும்–ஆட்டுகின்ற, அறிவிலியும்–அறிவில்லானும்; இம்மூவர்–ஆகிய இம்மூவரும், நாடுங்கால்–ஆராயுமிடத்து, தூங்குபவர்–அவற்றால் இறப்பவராவர்.

ஆசை பிறன்கட் படுதலும், பாசம்
பசிப்ப மடியைக் கொளலும்,—கதித்தொருவன்
கல்லாமனின் றெள்ளப் படுதலும். இம்மூன்றும்
எல்லார்க்கு மின்ன தன. 20

(ப–ரை.) பிறன்கண்–தியோனிடத்து, ஆசை–செல்வம், படுத்லும்–உண்டாதலும்; பாசம்–சுற்றத்தார், பசிப்ப–உணவில்லாமல் வருந்

தும்படி, மடியைக் கொளலும்–(ஒருவன் முயற்சியின்றிச்) சோம்பலைக் கொள்ளுதலும்; ஒருவன் கதித்து – ஒருவன் பெருத்துவளர்ந்தும், கல்லான் என்று – கற்றிலனென்று, எள்ளப்படுதலும் – (பிறரால்) இகழப்படுதலும்; இம்மூன்றும் – (ஆகிய) இம்மூன்றும், எல்லார்க்கும் – (அறிவுடையோர்) எல்லாருக்கும், இன்னாதன–துன்பந்தருவன ஆம்.

வருவாயுட் கால்வழங்கி வாழ்தல், செருவாய்ப்பச்
செய்தவை நாடாச் சிறப்புடைமை,—எய்தப்
பலநாடி நல்லவை கற்றல், இம்மூன்றும்
நலமாட்சி நல்லவர் கோள். 21

(ப–ரை.) வருவாயுள் – வரும்பொருளில், கால் – காற்பங்குப் பொருளை, வழங்கி – (அறத்தின்பொருட்டுச்) செலவிட்டு, வாழ்தல் – (மனையாளோடுகூடி) வாழ்தலும்; செரு–போர், வாய்ப்ப – பயன்படும்படி, செய்தவை–(தாம்) செய்த வெற்றிச்செய்கைகளை, நாடா–கருதித் (தம்மை) நன்குமதியாத, சிறப்பு உடைமை – மேன்மைக்குணத்தை உடையராதலும்; நாடி – ஆராய்ந்து, பல எய்த–பலவகைப்புலமையும் (தம்மில்) நிரம்பும்படி, நல்லவை – நல்ல நூற்பொருள்களை, கற்றல் – அறிதலும், இம்மூன்றும் – ஆகிய இவைமூன்றும், நலமாட்சி – நல்லறிவின் பெருமையையும், நல்லவர் – நல்லொழுக்கத்தையு முடையாரது, கோள்–கோட்பாடுகளாம்.

பற்றென்னும் பாசத் தளையும், பலவழியும்
பற்றறு தோடு மவாத்தேரும்,—தெற்றெனப்
பொய்த்துரை யென்னும் பகையிருளும், இம்மூன்றும்
வித்தற வீடும் பிறப்பு. 22

(ப–ரை.) பற்று என்னும் – (அகமும் புறமுமாகிய இருவகைப்) பற்றென்று சொல்லப்படும், பாசத்தளையும் – கயிற்றினாலாகிய விலங்கும்; பலவழியும்–பலபொருள்களிலும், பற்று அறுது – பிடிப்பு நீங்காமல், ஓடும் – விரைந்து செல்லுகின்ற, அவா தேரும் – ஆசையாகிய தேரும், தெற்றென–தெளிவாக, (கேட்போர் உண்மையெனத்தெளிய) பொய்த்து உரையென்னும்–பொய்யை யுடையதாகிய சொல்லென்று சொல்லப்படும், பகை இருளும் – (ஞானத்துக்குப்) பகையாகிய இருளும்; இம்மூன்றும்–ஆகிய இம்மூன்றும், வித்து அற–(தமக்குக்) காரணமாகிய அவிச்சைகெட, பிறப்பு வீடும்–பிறப்பழியும்.

தானங் கொடுக்குந் தகைமையும், மானத்தார்
குற்றங் கடிந்த வொழுக்கமும்,—தெற்றெனப்
பல்பொரு ணீங்கிய சிந்தையும், இம்மூன்றும்
நல்வினை யார்க்குங் கயிறு. 23

(ப–ரை.) தான்ம்–தானத்தை, கொடுக்கும்–கொடுக்கின்ற, தகைமையும்–பெருஞ்செய்கையும்; மானத்தார்–பழிக்கு நாணுதலுடையோராது, குற்றம் கடிந்த–குற்றத்தைநீக்கிய, ஒழுக்கமும்–நல்லொழுக்கமும்; தெற்றென–தெளிய (உண்மையாக), பல் பொருள்–பல விடயங்களினின்றும், நீங்கிய–ஒழிந்த, சிந்தையும்–எண்ணமும்; இம்மூன்றும்–ஆகிய இம்மூன்றும், நல்வினை–அறத்தின்பயனை, ஆர்க்கும்–(நீங்காதபடி) கட்டுகின்ற, கயிறு–கயிறும்.

காண்டகு மென்மேரூட் கணிகைவா யின்சோல்லும்,
தூண்டிலி னுட்பொதிந்த தேரையும்,—மாண்டசீர்க்
காழ்த்த பகைவர் வணக்கமும், இம்மூன்றும்
ஆழ்ச்சிப் படுக்கு மளறு. 24

(ப–ரை.) காண்தகு–காணத்தகுந்த, மெல் தோள்–மென்மையாகிய தோள்களையுடைய, கணிகை–வேசியினுடைய, வாய்–வாயாற் பேசும், இன்சொல்லும்–(செவிக்கு) இனிமையாகிய சொல்லும்; தூண்டிலினுள்–தூண்டிலில், பொதிந்த–(இரும்பைத்) தோன்றுமல் மறைத்த, தேரையும்–தவளையும்; காழ்த்த–வைரங்கொண்ட, பகைவர்–பகையையுடையாரது, மாண்ட–மாட்சிமைப்பட்ட, சீர் – சிறப்பையுடைய, வணக்கமும் – பணிவும்; இம்மூன்றும்–ஆகிய இம்மூன்றும், ஆழ்ச்சிப்படுக்கும்–(தம்மை விரும்பினவர்க்குப் பின்னே) அடியில் சேர்க்கும், அளறு–நரகம்போலாம்.

செருக்கிலை வாழுஞ் சிறியவனும், வஞ்சத்தால்
பல்பொருள் கொள்ளும் பரத்தையும்,–நல்லவர்க்கு
வைத்த வறப்புறங் கொன்றனும், இம்மூவர்
கைத்துண்ணர் கற்றறிந் தார். 25

(ப–ரை.) செருக்கிலை வாழும்–(பெரியோரை மதியாமல்) இறுமாப்போடுவாழ்கின்ற, சிறியவனும்–அறிவிலானும்; வஞ்சத்தால்–வஞ்சனையினால், பல்பொருள்–பலவகைப்பொருளையும், கொள்ளும்–(கவர்ந்து)கொள்கின்ற, பரத்தையும்–வேசியும்; நல்லவர்க்கு–துறவறத்தாருக்கு, வைத்த–அமைத்த, அறப்புறம்–அறச்சாலையை, கொன்ற

னும்–அழித்தவனும்; இம்மூவர்–ஆகிய இம்மூவருடைய, கைத்து–கையிலுள்ள பொருளே, உண்ணூர்–புசியார், கற்று–(அறநூலைக்) கற்று, அறிந்தார்–(அதன்பொருளே உள்ளபடி) அறிந்தவர்.

ஒல்வ தறியும் விருந்தினனும், ஆருயிரைக்
கொல்வ திடைநீக்கி வாழ்வானும்,—வல்லிதின்
சீல மினிதுடைய வாசானும், இம்மூவர்
ஞால மெனப்படு வார். 26

(ப–ரை.) ஒல்வது–(தான் சென்ற இல்வாழ்பவனுல் தனக்குச்) செய்யக்கூடியதை, அறியும்–அறியவல்ல, விருந்தினனும்–அதிதியும்; ஆருயிரை–அருமையாகிய ஓருயிரை, கொல்வது–(ஒருவன்) கொல்லுந்தொழிலை, இடைநீக்கி–(கொல்வோனுக்கும் கொல்லப்படுவதற்கும்) நடுவே (சென்று) விலக்கி, வாழ்வானும்–வாழ்பவனும்; வல்லிதின்–(மனத்தினது) உறுதியினுல், இனிது சீலம்–உயிர்க்கு) நன்மையைத்தருவதாகிய ஒழுக்கத்தை, உடைய ஆசானும்–உடைய ஆசிரியனும், இம் மூவர்–ஆகிய இம்மூவரும், ஞாலம் எனப்படுவார்–உயர்ந்தோரென்று சிறப்பித்துச் சொல்லப்படுவார்.

உண்பொழுது நீராடி யுண்டலும், என்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலும்,—தோல்வற்றிச்
சாயினுஞ் சான்றாண்மை குன்றாமை, இம்மூன்றும்
தூஉய மென்பார் தொழில். 27

(ப–ரை.) உண்பொழுது – உண்ணுதற்குரிய காலத்தில், நீர் ஆடி–நீரில் ஸ்நானஞ்செய்து, உண்டலும்–பின் உண்ணுதலும்; என்பெறினும்– (சாட்சியாகும்போது) பெரும்பயனைப் பெறுவதா யிருப்பினும், பால் பற்றி–ஒரு பட்சத்தைச் சார்ந்து, சொல்லா–(பொய்ச் சாட்சி) சொல்லாமல், விடுதலும்–விடைகொடுத்தலும்; தோல் வற்றி–(உணவின்மையால்) உடல் இளைத்து, சாயினும்–அழிவதாயிருப்பினும், சான்று ஆண்மை–(பலநற்குணங்களாலும்) நிறைந்து (அவற்றை) ஆளுதல், குன்றாமை–குறையாமையும்; இம்மூன்றும், தூயம்–(மெய்ம் மொழி மனங்களினுல்) குற்றமின்மை உடையோம், என்பார் தொழில்–என்று கருதுவோரது தொழில்களாம்.

வெல்வது வேண்டி வெகுண்டாரைக்கு நோன்பிலியும்,
இல்லது காமுற் றிருப்பானும்,—கல்வி
செவிக்குற்றம் பார்த்திருப் பானும், இம் மூவர்
உமிக்குத்திக் கைவருந்து வார். 28

(ப–ரை.) வெல்வது வேண்டி–சொல்வெற்றியை விரும்பி, வெகுண்டு–(உண்மைப்பொருளைக் கூறுவோரைக்) கோபித்து, உரைக்கும்–(கடுஞ்சொல்லைச்) சொல்லுகின்ற, நோன்பிலியும்–(தவமில்லானும்) தீயோனும்; இல்லது–(தன்னிடத்து) இல்லாத பொருளை, காமுற்று–விருப்பங்கொண்டு, இருப்பானும்–(அது கிடையாமையால்) வருந்தியிருப்பவனும்; கல்வி–(கற்றோன் எடுத்துக் கூறும்) கல்விப்பொருளில், செவி–தன் செவியினால், குற்றம் பார்த்த–குற்றத்தை ஆராய்ந்து, இருப்பானும்–(பயனைவிட்டு) இருப்பவனும், இம்மூவர்–ஆகிய இம்மூவரும், உமி குத்தி–உமியைக்குத்தி, கைவருந்துவார்–கைவருந்துவோரை ஒப்பர்.

பெண்விழைந்து பின்செலினுந் தன்செலவிற் குன்றுமை;
கண்விழைந்து கையுறினுங் காதல் பொருட்கின்மை;
மண்விழைந்து வாழ்நாண் மதியாமை; இம்மூன்றும்
நுண்விழைந்த நூலவர் நோக்கு. 29

(ப–ரை.) பெண்–மாதர்கள், விழைந்து–ஆசைகொண்டு, பின் செலினும்–தன் பின் தொடர்ந்தாலும், தன் செலவின்–தன்னடையினின்றும், குன்றுமை–தவறுமையும்; கண் விழைந்து–தன்னிடத்தை விரும்பி, கை உறினும்–தன் கையிற்சேர்ந்தாலும், பொருட்கு–அப்பொருளின்மேல், காதல் இன்மை–ஆசையில்லாதிருத்தலும்; மண் விழைந்து –(மனைமுதலிய) நிலத்தை விரும்பி, வாழ்நாள்–(அறப்பயனை அடையாமல்) வாழ்கின்றகாலத்தை, மதியாமை–(நல்லதென) எண்ணுமையும்; இம்மூன்றும்–ஆகிய இம்மூன்றும், நுண் நூல்–நுட்பமாகியபொருள்களை யுணர்த்தும் நூல்களை, விழைந்தவர்–விரும்பிக் கற்றுணர்ந்தவரது, நோக்கு–கருத்தாம்.

தன்னச்சிச் சென்றுரை யெள்ளா வொருவனும்,
மன்னிய செல்வத்துப் பொச்சாப்பு நீத்தானும்,
என்று மழுக்கா றிகந்தானும், இம்மூவர்
நின்ற புகழுடை யார். 30

(ப–ரை.) தன் நச்சி–தன்னை விரும்பி, சென்றுரை–அடைந்தவரை, எள்ளா ஒருவனும்–அவமதியாத ஒருவனும்; மன்னிய செல்வத்து–மிகுந்தசெல்வம் வந்தகாலத்தில், பொச்சாப்பு–(பழைய நட்பு முதலியவற்றை) மறத்தலை, நீத்தானும்–நீக்கினவனும்; என்றும்–பிறரிடத்துப் பகைமையுண்டாகிய காலத்திலும், அழுக்காறு–அவரது செல்வங்கண்ட விடத்துப் பொறுமை கொள்ளுதலை இகந்தானும்–

நீங்கினவனும்; இம்மூவர்–ஆகிய இம்மூவரும், நின்ற புகழ் உடை யார்–அழியாப் புகழையுடையார்.

பல்லவையு ணல்லவை கற்றலும், பாத்துண்டாங்
கில்லற முட்டா தியற்றலும்,—வல்லிதின்
தாளி னெருபொரு ளாக்கலும், இம்மூன்றும்
கேள்வியு ளெல்லாந் தலை. 31

(ப–ரை.) பல்லவையுள்–பலநூல்களிலும், நல்லவை – நல்லநூற் பொருள்களை, கற்றலும்–கற்றுணர்தலும்; பாத்து–(பிரமசாரி முத லிய பதின்மர்க்குப்) பகுத்துக்கொடுத்து, உண்டு–தானுமுண்டு, ஆங்கு–அந்நிலையில், இல் அறம்–இல்லாளோடு கூடிச்செய்யும் அறமானது, முட்டாது–குறைவுபடில்லாமல், இயற்றலும்–செய்தலும்; வல்லி தின்–ஊக்கத்தோடு, தாளின் – முயற்சியினால், ஒருபொருள் – செய் தற்கரிய காரியத்தை, ஆக்கலும்–செய்துமுடித்தலும்; இம்மூன்றும்– இந்தமூன்றும், கேள்வியுள் எல்லாம் – கல்விகளெல்லாவற்றினும், தலை–சிறந்த கல்விகளாம்.

நுண்மொழி நோக்கிப் பொருள்கொளலும், நூற்கேலா
வேண்மொழி வேண்டினுஞ் சொல்லாமை,—நன்மொழியைச்
சிற்றின மல்லார்கட் சொல்லலும், இம்மூன்றும்
கற்றறிந்தார் பூண்ட கடன். 32

(ப–ரை.) நுண் மொழி–நுட்பமாகியபொருளை யுணர்த்துஞ் சொற் களை, நோக்கி–(நூல்களில்) ஆராய்ந்து, பொருள் கொளலும்–(அவற் றின்) பொருள்களை (உள்ளபடி) உணர்ந்துகொள்ளுதலும்; நூற்கு ஏலா – (அறிவுடையோரது) எண்ணத்துக்கேற்காத, வெள்மொழி வெளிற்றுப்பொருளுள்ள மொழிகளை, வேண்டினும்–(ஒருவர் கேட்க) விரும்பினும், சொல்லாமை–சொல்லாதொழிதலும், நல் மொழியை– (உயிர்க்கு) நன்மைதரும் பொருளமைந்த சொற்களை, சிற்றினம் அல் லார்கண்–சிறிய இனத்தாரல்லாத பெரியாரிடத்து, சொல்லலும்– சொல்லுதலும்; இம்மூன்றும்–இந்தமூன்றும், கற்று அறிந்தார்–(நூல் களைக்) கற்று (அவற்றின்பொருளை) அறிந்தவர், பூண்ட – மேற் கொண்ட, கடன்–கடனும்.

கோலஞ்சி வாழுங் குடியும், குடிதழீஇ
ஆலம்வீழ் போலு மமைச்சனும்,—வேலின்
கடைமணி போற்றிண்ணியான் காப்பும், இம் மூன்றும்
படைவேந்தன் பற்று விடல். 33

(ப–ரை.) கோல்–(தன்) அதிகாரத்துக்கு, அஞ்சி–பயந்து, வாழும்–(கீழ்ப்படிந்து) வாழ்கின்ற, குடியும்–குடிகளும்; குடிதழீஇ–அக்குடிகளை ஆதரித்து, ஆலம் வீழ்போலும் – (அரசனை) ஆலம் விழுதைப்போலத் தாங்கவல்ல, அமைச்சனும் – மந்திரியும்; வேலின்கடை – வேலினிடத்துள்ள, மணிபோல் – மணியைப்போல, திண்ணியான்–(போரில்) உறுதியையுடைய படைத்தலைவனது, காப்பும்–காவலும்; இம்மூன்றும்–ஆகிய இம்மூன்றும், படைவேந்தன்–சேனையின் மிகுதியையுடைய அரசன், பற்று விடல்–அன்பைச்செல்ல விடும் பொருள்களாம்.

மூன்று கடன்கழித்த பார்ப்பானும், ஓர்ந்து
முறைநிலை கோடா வரசும்,—சிறைநின்
றலவலை யில்லாக் குடியும்,இம் மூவர்
உல்க மெனப்படு வார். 34

(ப–ரை.) மூன்று கடன்–(தேவர் முனிவர் பிதிரர் ஆகிய) மூவருக்குஞ் செய்யும் கடன்களை, கழித்த–செய்துமுடித்த, பார்ப்பானும்–அந்தணனும்; ஓர்ந்து–(அறநூலை) உணர்ந்து, முறை நிலை–நீதியில்நிற்றல், கோடா அரசும்–வழுவாத அரசனும்; சிறைநின்று–(அவ்வரசனது) ஆணையின் கீழ்நின்று, அலவலை–(அவனுணையைக்குறித்துக்) கவலை கொள்ளுதலை, இல்லா–உடையதாயிராத, குடியும்–குடியும்; இம்மூவர்–ஆகிய இம்மூவரும், உலகம் எனப்படுவார்–உயர்ந்தோரென்று சொல்லப்படுவர்.

முந்நீர்த் திரையி னெழுந்தியங்கா மேதையும்,
நுண்ணூற் பெருங்கேள்வி நூற்கரை கண்டானும்,
மைந்நீர்மை யின்றி மயலறுப்பான், இம்மூவர்
மெய்ந்நீர்மை மேனிற் பவர். 35

(ப–ரை.) முந்நீர் – சமுத்திரத்தினது, திரையின் – அலைபோல, எழுந்து–(தன்மனம்) எழுந்து, இயங்கா–அலைதலில்லாத, மேதையும்–அறிவுடையவனும்; நுண் நூல்–நுட்பமாகிய சிந்தனையிலுலும், பெருகேள்வி–மிகுதியாகிய கேள்வியிலுலும், நூல் கரை–நூல்களினது முடிவை, கண்டானும்–(ஐயம் திரிபு) இல்லாமல் கண்டவனும்; மைந்நீர்மை–(காமம், வெகுளி, மயக்கமாகிய) குற்றத்தன்மை, இன்றி–(தன்னிடத்து) உண்டாகாதபடி, மயல் அறுப்பான்–மனக்கலக்கத்தை ஒழித்தவனும், இம்மூவர்–ஆகிய இம்மூவரும், மெய்ந்நீர்மை–அழிவின்மையாகிய தன்மையையுடைய, மேல்–முத்தியுலகத்தில், நிற்பவர்–நிலைத்துவாழ்பவர்.

ஊனுண் டுயிர்கட் கருளுடையே மென்பானும்,
தானுடன்பா டின்றி வினையாக்கு மென்பானும்,
காமுறு வேள்வியிற் கொல்வானும், இம்மூவர்
தாமறிவர் தாங்கண்ட வாறு. 36

(ப–ரை.) ஊன்–(வேற்றுருயிரினது) உடம்பை, உண்டு–(தன்னுடலைப் பெருக்கலுக்குத்) தின்று, உயிர்கட்கு–உயிர்களிடத்தில், அருள் உடையேம்–கருணையுடையோம், என்பானும்–என்று கருதுபவனும்; தான் உடன்பாடு–(பொருளுக்காகச் செய்யும் முயற்சியில்) தான் உடன்படுதல், இன்றி–இல்லாமலிருந்து, வினை–முன்னைவினையானது, ஆக்கும்–(அப்பொருளை) ஊட்டும், என்பானும்–என்று கருதியிருப்பவனும்; காமுறு–(ஒரு பயனைப் பெறவேண்டிச் செய்ய) விரும்புகின்ற, வேள்வியில்-யாகத்தில், கொல்வானும்–(ஒருயிரைக்) கொலைசெய்பவனும்; இம்மூவர்–(ஆகிய) இம்மூவரும், தாம் கண்ட ஆறு–(தம்புல்லறிவால்) தாங்களறிந்தபடியே, தாம் அறிவர்–தாம் அறிந்தவராவார்.

குறளாயு ணட்பளவு தோன்றும்; உறலினிய
சால்பினிற் றோன்றுங் குடிமையும்;-பால்போலும்
தூய்மையுட் டோன்றும் பிரமாணம்; இம்மூன்றும்
வாய்மை யுடையார் வழக்கு. 37

(ப–ரை.) குறளாயுள்–(நட்பினரிருவரைப் பிரிக்கும்படி ஒருவன் சொல்லும்) கோட்சொல்லில், நட்பு அளவு–(அக்கோளைக் கேட்டோனது) நட்பினது அளவு, தோன்றும்–(இவ்வளவினதென) விளங்கும்; உறல் இனிய–அடைதற்கு இனிமையாயுள்ள, சால்பினின்–(நற்குண நற்செய்கைகளினது) நிறைவில், குடிமை–உயர்குடிப்பிறப்பின் தன்மை, தோன்றும்–விளங்கும்; பால்போலும்–பாலை ஒக்கும், தூய்மையுள்–(மனம்) தூயதன்மையில், பிரமாணம்–(நிலையினது) அளவு, தோன்றும்–விளங்கும்; இம்மூன்றும்–இந்தமூன்றும், வாய்மை உடையார் வழக்கு–உண்மைகூறும் பெரியோரது நெறியாம்.

தன்னே வியந்து தருக்கலும், தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்,—முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையும், இம்மூன்றும்
செல்வ முடைக்கும் படை. 38

(ப–ரை.) தன்னேவியந்து–(ஒருவன்) தன்னேத் (தானே) நன்கு மதித்து, தருக்கலும் – கர்வம் கொள்ளுதலும், தாழ்வு இன்றி – தணிதலில்லாமல், கொன்னே–பயனின்றி, வெகுளி பெருக்கலும்–கோபத்தைப் பெருகச்செய்தலும், முன்னிய–முன்னுள்ள, (தான் கண்ட) பல்பொருள்–பலபொருள்களேயும், வெஃகும்–வெளவக்கருதுகின்ற, சிறுமையும்–சிறுமைத்தன்மையும், இம்மூன்றும்–இந்தமூன்றும், செல்வம் – (அவனது) செல்வத்தை, உடைக்கும் – அழிக்கவல்ல, படை–ஆயுதங்களாம்.

புலமயக்கம் வேண்டிப் பொருட்பெண்டிர் நட்டல்;
கலமயக்கங் கள்ளுண்டு வாழ்தல்;—சொலமுனிந்து
பொய்ம்மயக்கஞ் சூதின்கட் டங்கல்; இம்மூன்றும்
நன்மையி லாளர் தொழில். 39

(ப–ரை.) புல மயக்கம்–இழிதன்மையோடு கூடியதாவது, பொருள் பெண்டிர்–(கொடுப்பவரை விரும்பாமல்) பொருளையே விரும்புகின்ற வேசியரை, வேண்டி நட்டல்–விரும்பிச் சினேகித்தலாம்; கலம் மயக்கம்–எச்சிற் பாத்திரத்தோடு கலத்தலாவது, கள் உண்டு வாழ்தல்–கள்ளையுண்டு கெடுதலாம்; சொல்லை முனிந்து–உண்மைச்சொல்லை வெறுத்து, பொய்ம்மயக்கம்–பொய்யோடு கலத்தலாவது, சூதின்கண் தங்கல்–சூதாட்டத்தில் இருத்தலாம்; இம்மூன்றும்–இம்மூத்தொழிலும், நன்மை–நல்லொழுக்கத்தினது, இல் ஆளர்–இன்மையை யாளுதலுடையாரது, தொழில்–தொழில்களாம்.

வெகுளி நுணுக்கும் விறலும், மகளிர்கட்
கொத்த் வொழுக்க முடைமையும்,—பாத்துண்ணும்
நல்லறி வாண்மை தலைப்படலும், இம்மூன்றும்
தொல்லறி வாளர் தொழில் 40

(ப–ரை.) வெகுளி –(தம்மிடத்தெழுந்த்) கோபத்தை, நுணுக்கும்–சுருங்கச்செய்யும், விறலும்–ஆற்றலும்; மகளிர்கட்கு–மனேவியர்க்கு, ஒத்த–இசைந்த, ஒழுக்கம்–நடையை, உடைமையும்–உடையாராயிருத்தலும்; பாத்து உண்ணும்–(பிரமசாரிமுதலியவர்க்குப் பகுத்து (த்தீர்மும்).உண்ணுதற்குக் காரணமாகிய, நல் அறிவு ஆண்மை–நல்லறிவை ஆளுந்தன்மையில், தலைப்படலும்–முதன்மையாதலும்; இம்மூன்றும்–ஆகிய இம்மூன்றும், தொல் அறிவு ஆளர்–பழமையாகிய நூலறிவையாளுதலுடையாரது, தொழில்–தொழில்களாம்.

அலந்தார்க்கொன் றீந்த புகழும், துளங்கினும்
தன்குடிமை குன்றுத் தகைமையும்,—அன்போடி
நாளை நட்டார்ப் பெருக்கலும், இம்மூன்றும்
கேள்வியு ளெல்லாந் தலை. 41

(ப–ரை.) அலந்தார்க்கு–(வறுமையால்) மெலிந்தவர்களுக்கு, ஒன்று ஈந்த புகழும்–(அவர் விரும்பியதாகிய) ஒருபொருளே ஈந்ததலுலுண்டா கிய புகழும்; துளங்கினும்–(வறுமை முதலியவற்றால்) தளர்ந்தவிடத் தும், தன் குடிமை–தன் குடிப்பிறப்பினுயர்வு; குன்று–குறைதலில் லாத, தகைமையும்–பெருமையாகிய ஒழுக்கமும்; நாள்நாளும்–ஒரு நாளுக்கு ஒருநாள், அன்புஒடி–அன்பு மிகாநின்று, நட்டார் பெருக்க லும்–நட்புச்செய்தவரைத் (தன்னேடொக்கப்) பெருகச்செய்தலும், இம்மூன்றும்–, கேள்வியுள் எல்லாம்–கேட்கப்படும் அறங்களெல்லா வற்றிலும், தலை–சிறந்தனவாம்.

கழகத்தால் வந்த பொருள்கா முறுமை;
பழகினும் பார்ப்பாரைத் தீப்போல்—ஒழுகல்;
உழவின்கட் காமுற்று வாழ்தல்: இம்மூன்றும்
அழகென்ப வேளாண் குடிக்கு. 42

(ப–ரை.) கழகத்தால் வந்த–சூதாட்டத்தால் கிடைத்த, பொருள் காமுறுமை–பொருளே விரும்பாமையும்; பழகினும்–(பலநாள்) பழ கினவராயினும், பார்ப்பாரை–பார்ப்பாருக்கு, தீப்போல்–தீக்கு அஞ்சி நடப்பதுபோல, ஒழுகல்–அஞ்சி நடத்தலும்; உழவின்கண்–உழுது பயிர்செய்தலில், காமுற்று–விருப்பம் வைத்து, வாழ்தல்–உயிர்வாழ்த லும்; இம்மூன்றும்–ஆகிய இம்மூன்றும், வேளாண் குடிக்கு–வே ளாண்மையாகிய குடியிற் பிறந்தோர்க்கு, அழகு என்ப–அழகென்று (அறிவுடையோர்) கூறுவர்.

வாயி னடங்குத லுப்புறவாம்; மாசற்ற
செய்கை யடங்குத றிப்பியமாம்;—பொய்யின்றி
நெஞ்ச மடங்குதல் வீடாகும்; இம்மூன்றும்
வஞ்சத்திற் றீர்ந்த பொருள். 43

(ப–ரை.) வாயின்–வாக்கு, அடங்குதல்–(தீயநெறியில் செல் லாமல்) அடங்குதலால், துப்புரவு ஆம்–(இம்மையில்) அநுபவிக்கப் படும் செல்வமுளதாகும்; செய்கை–(உடலின்) செய்கை, அடங்கு தல்–அடங்குதலால், மாசு அற்ற–குற்றமற்ற, திப்பியம் ஆம்–(மறுமை

யில்) தெய்வப்பிறப்புளதாகும்; பொய் இன்றி—உண்மையாக, நெஞ் சம்—மனம், அடங்குதல்—அடங்குதலால், வீடு ஆகும்—முத்தியுளதா கும்; இம்மூன்றும்—ஆகிய இம்மூன்றடக்கமும், வஞ்சத்தின்—பொய்யி னின்றும், தீர்ந்த—நீங்கிய, பொருள்—பொருள்களாம்.

விருந்தின்றி யுண்ட பகலும், மனமமைய
இல்லம் உறங்காத கங்குலும்,—இல்லார்க்கொன்
றீயா தொழிந்தகன்ற காலையும், இம்மூன்றும்
நோயே யுரணுடை யார்க்கு. 44

(ப—ரை.) விருந்து இன்றி—விருந்தினரை இல்லாமல், உண்ட பகலும்—(தனித்து) உண்ணக்கழிந்த பகற்பொழுதும்; மனம் அமைய—மனக்கலக்கமின்றி, இல்லம்—வீட்டில், உறங்காத—தூங்காத, கங்கு லும்—இராக்காலமும், இல்லார்க்கு—வறியவர்க்கு, ஒன்று ஈயாது—(அவர் வேண்டியதாகிய) ஒருபொருளைக் கொடாமையினாலே, ஒழிந்து அகன்ற—கழிந்த, காலையும்—காலைப்பொழுதும்; இம்மூன்றும்—ஆகிய இம்மூன்றுபொழுதும், உரன் உடையார்க்கு—அறிவையுடையார்க்கு, நோயே—நோயைத்தருவனவே.

ஆற்றலே யாற்றென் றலைப்பானும், அன்பின்றி
ஏற்றார்க் கியைவ கரப்பானும்,—கூற்றம்
வரவுண்மை சிந்தியா தானும், இம்மூவர்
நிரயத்துச் சென்றுவீழ் வார். 45

(ப—ரை.) ஆற்றலே—(தான் குறித்த தொழிலைச்) செய்ய வலியில் லாத ஏவலாளனே, ஆற்று என்று—செய்யாயென்று ஏவி, அலைப்பா னும்—வருத்துகின்ற தலைவனும்; ஏற்றார்க்கு—(தன்னிடத்து வந்து) இரந்தவர்க்கு, இயைவ—(கொடுப்பதற்கு) இசையும் பொருள்களை, அன்பு இன்றி—அன்பில்லாதவனாகி, கரப்பானும்—ஒளித்து இல்லை யென்னுஞ் செல்வனும்; கூற்றம்—யமன், வரவு உண்மை—வருதலினது உண்மையை, சிந்தியாதானும்—நினையாமல் தீமைசெய்பவனும்; இம் மூவர்—ஆகிய இம்மூவரும், சென்று—(உடலைவிட்டு) நீங்கி, நிரயத்து வீழ்வார்—நரகத்தில் வீழ்பவர்.

காணாய்மை யில்லாக் கலிமாவும் காழ்கடிந்து
மேலாய்மை யில்லாத வெல்களிறும்,—சீறிக்
கறுவி வெகுண்டிரைப்பான் பள்ளி, இம் மூன்றும்
குறுகா றறிவுடை யார். 46

(ப–ரை.) கால்–ஐவகை நடையும், தூய்மை–தூயது ஆகும் தன்மை (குற்றமின்மை), இல்லா–இல்லாத, கலி(ன)மாவும்–கடிவாள முடைய குதிரையும்; காழ்–கட்டுத்தறியை, கடிந்து–முறித்து, மேல் தூய்மை–(வீரனிருப்பதற்கேற்ற) மேலிடந் தூயதாந்தன்மை, இல்லாத–உடையதாயிராத, வெல்களிறும்–(போரை) வெல்லுதற்குரிய யானையும்; கறுவி–(மாணாக்கன்மேல்) வைரமடைந்து, சீறி–சீற்றங்கொண்டு, வெகுண்டு உரைப்பான்–கோபித்துப் (பாடம்) சொல்லுவோனுடைய, பள்ளி–கல்வி பயிலிடமும்; இம்மூன்றும்–ஆகிய இம்மூன்றையும், அறிவு உடையார்–(அவற்றின் பயனின்மையை) உணர்தலுடையார், குறுகார்–சேரார்.

சில்சொற் பெருந்தோண் மகளிரும், பல்வகையும்
தாளினுற் றந்த விழுநிதியும், நாடோறும்
நாத்தளிர்ப்ப வாக்கிய வுண்டியும், இம்மூன்றும்
காப்பிகழ லாகாப் பொருள். 47

(ப–ரை.) சில் சொல்–மழலைச்சொல்லையும், பெரும் தோள்–பெருமையாகிய தோள்களையுமுடைய, மகளிரும்–(அழகிய) மங்கையரும்; பல்வகையும்–பலவகைகளிலும், தாளினுல்–(செய்த) முயற்சியால், தந்த–தேடிய, விழுநிதியும்–சிறந்த பொருளும்; நாள்தோறும்–(பின் நினைக்கும்) நாள்களிலெல்லாம், நாத்தளிர்ப்ப–நா நீரும்பும்படி, ஆக்கிய–சமைத்த, உண்டியும்–உணவும்; இம்மூன்றும்–ஆகிய இம்மூன்றுபொருளும், காப்பு–காத்தலை, இகழல் ஆகா–அவமதித்தலில்லாத, பொருள்–பொருள்களாம்.

வைததனை யின்சொல்லாக் கொள்வானும், நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானும்,—ஊறிய
கைப்பதனைக் கட்டியென் றுண்பானும், இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார். 48

(ப–ரை.) வைததனை–(ஒருவனுல்) வையப்பட்ட நிந்தைமொழியை, இன் சொல் ஆ–இனிமையாகிய சொல்லைக் கொள்ளுதல்போல, கொள்வானும்–கொள்ளுகின்றவனும்; கூழை–(கிடைத்த) கூழை, நெய் பெய்த–நெய்யை நிரம்பவார்த்த, சோறு என்று–சோறு இது ஆமென்று, மதிப்பானும்–நன்குமதித்து உண்பானும்; கைப்பதனை–கைக்கின்ற பொருளை, கட்டி என்று–வெல்லம் இதுவாமென்று, ஊறிய–(தன்வாயில்) ஊறும்படி, உண்பானும்–உண்கின்றவனும்; இம்மூவர்–ஆகிய இம்மூவரும், மெய்ப்பொருள்–மெய்ம்மையாகிய பரம்பொருளை, கண்டு வாழ்வார்–உணர்ந்து வாழ்பவர்.

ஏவாது மாற்று மிளங்கிளையும், காவாது
வைதெள்ளிச் சொல்லுந் தலைமகனும்.—போய்தெள்ளி
அம்மனை தேய்க்கு மனையாளும், இம்மூவர்
இம்மைக் குறுதியில் லார். 49

(ப—ரை.) ஏவ—(தாய்தந்தையர்) ஏவிய, ஆதும்—எதையும் (எவ் வளவு சிறிய காரியத்தையும்), மாற்றும்—(தன்னுல் ஆகாதென) மறுக் கின்ற, இளங்கிளையும்—புத்திரனும்; காவாது—(மனைவியைப்) பாதுகா த்த லில்லாமல், எள்ளி—அவமதித்து, வைது சொல்லும்—வசைசொல் லுகின்ற (நிந்தித்துப் பேசுகின்ற), தலைமகனும்—கணவனும்; பொய்—பொய்ம்மொழியை, தெள்ளி—ஆராய்ந்து சொல்லி, அம்மனை—தான் வாழ்கின்ற வீட்டின் செல்வத்தை; தேய்க்கும்—(பயனின்றி) அழிக் கின்ற, மனையாளும்—இல்லாளும்; இம்மூவர்—ஆகிய இம்மூவரும், இம்மைக்கு—இப்பிறப்பிற்கு, உறுதி இல்லார்—(தாய்தந்தையர் முதலிய வர்க்குத்) துணையாதலிலர்.

கொள்பொருள் வெஃகிக் குடியலைக்கும் வேந்தனும்,
உள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரும்,
இல்லிருந் தெல்லை கடப்பாளும், இம்மூவர்
வல்லே மழையருக்குங் கோள். 50

(ப—ரை.) கொள் பொருள்—(தான்) கொள்ளுதற்குரிய பொருளை, வெஃகி—அடையக்கருதி, குடி—(அதனைக் கட்ட வலியில்லாத) குடி களை, அலைக்கும்—வருத்துகின்ற, வேந்தனும்—அரசனும்; உள் பொருள் சொல்லா—(சாட்சியாகும்போது) உண்மைக் காரியத்தைச் சொல்லா மல், சலம் மொழி—பொய்க்காரியத்தைச் சொல்லுகின்ற, மாந்தரும்—மனிதரும்; இல் இருந்து—(ஒருவனுக்கு மனையாளாய்) வீட்டிலிருந்து, எல்லை—(அவனது சொல் வீடு என்னும் இரண்டினது) எல்லையை, கடப்பாளும்—கடந்து நடப்பவளும்; இம்மூவர்—ஆகிய இம்மூவரும், வல்லே—விரைந்து, மழை அருக்கும்—மழையைக் குறைக்கின்ற, கோள்—கிரகங்களாவர்.

தூர்ந்தொழுகிக் கண்ணுந் துணைக நிணைகளே;
சார்ந்தொழுகிக் கண்ணுஞ் சலவர் சலவரே;
ஈர்ந்தகல் லின்னுக் கயவர்: இவர்மூவர்
தேர்ந்தக்காற் ரேன்றும் பொருள். 51

(ப—ரை.) தூர்ந்து—(பொருள் வருவாய்) அடைபட்டு (இல்லாமல்), ஒழுகிக்கண்ணும்—வாழுமிடத்தும், துணைகள்—உறவாவோர், துணை

களே—உறவினரேயாவர்; சார்ந்து—(கருத்துக்கு) இணங்கி, ஒழுகிக்கண் ணும்—நடந்தவிடத்தும், சலவர்—பகைவர், சலவரே—பகைவரேயாவர்; ஈர்ந்த—பிளக்கப்பட்ட, கல்—கல்லே ஒப்பவர், இன்னா—துன்பந்தருங் குணமுள்ள, கயவர்—கீழ்மக்களேயாவர்; இவர்மூவர்—இவர்மூவரும், தேர்ந்தக்கால்—(அறிவுடையோர்) ஆராயுமிடத்து, தோன்றும் பொருள்—(தம் இயற்கை) வெளிப்படும் பொருள்களாவர்.

கண்ணுக் கணிகலங் கண்ணோட்டம்; காமுற்ற
பெண்ணுக் கணிகல நாணுடைமை;—நண்ணும்
மறுமைக் கணிகலங் கல்வி:இம் மூன்றும்
குறியுடையார் கண்ணே யுளவு. 52

(ப—ரை.) கண்ணுக்கு—கண்களுக்கு, அணி கலம்—அணிதற்குரிய அணியாவது, கண்ணோட்டம்—தாட்சணியம்; காமுற்ற—(கணவனால்) விரும்பப்பட்ட, பெண்ணுக்கு—குலமகளுக்கு, அணிகலம்—அணிதற் குரிய அணியாவது, நாண் உடைமை—நாணம் உடையளாயிருத்தல்; நண்ணும்—இனிவரும், மறுமைக்கு—மறுபிறப்பிற்கு, அணிகலம்—அணி தற்குரிய அணியாவது, கல்வி—கல்வியறிவாம்; இம்மூன்றும்—ஆகிய இம்மூன்றும், குறி உடையார்கண்ணே—ஆராயும் இயல்புடையாரிடத் தே, உள—உண்டு.

குருடன் மனையா ளழகும், இருடீரக்
கற்றறி வில்லான் கதழ்ந்துரையும்,—பற்றிய
பண்ணிற் றெரியாதான் யாழ்கேட்பும், இம்மூன்றும்
எண்ணிற் றெரியாப் பொருள். 53

(ப—ரை.) குருடன்—திருடனுடைய, மனையாள் அழகும்—மனைவி யினது அழகும்; இருள் தீர—பேதைமை நீங்கும்படி, கற்று—நூல் களைக் கற்று, அறிவு—(அவற்றின் பொருளை உள்ளபடி) அறிதல், இல்லான்—இல்லாதவன், கதழ்ந்து உரையும்—விரைந்து சொல்லுஞ் சொல்லும்; பற்றிய—(பாடற்றெழிலோடு) பொருந்திய, பண்ணின்—பண்களை, தெளியாதான்—அறியாதவன், யாழ் கேட்பும்—யாழினிசை யைக் கேட்டலும்; இம்மூன்றும்—ஆகிய இம்மூன்றும், எண்ணின்—ஆராயின், தெரியாப்பொருள்—(அம்மூவருக்கும் முறையே) தெரியாத பொருள்களாம்.

தன்பயந் தூக்காரைச் சார்தலும், தாம்பயவா
நன்பயங் காய்வின்கட் கூறலும்,—பின்பயவாக்
குற்றம் பிறர்மே லுரைத்தலும், இம்மூன்றும்
தெற்றென வில்லார் தொழில். 54

(ப—ரை.) தன்பயம்—(தங்களுக்குவரும்பயனையே அன்றித்)தனக்கு வரும் பயனை, தூக்காரை—ஆராயாதவரை, சார்தலும்—(ஒருவன்) சேர்ந் திருத்தலும்; தாம் பயவா—தாம் பயன்படாதனவாகிய, நல் பயம் நன் மையாகிய பயனைத்தரு மொழிகளை, காய்வின்கண்—(ஒருவன்) கோபி க்குமிடத்து, கூறலும்—சொல்லுதலும்; பின் பயவா—பின்னே துன்பத் தைத்தரும், குற்றம்—குற்றத்தை, பிறர்மேல்—மற்றவர்மேல், உரைத்த லும்—சொல்லுதலும்; இம்மூன்றும்—ஆகிய இம்மூன்றும், தெற்றெனவு—(இன்னது இன்ன பயனைத் தருமென்பதைத்) தேறுதல், இல்லார் தொ ழில்—இல்லாதவருடைய செய்கையாம்.

அருமறை காவாத நட்பும், பெருமையை
வேண்டாது விட்டோழிந்த பெண்பாலும்,—யாண்டானுஞ்
செற்றங்கொண் டாடுஞ்சிறுதொழும்பும், இம்மூவர்
ஒற்றுரு ளெனப்படு வார். 55

(ப—ரை.) அருமறை—(பிறர்க்கு) வெளிப்படுத்தல் கூடாத இரக சியத்தை, காவாத—காக்காத, நட்பும்—நட்பாளனும்; பெருமையை—(தான் நாயகன் என்னும் இருவருடைய) பெருமையை, வேண்டாது—விரும்பிக்காவாமல், விட்டு—(அவனது குறைகளை) வெளிப்படுத்தி, ஒழிந்த—(அறத்தினின்றும்) நீங்கிய, பெண்பாலும்—பெண்ணும், யாண்டானும்—எங்காயினும், செற்றம் கொண்டு—(தன் தலைவன் மேல்) வைரங்கொண்டு, ஆடும்—(அவன்மேல்) குற்றங் கூறுகின்ற, சிறு தொழும்பும்—குற்றேவலாளனும், இம்மூவர்—ஆகிய இம்மூவரும், ஒற்றுள் எனப்படுவார்—ஒற்றர்களை ஒப்பரென்று சொல்லப்படுவார்.

மூந்தை யெழுத்தின் வரவு;(உ)ணர்ந்து பிற்பாடு
தந்தையுந் தாயும் வழிபட்டு—வந்த
ஒழுக்கம்; பெருநெறி சேர்தல்:இம் மூன்றும்
விழுப்ப நெறிதூரா வாறு. 56

(ப—ரை.) மூந்தை—இளமையில், எழுத்தின் வரவு—கல்வியறிவி னது வரவும்; உணர்ந்து—கல்வியறிவையடைந்து, பிற்பாடு—பின்பு, தந்தையும் தாயும்—தந்தையையும் தாயையும், வழிபட்டு வந்த—பூசித்து

வந்த, ஒழுக்கம்–ஒழுக்கமும்; பெருநெறி சேர்தல்–பெரியோரது வழியைச் சேர்தலும்; இம்மூன்றும்–ஆகிய இம்மூன்றும், விழுப்பநெறி–உயர்வாகிய முத்திவழியை, தூரா ஆறு–தூர்க்காதவிதமாம்.

கொட்டி யளந்தமையாப் பாடலும், தட்டித்துப்
பிச்சைபுக் குண்பான் பிளிற்றலும்,–துச்சிருந்தான்
ஆளுங் கலங்கா முறுதலும், இம்மூன்றும்
கேள்வியு ளின்ஞ தன. 57

(ப–ரை.) கொட்டி–தாளவோசையால், அளந்து–அளக்கப்பட்டு, அமையா–(அதனோடு) பொருந்தாமல், பாடலும்–பாடுதலும்; தட்டி–கைகொட்டி, துப்பிச்சை–சோற்றுப்பிச்சைக்கு, புக்கு–புகுந்து, உண்பான்–(வாங்கி) உண்ணும் வாழ்க்கையுடையவன், பிளிற்றலும்–(தான் சென்ற வீட்டில்) இரைதலும்; துச்சு இருந்தான் ஒதுக்குக்குடியிருந்தவன், ஆளும்–(அவ்வில்லத்தானால்) ஆளப்படும், கலம்–பாத்திரங்களை, காமுறுதலும்–(கண்டு) இச்சித்தலும்; இம்மூன்றும்–ஆகிய இம்மூன்றும், கேள்வியுள்–கேட்கப்படுபவைகளுள், இன்ஞதன–இனிமையாகாதவைகளாம்.

பழமையை நோக்கி யளித்தல்; கிழமையால்
கேளி ருவப்பத் தழுவுதல்;—கேளிராய்த்
துன்னிய சொல்லா லினந்திரட்டல்; இம்மூன்றும்
மன்னற் கிளையான் தொழில். 58

(ப–ரை.) பழமையை நோக்கி–(நட்பாளரது) பழையராகுந்தன்மையைப் பாராட்டி, அளித்தல்–(அவர்க்கு வேண்டுவனவற்றைக்) கொடுத்தலும்; கேளிர்–சுற்றத்தாரை, உவப்ப–மகிழும்படி, கிழமையால்–உரிமையினால், தழுவுதல்–அணைத்தலும்; கேளிர் ஆய்–உறவினராய், துன்னிய–சூழும்படி, சொல்லால்–இன்சொற்களால், இனம் திரட்டல்–நல்லினத்தைக் கூட்டுதலும்; இம்மூன்றும்–ஆகிய இம்மூன்றும், மன்னற்கு இளையான் தொழில்–அமைச்சனுடைய தொழில்களாம்.

கிளைஞர்க் குதவாதான் செல்வமும், பைங்கூழ்
வினைவின்கட் போற்ரு னுழவும்,—இளையனுய்க்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையும், இம்மூன்றும்
உள்ளன போலக் கெடும். 59

(ப–ரை.) கிளைஞர்க்கு–உறவினர்க்கு, உதவாதான்–உபகரியாதவனுடைய செல்வமும்–செல்வமும்; பைங்கூழ்–பசியபயிர், வினைவின்

கண்-விளைவுதருங்காலத்தில், போற்றுன்-(அதனைக்) காக்கும் இயல்பில் லாதவனுடைய, உழவும்–உழவுத்தொழிலும்; இளையன் ஆய்–அறி வில்லாஞகி, கள் உண்டு வாழ்வான்–மதுவையுண்டு வாழ்வானுடைய, குடிமையும்–குடிப்பிறப்பும்; இம்மூன்றும்–ஆகிய இம்மூன்றும், உள் ளன போல–உள்ளனபோலக் காணப்பட்டு, கெடும்–அழியும்.

பேஎய்ப் பிறப்பிற் பெரும்பசியும், பாஅய்
விலங்கின் பிறப்பின் வெருவும்,—புலந்தெரியா
மக்கட் பிறப்பி னிரப்பிடும்பை: இம்மூன்றுந்
துக்கப் பிறப்பாய் விடும். 60

(ப–ரை.) பேய்ப்பிறப்பின்–பேயினது பிறப்படைந்த உயிர்களில், பெரு பசியும்–மிக்கபசியும்; பாய்–பாயுமியல்புடைய, விலங்கின் பிறப் பின்–மிருகப்பிறப்படைந்த உயிர்களில், வெருவும்–அச்சமும்; புலம் தெரியர்–அறிவாகிய பொருளை உணராத, மக்கள் பிறப்பின்–மனிதப் பிறப்படைந்த உயிர்களில், நிரப்பு–வறுமையும், இடும்பை–துன்பந்தரு வனவாம்; இம்மூன்றும்–ஆதலால் இம்மூன்று பிறப்புயிர்களும், துக்கப் பிறப்பு ஆய்விடும்–துன்பமாகிய பிறப்புள்ள உயிர்களாய் முடியும்.

ஐயறிவுந் தம்மை யடைய வொழுகுதல்;
எய்துவ தெய்தாமை முற்காத்தல்;—வைகலும்
மாறேற்கு மன்னர் நிலையறிதல்: இம்மூன்றும்
சீரேற்ற பேரமைச்சர் கோள். 61

(ப–ரை.) ஐ அறிவும்–ஐம்பொறிகளின் அறிவுகளும், தம்மை அடைய–(தீயநெறியில் செல்லாமல்) தம்மிடத்து அடங்கிநிற்கும்படி, ஒழுகுதல்–(நல்வழியில்) நடக்குதலும்; எய்துவது–(அரசனை) அடை வதாகிய துன்பத்தை, எய்தாமை–அடையாதபடி, முன் காத்தல்–முன் அறிந்து தடுத்தலும்; வைகலும்–தினமும், மாறு–(தம்முடைய) பகை மையை, ஏற்கும்–ஏற்றுக்கொள்ளுதற்குரிய, மன்னர் நிலை–அரசரு டைய இருப்பை, அறிதல்–(ஒற்றர்களால்) அறிந்து அதற்குத் தக்க படி) செய்தலும்; இம்மூன்றும்–ஆகிய இம்மூன்றும், சீர் ஏற்ற–கீர்த் தியை மேற்கொண்ட, பேர் அமைச்சர் கோள்–பெருமையாகிய மந்தி ரிகளது துணிவுகளாம்.

நன்றிப் பயன்றூக்கா நாணிலியும், சான்றோர்முன்
மன்றிற் கொடும்பா டுரைப்பானும்,—நன்றின்றி
வைத்த வடைக்கலங் கொள்வானும் இம்மூவர்
எச்ச மிழந்துவாழ் வார். 62

(ப–ரை.) நன்றிப் பயன்–(தனக்கு ஒருவன் செய்த) உபகாரத்தினது பயனை, தூக்கா–அளந்தறியாத, நாண் இலியும்–நாணமில்லாதவனும்; மன்றில் – நியாயத்தலத்தில், சான்றோர் மூன்–(கல்வியறிவு கேள்விகளால்) நிறைந்தவர் முன்னே, கொடும் பாடு–பொய்ச்சொல்லை, உரைப்பானும் – சொல்லுகியல்புடையானும்; நன்று–நன்கு காக்குமிடம், இன்றி–இல்லாதவனுய், வைத்த–(ஒருவன் தேடி) வைத்த, அடைக்கலம்–அடைக்கலப்பொருளை, கொள்வானும்–(தனக்கு) உரியதாக்கிக் கொள்பவனும்; இம்மூவர் – ஆகிய இம்மூவரும், எச்சம் இழந்து–(தம்முடைய) மக்களை இழந்து, வாழ்வார் – வருந்தி உயிர்வாழ்பவர்.

நோவஞ்சா தாரோடு நட்பும், விருந்தஞ்சும்
ஈர்வளையை யில்லத் திருத்தலும்,—சீர்பயவாத்
தன்மையி லாள ரயலிருப்பும், இம்மூன்றும்
நன்மை பயத்த லில. 63

(ப–ரை.) நோ அஞ்சாதாரோடு – (தனக்கு மேல்வரும்) துன்பத்துக்கு அஞ்சி (அதன் காரணத்தைப்) பரிகரிக்காதவரிடத்து, நட்பும்–கொண்ட சினேகமும்; விருந்து–விருந்தினர்க்கு, அஞ்சும்–(உண்டிதர) அஞ்சுகின்ற, ஈர்வளையை–மனைவியை, இல்லத்து–மனையினிடத்தில், இருத்தலும்–இருக்கச்செய்தலும்; சீர் பயவாத் தன்மை – சிறப்பைத்தராத தன்மையையுடைய, இல் ஆளர் – இல்வாழ்வோருக்கு, அயல் இருப்பும்–அயலில் குடியிருத்தலும்; இம் மூன்றும்–ஆகிய இம்மூன்றும், நன்மை பயத்தல் இல–நன்மையைத் தருதலில்லன ஆம்.

நல்விருந் தோம்பலி னட்டாளாம்; வைகலும்
இல்புறஞ் செய்தலி னீன்றதாய்;—தொல்குடியின்
மக்கட் பெறலின் மனைக்கிழத்தி: இம்மூன்றும்
கற்புடையாள் பூண்ட கடன். 64

(ப–ரை.) நல் விருந்து–நன்மையாகிய விருந்தினரை, ஓம்பலின்–பாதுகாத்தலால், நட்டாள் ஆம்–(கணவனுக்கு) நட்பினளாம்; வைகலும்–தினமும், இல்–இல்லறத்தை, புறஞ்செய்தலின் – (வழுவாமல்) காத்தலால், ஈன்ற தாய் (ஆம்)–பெற்ற தாயாம்; தொல் குடியின்–முன் தொட்டுவந்த குடும்பத்துக்குரிய, மக்கள்–புத்திரரை, பெறலின்–பெறுதலால், மனைக்கிழத்தி (ஆம்)–மனையாளாம்; இம் மூன்றும்–(விருந்தோம்பல் முதலிய) இம்மூன்று செயலும், கற்பு உடையாள்–கற்பையுடைய பெண், பூண்ட கடன்–மேற்கொண்ட கடமைகளாம்.

அச்ச மலைகடலிற் ரோன்றலும், ஆர்வுற்ற
விட்டகல கில்லாத வேட்கையும்,—கட்டிய
மெய்ந்நிலை காணு வெகுளியும், இம்மூன்றும்
தந்நெய்யிற் ரும்பொரியு மாறு. 65

(ப—ரை.) அலை கடலின்—அலைகின்ற கடலைப்போல், அச்சம் தோன்றலும்—மாறிமாறிப் பெரும்பயம் (ஒருவர் மனத்தில்) பிறத்தலும்; ஆர்வு உற்ற—அனுபவித்தவைகளை, விட்டு அகலகில்லாத—விட்டு நீங்கமாட்டாத, வேட்கையும்—விருப்பமும்; கட்டிய—(அறிவுடையோரால்) யாக்கப்பட்ட செய்யுள்களினது, மெய்ந்நிலை—பொருளின் உண்மை நிலைமையை, காணு வெகுளியும்—அறியாதகோபமும்; இம்மூன்றும்—ஆகிய இம்மூன்றும், தம் நெய்யில்—(ஆடுமுதலானவை) தம்மிடத்துப் பிறந்த நெய்யில்; தாம் பொரியும் ஆறு—தாம்பொரிகின்ற விதம்போல (எவரிடத்துப் பிறந்தனவோ அவரைத் தம்மில் வேகச்செய்வனவாம்).

கொழுநனை யில்லாள் கலனும், வழிநிற்கும்
சிற்ருளில் லாதான்கைம் மோதிரமும்,—பற்றிய
கோல்கோடி வாழு மரசனும், இம்மூன்றும்
சால்போடு பட்ட தில. 66

(ப—ரை.) கொழுநனை—நாயகனை, இல்லாள்—இல்லாதவளது, கலனும்—ஆபரணமும்; வழி நிற்கும்—(தன் ஏவலின்) வழியில் நிற்கின்ற, சிறு ஆள்—சிற்ருளை, இல்லாதான்—இல்லாதவனுடைய, கைமோதிரமும்—கைவிரலிலணிந்த மோதிரமும்; பற்றிய—(தான்) மேற்கொண்ட, கோல் கோடி—ஆளும் முறைதப்ப, வாழும் அரசனும்—வாழ்கின்ற அரசனும், இம்மூன்றும்—ஆகிய இம்மூன்றும், சால்போடு—நிறைவோடு, பட்டது இல—பொருந்திய சிறப்பில்லன ஆம்.

எதிர்நிற்கும் பெண்ணும், இயல்பி ரோழும்பும்,
செயிர்நிற்குஞ் சுற்றமு மாகி—மயிர்நரைப்ப
மூந்தைப் பழவினையாய்த் தின்னும்: இவைமூன்றும்
நொந்தார் செயக்கிடந்த தில். 67

(ப—ரை.) எதிர் நிற்கும்—(தாம் கோபமாய்ப் பேசினால்) எதிர்த்து நிற்கும், பெண்ணும்—மனையாளும்; இயல்பு இல் தொழும்பும்—(தம்க்கு அடங்கி நடக்கும்) தன்மையில்லாத ஏவலாளும்; செயிர் நிற்கும்—(தம்மேல்) வைரம் ஒழியாத, சுற்றமும்—உறவினரும்; ஆகி—ஆகிநின்று,

முந்தை–முற்பிறப்பிற்செய்த, பழவினை–பழையவினை, ஆய்–முற்றுப் பெறும்படி, மயிர் நரைப்ப–முதுமைப் பருவம்வரையும், தின்னும்–மெலியச்செய்யும், இவை மூன்றும்–இவை மூன்றுக்கும், நொந்தார்–(இவற்றூல்) நொந்தவரால், செயக் கிடந்தது–செய்ய இருந்ததாகிய ஓர் பரிகாரம், இல்–இல்லை.

இல்லார்க்கொன் றீயு முடைமையும், இவ்வுலகில்
நில்லாமை யுள்ளு நெறிப்பாடும்,—எவ்வுயிர்க்கும்
துன்புறுவ செய்யாத தூய்மையும், இம்மூன்றும்
நன்றறியு மாந்தர்க் குள. 68

(ப–ரை.) இல்லார்க்கு–வறியவர்க்கு, ஒன்று ஈயும்–ஓர்பொருளைக் கொடுக்கும், உடைமையும்–செல்வமும்; இவ்வுலகில்–இவ்வுலகத்துப் பொருள்களினது, நில்லாமை–நிலையாமையை, உள்ளும்–ஆராய்ந்தறியும், நெறிப்பாடும்–வழியில் பொருந்துதலும்; எவ்வுயிர்க்கும்–எல்லாவுயிர்களுக்கும், துன்பு உறுவ–துன்பமடைவதற் கேதுவானவைதை, செய்யாத தூய்மையும்–செய்யாத தூயதன்மையும்; இம்மூன்றும்–ஆகிய இம்மூன்றும், நன்று அறியும்–(தம்முயிர்க்கு) நல்லதாகிய அறத்தை அறியுமியல்புடைய, மாந்தர்க்கு உள–மனிதர்களுக்கு உள்ளன ஆம்.

அருந்தொழி லாற்றும் பகடும், திருந்திய
மெய்ந்நிறைந்து நீடிருந்த கன்னியும்,—நொந்து
நெறிமாறி வந்த விருந்தும், இம் மூன்றும்
பெறுமா றரிய பொருள். 69

(ப–ரை.) அரு தொழில்–(உழுதல் பெருஞ்சுமை சுமத்தல் முதலிய) அரியதொழில்கள், ஆற்றும் பகடும்–செய்யவல்ல கடாவும்; திருந்திய – குற்றமற்ற, மெய் நிறைந்து – உடலினிலக்கணம் நிரம்பி, நீடு இருந்த–நெடுநாள் (மணமின்றி) இருந்த, கன்னியும்–கன்னிகையும்; நெறி மாறி–வழிதப்பி, நொந்து வந்த விருந்தும்–பசித்துவந்த விருந்தும்; இம்மூன்றும்–ஆகிய இம்மூன்றும், பெறும் ஆறு – பெறும்வழியில், அரியபொருள்–அரியபொருள்களாம்.

காவோ டறக்குளந் தொட்டானும், நாவினல்
வேதங் கரைகண்ட பார்ப்பானும்,—தீதிகந்
தொல்வதுபாத் துண்ணு மொருவனும், இம்மூவர்
செல்வ ரெனப்படு வார். 70

(ப–ரை.) காவோடு–சோலையை வைப்பித்தலோடு, அறக்குளம் – தருமத்துக்குரிய குளத்தை, தொட்டானும்–தோண்டுவித்தவனும்; நாவினால்–ஓதலினால், வேதம் – வேதத்தை, கரைகண்ட – முடிவுகண்ட, பார்ப்பானும் – அந்தணனும்; நீத்து – நீயவழியை, இகந்து–கடந்து, ஒல்வது–(தனக்கு) இசையும் பொருளை, பாத்து–பிரமசாரி முதலானவர்க்குப் பகுத்து, உண்ணும்–உண்ணுகின்ற, ஒருவனும் – ஒப்பற்ற இல்லறத்தானும்; இம்மூவர்–ஆகிய இம்மூவரும், செல்வர் எனப்படுவார்–செல்வத்தையுடையாரென்று சொல்லப்படுவார்.

உடுத்தாடை யில்லாதார் நீராட்டும், பெண்டிர்
தொடுத்தாண்ட வைப்போர் புகலும்,—கொடுத்தளிக்கும்
ஆண்மை யுடையவர் நல்குரவும், இம்மூன்றும்
காண வரியவென் கண். 71

(ப–ரை.) உடுத்த ஆடை–உடுக்கப்பட்ட ஆடை, இல்லாதார்–இல்லாதவர், நீர் ஆட்டும்–நீராடுதலும்; பெண்டிர்–மகளிர், தொடுத்து–(பிறரோடு) வழக்குத்தொடுத்து, ஆண்டு–அங்குள்ள, அவை–சபையினிடத்தில், போர் புகலும்–போர்க்குப் புகுதலும்; கொடுத்து–(இரப்பவர்க்குக்) கொடுத்து, அளிக்கும்–காக்கின்ற, ஆண்மை உடையவர்–ஆண்தன்மையுடையாரது, நல்குரவும்–வறுமையும்; இம் மூன்றும்–ஆகிய இம்மூன்றும், என் கண் காண–என் கண்கள் பார்க்க, அரிய–தகுவன அல்ல.

நிறைநெஞ் சுடையானை நல்குர வஞ்சும்;
அறனை நினைப்பானை யல்பொரு ளஞ்சும்;
மறவனை யெவ்வுயிரு மஞ்சும்:இம் மூன்றும்
திறவதிற் றீர்ந்த பொருள். 72

(ப–ரை.) நிறை நெஞ்சு உடையானை–(நிடைத்தமட்டில்) திருப்தியடைகின்ற மனமுடையானுக்கு, நல்குரவு அஞ்சும்–வறுமை அஞ்சும்; அறனை நினைப்பானை–(எல்லாச் செய்கையிலும்) அறத்தைச் சிந்திப்பவனுக்கு, அல்பொருள் அஞ்சும்–பாவம் அஞ்சும்; மறவனை–வீரனுக்கு, எவ்வுயிரும் அஞ்சும்–(போர்க்களத்துவந்த) எல்லாவுயிர்களும் அஞ்சும்; இம் மூன்றும் – (நிறைநெஞ்சுடைமை, அறனைநினைத்தல், மறம்) ஆகிய இம்மூன்றும், திறவதில்–வன்மைகளுள், தீர்ந்தபொருள்–(சிறப்பாக) முடிந்த பொருள்களாம்.

இரந்துகொண் டொண்பொருள் செய்வலென் பானும்,
பரந்தொழுகும் பெண்பாலைப் பாசமென் பானும்,
விரிகட லூடுசெல் வானும், இம் மூவர்
அரிய துணிந்துவாழ் வார். 73

(ப–ரை.) இரந்து–(இல்லாமையால் பிறரிடத்து) யாசித்து, கொண்டு–(அவரிடம் பிச்சையைப்) பெற்று, ஒள் பொருள்–ஒள்ளிய பொருளை, செய்வல் என்பானும்–சம்பாதிப்பேனென்று கருதும் யாசகனும்; பரந்து–(பலரிடத்தும்) வியாபித்து, ஒழுகும்–(மேலன்புகாட்டி) நடக்கின்ற, பெண்பாலை–பெண் வகுப்பைச் சார்ந்த வேசையை, பாசம் என்பானும்–அன்புடையாளெனக் கருதுங் காமுகனும்; விரி கடல் ஊடு–விரிந்தகடலி னடுவில், செல்வானும்–(பொருள்தேடப்) போகும் வாணிகனும்; இம்மூவர்–ஆகிய இம்மூவரும், அரிய துணிந்து–(செய்வதற்கு) அரிய பொருள்களைத் துணிந்து, வாழ்வார்–வாழ்பவராவர்.

கொலைநின்று தின்றொழுகு வானும், பெரியவர்
புல்லுங்கால் தான்புல்லும் பேதையும்,–இல்லெனக்கொன்
றீகென் பவனை நகுவானும், இம்மூவர்
யாதுங் கடைப்பிடியா தார். 74

(ப–ரை.) கொலை நின்று–கொல்லுந்தொழிலில் நீங்காது, தின்று ஒழுகுவானும்–(கொலை செய்த உயிரினிறைச்சியைத்) தின்று வாழ்வானும், பெரியவர் புல்லுங்கால்–பெரியோர் (தன்னைத்) தழுவும்போது, தான் புல்லும்–(அவரோடொப்பவளுகத் தன்னை மதித்துத்) தானும் (அவரை) எதிர்தழுவுகின்ற, பேதையும்–அறிவில்லானும்; எனக்கு இல்–எனக்கு இல்லை, ஒன்று ஈக–ஒருபொருளை ஈயக்கடவாய், என் பவனை–என்று யாசிக்கின்றவனை, நகுவானும்–பரிகாசஞ் செய்பவனும்; இம்மூவர்–ஆகிய இம்மூவரும், யாதும்–யாதோரறத்தையும், கடைப்பிடியாதார்–உறுதியாகக் கொள்ளாதவர்.

வள்ளன்மை பூண்டான்கட் செல்வமும், உள்ளத்
துணர்வுடையா னோதிய நூலும்,–புணர்வின்கண்
தக்க தறியுந் தலைமகனும் இம்மூவர்
பொத்தின்றிக் காழ்த்த மரம். 75

(ப–ரை.) வள்ளன்மை–மறுக்காமல் கொடுத்தலை, பூண்டான் கண்–அணியாகப் பூண்டவனிடத்துள்ள, செல்வமும்–செல்வமும்; உள்

ளத்து–(பாடங்கேட்டபின் தன்) உள்ளத்தில், உணர்வு உடையான்–(கேட்டதனைச்) சிந்திக்கு மியல்புடையவன்; ஓதிய நூலும்–கற்ற நூற்புலமையும்; புணர்வின்கண்–(பிறர் தன்னைச்) சார்ந்தவிடத்து, தக்கது–(அவரவர்க்குச் செய்யத்) தகுந்த உபசாரத்தை, அறியும் தலைமகனும்–அறியவல்ல பெரியோனும்; இம்மூவர்–ஆகிய இம்மூவரும், பொத்து இன்றி–உட்டொளையில்லாமல், கீழ்த்த மரம்–உள்வயிரம் பற்றிய மரம்போலச் சலனமில்லாராவர்.

மாரிநாள் வந்த விருந்தும், மனம்பிறிதாய்க்
காரியத்திற் குன்றுக் கணிகையும்,—வீரியத்து
மாற்ற மறுத்துரைக்குஞ் சேவகனும், இம்மூவர்
போற்றற் கரியார் புரிந்து. 76

(பு–ரை.) மாரிநாள் – மழையையுடைய நாளில், வந்த விருந்தும்–வந்தடுத்த விருந்தினரும்; மனம் பிறிது ஆய் – மனம் வேறொன்றிற் சென்றும், காரியத்தில்–(தன்னுல் ஆகும்) காரியத்தில், குன்று–குறைபடாத, கணிகையும்–வேசியும்; வீரியத்து – (போரில் காட்டப்புகுந்த) வீரியத்தில், மாற்றம்–(தலைவன் பகைவர்மேற் கருணையாற் சொல்லிய) சொல்லை, மறுத்து உரைக்கும் – மறுத்துச்சொல்லிச் செல்லுகின்ற, சேவகனும் – வீரனும்; இம்மூவர் – ஆகிய இம்மூவரும், பூரிந்து போற்றற்கு – (இல்லறத்தான் நாயகன் அரசன் இம்மூவராலும் கிடைக்கப் பெற்று) விரும்பிப் பாதுகாத்தற்கு, அரியார்–அருமையானவர்.

கயவரைக் கையிகந்து வாழ்தல்; நயவரை
நள்ளிருளுங் கைவிடா நட்டொழுகல்;—தெள்ளி
வடுவான வாராமற் காத்தல்: இம்மூன்றும்
குடிமாசி லார்க்கே யுள. 77

(ப–ரை.) கயவரை – கீழ்மக்களை, கையிகந்து – கைவிட்டு (சேராமல்), வாழ்தல் – வாழ்தலும்; நயவரை – நீதியுடையாரை, நட்டு–சினேகித்து, நள் இருளும்–பாதி இரவிலும், கைவிடா–கைவிடாமல், ஒழுகல்–(அவருக்கு இணங்க) நடத்தலும்; தெள்ளி–ஆராய்ந்து, வடு ஆன–குற்றம் ஆயினகாரியங்கள், வாராமல் – (தம்மிடத்து) வராதபடி, காத்தலும் – காத்துக்கொள்ளலும்; இம்மூன்றும் – ஆகிய இம்மூன்றும், குடி மாசு இலார்க்கே – (தாம் பிறந்த) குடியில் குற்றமில்லாதவர்க்கே, உள – உண்டாம்.

தூய்மை யுடைமை; துணிவாந் தொழிலகற்றும்
வாய்மை யுடைமை; வனப்பாகும்—தீமை
மனத்தினும் வாயினுஞ் சொல்லாமை: மூன்றும்
தவத்திற் றருக்கினர் கோள். 78

(ப—ரை.) தூய்மை உடைமை — மனத்தூய்மை யுடையராயிருத்தலும்; துணிவு ஆம்—(மெய்ந்நூல்களாலே) துணியப்பட்டதாகிய, தொழில் அகற்றும் — நற்செய்கையை விரிக்கின்ற, வாய்மை உடைமை — உண்மையுடையவனு யிருத்தலும்; வனப்பு ஆகும்—(மங்கையருடைய) அழகாகிய, தீமை — தீமையைத் தருவதனை, மனத்தினும் வாயினும் சொல்லாமை — மனத்தினலும் வாயினலும் நினையாமையும் சொல்லாமையும், மூன்றும்—இம்மூன்றும், தவத்தின் —தவத்திலே, தருக்கினர் கோள்—களித்தவருடைய கொள்கையாம்.

பழியஞ்சான் வாழும் பசுவும், அழிவினுல்
கொண்ட வருந்தவம் விட்டானும்,—கொண்டிருந்
தில்லஞ்சி வாழு மெருதும், இவர்மூவர்
நெல்லுண்ட னெஞ்சிற்கோர் நோய். 79

(ப—ரை.) பழி அஞ்சான்—(உலகத்தாரால் பழிக்கப்படும்) பழிக்கு அஞ்சாதவனுகி, வாழும் பசுவும்—உயிர்வாழ்கின்ற பசுவாவானும்; கொண்ட—(தான்) பூண்ட, அரு தவம்—அருமையாகிய தவத்தை, அழிவினுல்—(உடல்வலி முதலியவை) அழிவதினுல், விட்டானும்—விட்டவனும்; கொண்டு இருந்து—கொண்டவனுய் இருந்து, இல் அஞ்சி—(அக் கொள்ளப்பட்ட) மனையாளுக்குப் பயந்து, வாழும்—(அவளோடுகூடி) வாழ்கின்ற, எருதும்—எருதாவானும்; இவர் மூவர்—ஆகிய இவர்மூவரும், நெல் உண்டல் — சோறுண்ணுதல், நெஞ்சிற்கு — (அறிவுடையோர்) நெஞ்சிற்கு, ஓர் நோய்—ஒரு நோயைப்போல்வர்.

மூறைசெய்யான் பெற்ற தலைமையும், நெஞ்சின்
நிறையிலான் கொண்ட தவமும்,-நிறையோழுக்கம்
தேற்றுதான் பெற்ற வனப்பும், இவைமூன்றும்
தூற்றின்கட் டூவிய வித்து. 80

(ப—ரை.) முறை செய்யான்—நீதி செய்யாதவன், பெற்ற தலைமையும்—பெற்ற அரசத்தன்மையும்; நெஞ்சின் நிறை—நெஞ்சினை (புலன்களிலே செலுத்தாமல்) நிறுத்துந்தன்மை, இலான் கொண்ட தவமும்—இல்லாதவன் மேற்கொண்ட தவமும்; நிறை ஒழுக்கம்—குறைவில்லாத

நல்லொழுக்கத்தை, தேற்றாதான்–தெளியாதவன், பெற்ற வனப்பும்–பெற்ற அழகும்; இவை மூன்றும்–ஆகிய இவை மூன்றும், தூற்றின் கண்–புதலில், தூவிய வித்து–விதைத்த விதையோடொக்கும்.

வாள்வீசி வாழுந் துறைபோல் கண்ணிகையும்,
நாள்கழகம் பார்க்கு நயமிலாச் சூதனும்,
வாசிக்கொண் டொண்பொருள் செய்வானும், இம்மூவர்
ஆசைக் கடலுளாழ் வார். 81

(ப–ரை.) வாள்வீசி – வாள் (போலும் கண்களை) வீசி (மயக்கி), வாழும் – (அதனால்) உயிர்வாழ்கின்ற, துறைபோல் – நீர்த்துறையைப் போல்கின்ற, கணிகையும் – வேசையும்; நாள் – தினமும், கழகம் பார்க்கும்–சூதாடு மிடத்தைத் தேடி ஆடுகின்ற, நயம் இலாச்சூதனும்–நீதியில்லாத சூதனும்; வாசி கொண்டு – மிக்க வட்டிபெற்று, ஒள் பொருள் செய்வானும்–அழகிய பொருளைச் சம்பாதிப்பவனும்; இம் மூவர் – ஆகிய இம்மூவரும், ஆசைக்கடலுள் – ஆசையாகிய கடலில் ஆழ்வார்–அழுந்துவோர்.

சான்றருட் சான்றா னெனப்படுதல்;எஞ்ஞான்றும்
தோய்ந்தாருட் டோய்ந்தா னெனப்படுதல்;—பாய்ந்தெழுந்து
கொள்ளாருட் கொள்ளாத கூரிமை: இம்மூன்றும்
நல்லாள் வழங்கு நெறி. 82

(ப–ரை.) சான்றருள் – (நற்குணங்களால்) நிறைந்தாரிடத்தில், சான்றான் எனப்படுதல் – அவ்வாறு நற்குணங்களால்) நிறைந்தோ னென்று கருதப்பட நடத்தலும்; எஞ்ஞான்றும்–செல்வமுற்றகாலத் தும் அற்றகாலத்தும், தோய்ந்தாருள் – (ஒருதன்மையராய்) நட்புக் கொண்டு கலந்தவரிடத்து, தோய்ந்தான் எனப்படுதல்–(நம்போல்) நட் புக்கொண்டு கலந்தவனென்று கருதப்பட நடத்தலும்; பாய்ந்து எழுந்து–(தம்மேல் கோபத்தோடு) பாய்ந்தெழுந்து, கொள்ளாருள்–(தமது நற் சொல்லை) அங்கீகரியாதவரிடத்து, கொள்ளாத–(அவர்) அங்கீகரியாத நற்சொற்களை, கூரிமை–சொல்லாமையும்; இம்மூன்றும்–ஆகிய இம் மூன்றும், நல் ஆள்–(யாவர்க்கும்) நல்லவனந்தன்மையை ஆளுவோன், வழங்கும் நெறி–செல்லும் வழிகளாம்.

உப்பின் பெருங்குப்பை நீர்படியி னில்லாகும்;
நட்பின் கொழுமுளை பொய்வழங்கி னில்லாகும்;
செப்ப முடையார் மழையனையர்: இம்மூன்றும்
செப்பநெறி தாராத வாறு. 83

(ப–ரை.) உப்பின் பெரு குப்பை–உப்பினது பெருங்குவியல், நீர் படியின்–(தன்னில்) நீர்படிந்தால், இல் ஆகும்–இலதாகும்; நட்பின் கொழு மூலை–நட்பாகியவிதையின் செழித்தமூலையானது, பொய்வழங்கின்–பொய்யாகிய எருவைப்பெய்தால், இல் ஆகும்–அழிந்துபோம்; செப்பம் உடையார்–நடுவுநிலைமையுடையார், மழை அனையர்–மழை போல எல்லார்க்கும் ஒப்ப உபகரிப்பார்; இம்மூன்றும்–(நீர்படியாமையும் பொய்வழங்காமையும் மழையை ஒத்தலும் ஆகிய) மூன்றும், செப்ப நெறி–நல்வழியை, தூராத ஆறு–தூராமைக்குக் காரணமாகிய சாதனங்களாம்.

வாய்நன் கமையாக் குளனும், வயிறூரத்
தாய்ப்பாலை யுண்ணாக் குழவியும்,—சேய்மரபிற்
கல்விமாண் பில்லாத மாந்தரும், இம்மூவர்
நல்குரவு சேரப்பட் டார். 84

(ப–ரை.) வாய்–நீர்வரும்வழி, நன்கு அமையாக்குளனும்–நன்றாக அமைந்திராத குளமும்; வயிறு ஆர–தன்வயிறு நிரம்பும்படி, தாய்ப் பாலை உண்ணா–தாயின் பாலை உண்ணாத, குழவியும்–குழந்தையும்; சேய் மரபில்–உயர்ந்த முறைமையில், கல்வி மாண்பு–(நூல்களைக்) கற்றலினது மாட்சிமைப்பட்ட அறிவு, இல்லாத மாந்தரும்–இல்லாத மனிதரும், இம்மூவர்–ஆகிய இம்மூவரும், நல்குரவு சேரப்பட்டார்–வறுமையால் அடையப்பட்டவராவர்.

எள்ளப் படுமரபிற் ருகலும், உள்பொருளைக்
கேட்டு மறவாத கூர்மையும், முட்டின்றி
உள்பொருள் சொல்லு முணர்ச்சியும், இம்மூன்றும்
ஒள்ளிய வொற்றூட் குணம். 85

(ப–ரை) எள்ளப்படும்–(பகைவரால் தன் உரு) அவமதிக்கப்படுகின்ற, மரபிற்று ஆகலும்–முறையை யுடையதாதலும்; உள் பொருளை–(அப்பகைவரிடத்து) நடந்துள்ள காரியத்தை, கேட்டு மறவாத–கேட்டுப் பின்மறவாத, கூர்மையும்–கூரறிவுடைமையும்; உள் பொருள்–அப் பொருளை, முட்டு இன்றி–தடை இன்றி, சொல்லும் உணர்ச்சியும்–(தன் அரசனுக்குச்) சொல்லுகின்ற தெளிவுடைமையும், இம்மூன்றும்–ஆகிய இம்மூன்றும், ஒள்ளிய–அறிவுள்ள, ஒற்று ஆள்–வேவுகாரனது, குணம்–தன்மைகளாம்.

அற்புப் பெருந்தகை யாப்பு நெகிழ்ந்தொழிதல்;
கற்புப் பெரும்புணை காதலிற் கைவிடுதல்;
நட்பி னயநீர்மை நீங்கல்: இவைமூன்றும்
குற்றந் தருஉம் பகை. 86

(ப–ரை.) அன்பு பெரு தகை–(ஒருவன் கொடாமைப்பொருட்டு சுற்றத்தாரிடத்தும் நட்டாரிடத்தும்) அன்பினாலாகிய பெருந்தகையினது, யாப்பு நெகிழ்ந்து ஒழிதல்–கட்டுத்தளர நீங்குதலும்; கற்புபெரு புணை–கல்வியாகிய பெரியதெப்பத்தை, காதலின்–(பொருள் முதலியவற்றின்) ஆசையால், கைவிடுதல்–முற்றும் விடுதலும்; நட்பின்–(ஒருவரிடத்துவைத்த) நட்பினால், நயநீர்மை–நீதித்தன்மையினின்று, நீங்கல்–நீங்குதலும்; இவை மூன்றும்–ஆகிய இவைமூன்றும், குற்றம் தரும்–(ஒருவனுக்குக்) குற்றங்களை விளைக்கின்ற, பகை–பகைகளாம்.

கொல்வது தானஞ்சான் வேண்டலும், கல்விக்
ககன்ற வினம்புகு வானும், இருந்து
விழுநிதி குன்றுவிப் பானும், இம் மூவர்
முழுமக்க ளாகற்பா லார். 87

(ப–ரை.) கொல்வது–(தன்னை) வருத்துவதனை, தான் அஞ்சான்–தான் அஞ்சாதவனாகி, வேண்டலும்–(அடைய) விரும்புவானும்; கல்விக்கு அகன்ற–கல்விக்குத் தூரமாயுள்ள, இனம் புகுவானும்–இனத்திலே நுழைபவனும்; இருந்து–முயற்சியிலனாயிருந்து, விழு நிதி–(முன்னுள்ள) பெருந்திரவியத்தை, குன்றுவிப்பானும்–(செலவிட்டுக்) குறைவிப்பவனும்; இம்மூவர்–ஆகிய இம்மூவரும், முழுமக்கள்–மூடர்கள், ஆகல்பாலார்–ஆகுதலாகிய தன்மையையுடையார்.

பிணிதன்னைத் தின்னுங்காற் றுன்வருந்து மாறும்,
தணிவில் பெருங்கூற் றுயிருண்ணு மாறும்,
பிணைசெல்வ மாண்பின் றியை[illegible], இவைமூன்றும்
பிணையி[illegible]லைக்கலக்கு மாறு. 88

(ப–ரை.) பிணி–நோயானது, தன்னைத் தின்னுங்கால்–தன்னை வருத்தும்போது, தான் வருந்தும் ஆறும்–(ஒருவன்) தான் (அதற்கு) வருந்தும் விதமும்; தணிவு இல்–(கோபம்) ஆறுதலில்லாத, பெருகூற்று–பெரிய யமன், உயிர் உண்ணும் ஆறும்–(ஒருவனுடைய) உயிரைக்கவரும் விதமும்; பிணைசெல்வம்–(சுற்றத்தோர் முதலியோர்) வந்துசேர்தற்குக் காரணமாகிய செல்வம், மாண்பு இன்றி–சிறந்த

தன்மை (அஃதாவது நிலை) இல்லாமல், இயங்கல்–மாறிச்செல்லுதலும்; இவை மூன்றும்–ஆகிய இவைமூன்றும், நிலை–(தம்மைக்கண்ட அன் புடையார்க்கு மனத்தின்) நிலைமையை, புணையின்–மரக்கலத்தைப் போல, கலக்கும் ஆறு–தடுமாறச்செய்யும் விதங்களாம்.

அருளினை நெஞ்சத் தடைகொடா தானும்,
பொருளினைத் துவ்வான் புதைத்துவைப் பானும்,
இறந்தின்னு சொல்லகிற் பானும்,இம் மூவர்
பிறந்தும் பிறந்திலா தார். 89

(ப–ரை.) அருளினை – கருணையை, நெஞ்சத்து – தன்மனத்தில், அடைகொடாதானும்–வந்துசேரவையாதவனும்; பொருளினை–திரவி யத்தை, துவ்வான்–அனுபவியாமல், புதைத்துவைப்பானும்–(ஒன் றில்) மறைத்துவைப்பவனும்; இறந்து–(வரம்பைக்) கடந்து, இன்னு–(பிறர்க்குத்) துன்பந்தருஞ் சொற்களை, சொல்லகிற்பானும்–சொல்ல வல்லவனும்; இம்மூவர்–ஆகிய இம்மூவரும், பிறந்தும்–(உலகில்) பிறந் திருந்தும், பிறந்திலாதார்–(பிறப்பின்பயனை அடையாமையால்) பிறவா தவராவர்.

ஈதற்குச் செய்க பொருளை; அறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை;—யாதும்
அருள்புரிந்து சொல்லுக சொல்லை:இம் மூன்றும்
இருளுலகஞ் சேராத வாறு. 90

(ப–ரை.) ஈதற்கு – (பிறர்க்கு) உபகரிப்பதற்காக, பொருளைச் செய்க–(ஒருவன்) பொருளைச் சம்பாதிக்கக்கடவன்; அறநெறி–அறத் தின் வழியில், சேர்தற்கு–சேரும்பொருட்டு, பெருநூலைச் செய்க– பெருமையாகிய நூற்பொருளைக் கற்கக்கடவன்; யாது சொல்லையும்– எத்தன்மையதாகிய சொல்லையும், அருள் புரிந்து சொல்லுக–அருளை விரும்பிச் சொல்லக்கடவன்; இம்மூன்றும்–ஆகிய இம்மூன்றும், இருள் உலகம்–நரகலோகத்தை, சேராத ஆறு–சேராமைக்குக் காரணமாகிய வழிகளாம்.

பெறுதிகட் பொச்சாந் துரைத்தல்; உயிரை
இறுதிக்கண் யாமிழந்தே மென்றல்;—மறுவந்து
தன்னுடம்பு கன்றுங்கா ணுணுதல்: இம்மூன்றும்
மன்னு வுடம்பின் குறி. 91

(ப–ரை.) உயிரைப் பெறுதிக்கண்–(தாய்தந்தை முதலிய) உயிர்களை உளவாகப் பெற்றவிடத்து, பொச்சாந்து–(தனக்கு அவர் செய்த உதவியையும் தான் செய்யவேண்டிய உதவியையும்) மறந்து, உரைத்தல்–இகழ்ந்து சொல்லுதலும்; (உயிரை)–அவ்வுயிர்களை, இறுதிக்கண்–காலமுடிவில்; யாம் இழந்தேம்–நாம் இழந்துவிட்டோம், என்றல்–என்று தனக்குள்ளே இரங்குதலும்; மறு வந்து–(மருந்து முதலியவற்றால் சாத்தியப்படாத) நோய்வந்ததினால், தன் உடம்பு–தன்னுடைய உடம்பு, கன்றுங்கால்–மெலியுங்காலத்தில், நாணுதல்–(முன் அறஞ் செய்திலோமென்று தனக்குள்ளே) நாணப்படுதலும்; இம்மூன்றும்–ஆகிய இம்மூன்றும், மன்னு–(தனக்கு நியமித்த ஆயுள்வரை) நிலை பெறுதலில்லாத, உடம்பின்குறி–உடம்புடையானிடத்துத் தோன்றும் குறிகளாம்.

விழுத்தினைத் தோன்ரு தவனும், எழுத்தினை
ஒன்றும் முணராத வேழையும்,—என்றும்
இறந்துரை காமுறு வானும். இம் மூவர்
பிறந்தும் பிறவா தவர். 92

(ப–ரை.) விழுத்தினை–(அறவொழுக்கத்தைப் பெறுதற்குரிய) சிறந்தகுலத்தில், தோன்ரு தவனும்–பிறவாதவனும்; எழுத்தினை–இலக்கண நூலை, ஒன்றும் உணராத–எவ்வளவு சிறிதும் அறிந்துகொள்ளாத, ஏழையும்–பேதையும், என்றும் இறந்து–எந்நாளிலும் வரம்புகடந்து, உரை காமுறுவானும்–பேசுதலை விரும்புகிறவனும், இம்மூவர்–ஆகிய இம்மூவரும், பிறந்தும்–பிறந்திருந்தும், பிறவாதவர்–(பிறப்பின்பயனை அடையாமையால்) பிறவாதவராவர்.

இருளாய்க் கழியு முலகமும், யாதும்
தெரியா துரைக்கும் வெகுள்வும்,—பொருளல்ல
காதற் படுக்கும் விழைவும், இவைமூன்றும்
பேதைமை வாழ் முயிர்க்கு. 93

(ப–ரை.) இருள் ஆய்–(தான்வாழுநாளெல்லாம்) அந்தகாரமாய், கழியும்–செல்லுகின்ற, உலகமும்–உலகியலும் (அதாவது தன் வாழ்நாளெல்லாம் உலகியலைச் சிறிதுந் தேராதவனாயிருத்தலும்); யாதும்–(நன்மை தீமைகளில்) எதையும், தெரியாது–ஆராயாமல், உரைக்கும்–(வன் சொல்லைச்) சொல்லுதற்குக் காரணமாகிய, வெகுள்வும்–கோபமும்; பொருள் அல்ல–நற்பொருளல்லாதவற்றில், காதல் படுக்கும்–அன்புவைக்கச்செய்யும், விழைவும்–பேராசையும்; இவை மூன்றும்–

ஆகிய இவை மூன்றும், வாழும் உயிர்க்கு–(உடலோடுகூடி) வாழ்கின்ற உயிர்களுக்கு, பேதைமை–அறியாமையால் உண்டாவன ஆம்.

நண்பிலார் மாட்டு நசைக்கிழமை செய்வானும்,
பெண்பாலைக் காப்பிகழும் பேதையும்,—பண்பில்
இழுக்கான சொல்லாடு வானும்,இம் மூவர்
ஒழுக்கங் கடைப்பிடியா தார். 94

(ப–ரை.) நண்பு இலார் மாட்டு–நட்பின்தன்மை யில்லாதவரிடத்து, நசைக்கிழமை–அன்புரிமையை, செய்வானும்–செய்பவனும்; பெண்பாலை–பெண்ணுக்குரிய குணவகுப்புடைய மனையாளை, காப்பு–காக்குங்காவலை, இகழும்–இகழ்ந்திருக்கும், பேதையும்–அறிவில்லானும்; பண்பு இல்–பயனின்மையாகிய, இழுக்கு ஆன–வழுவுதலான, சொல் ஆடுவானும்–சொல்லைச் சொல்லுபவனும்; இம் மூவர்–ஆகிய இம்மூவரும், ஒழுக்கம் – (தமக்குரிய) ஒழுக்கத்தை, கடைப்பிடியா தார்–உறுதியாகக் கொள்ளாதவர்.

அறிவழுங்கத் தின்னும் பசிநோயும், மாந்தர்
செறிவழுங்கத் தோன்றும்விழைவும்,—செறுநரின்
வெவ்வுரை நோன்மை வெகுள்வும், இவைமூன்றும்
நல்வினை நீக்கும் படை. 95

(ப–ரை.) அறிவு அழுங்க – (தன்) நல்லறிவு கெடும்படி, தின்னும்–வருத்துகின்ற, பசி நோயும்–பசியாகிய வியாதியும்; மாந்தர்–நல்லோர், செறிவு அழுங்க–செறிந்துதல் கெடும்படி (சேராதிருக்கும் படி), தோன்றும் விழைவும்–உண்டாகும் பேராசையும்; செறுநரின்–பகைவரிடத்துண்டாகும், வெம் உரை–கொடிய மொழிகளை, நோன்மை வெகுள்வும்–பொறுக்காத கோபமும்; இவை மூன்றும்–ஆகிய இவை மூன்றும், நல்வினை தீர்க்கும் படை–நல்வினையை (ஒருவனிடத்தினின்றும்) நீக்குகின்ற ஆயுதங்களாம்.

கொண்டான் குறிப்பறி வாள் பெண்டாட்டி; கொண்டன
செய்வகை செய்வான் றவசி; கொடிதொறீஇ
நல்லவை செய்வா னரசன்: இவர்மூவர்
பெய்யெனப் பெய்யு மழை. 96

(ப–ரை.) கொண்டான்–கொண்ட கணவனுடைய, குறிப்பு அறிவாள்–குறிப்பறிந்து நடப்பவள், பெண்டாட்டி–பெண்டாட்டியாவாள்; கொண்டன–(தான்) மேற்கொண்ட விரதங்களை, செய்வகை–செய்யும்

முறைப்படி, செய்வான்–செய்பவன், தவசி–தவசியாவான்; கொடிது–தீங்கினை, ஒரீஇ–நீக்கி, நல்லவை–(குடிகளுக்கு) நன்மையானவற்றை, செய்வான் அரசன்–செய்பவன் அரசனுவான்; இவர் மூவர்–ஆகிய இவர் மூவரும், பெய் எனப் பெய்யும் மழை–பெய் என்று சொல்ல மழை பெய்யும்.

ஐங்குரவ ராணை மறுத்தலும், ஆர்வுற்ற
எஞ்சாத நட்பினுட் பொய்வழக்கும்,—நெஞ்சமர்ந்த
கற்புடை யாளைத் துறத்தலும், இம்மூன்றும்
நற்புடையி லாளர் தொழில். 97

(ப–ரை.) ஐந்து குரவர்–(அரசன், போதகாசிரியன், தந்தை, மூத்தோன், வமிசகுரு) ஆகிய ஐந்து குரவருடைய, ஆணை மறுத்தலும்–கீட்டவனை மறுத்து நடத்தலும்; ஆர்வுற்ற–விரும்பிய, எஞ்சாத–குறையாமல் வளர்கின்ற, நட்பினுள்–நட்புச் செய்வாரிடத்து, பொய் வழக்கும்–பொய் பேசுதலும்; நெஞ்சு அமர்ந்த–(தன்னை) மனத்தால் மகிழ்ந்த, கற்பு உடையாளை–கற்புடைய மனைவியை, துறத்தலும்–விடுதலும்; இம் மூன்றும்–ஆகிய இம்மூன்றும், நல்புடை–அறத்தினது, இல் ஆளர்–இன்மையை ஆளுதலுடையராது (தீவினையுடையாராது), தொழில்–தொழில்களாம்.

செந்தீ முதல்வ ரறநினைந்து வாழ்தலும்,
வெஞ்சின வேந்தன் முறைநெறியிற் சேர்தலும்,
பெண்பால் கொழுநன் வழிச்செலவும், இம்மூன்றும்
திங்கண்மும் மாரிக்கு வித்து. 98

(ப–ரை.) செம் தீ முதல்வர்–யாகத்தீயை வளர்க்கின்ற முதல் வருணத்தாராகிய அந்தணர்கள், அறம் நினைந்து வாழ்தலும்–(தமக்குரிய) அறத்தை மறவாது வாழ்தலும்; வெம் சின வேந்தன்–(போர் முகத்தில்) கொடுமையாகிய கோபத்தைக் காட்டுகின்ற அரசன், முறை நெறியில்–முறையாக (ஆளும்) விதிவழியில், சேர்தலும்–சேர்ந்து நடத்தலும்; பெண்பால்–பெண்ணுக்குரிய குணமமைந்தவள், கொழுநன் வழி–தன் கணவனுடைய குறிப்பின் வழியில், செலவும்–நடத்தலும்; இம் மூன்றும்–ஆகிய இம்மூன்றும், திங்கள்–மாதந்தோறும் பெய்ய வேண்டிய, மும்மாரிக்கு–மூன்று மழைக்கும், வித்து–காரணங்களாம்.

கற்றுரைக் கைவிட்டு வாழ்தலும், காமுற்ற
பெட்டாங்கு செய்தொழுகும் பேதையும்,—முட்டின்றி
அல்லவை செய்யு மலவலையும், இம்மூவர்
நல்லுலகஞ் சேரா தவர். 99

(ப—ரை.) கற்றுரைக் கைவிட்டு—கற்ற நீவுடையாரை மூற்றும் விட்டு நீங்கி, வாழ்தலும்—வாழ்பவனும்; காமுற்ற—(தான்) விரும்பியவற்றை, பெட்டாங்கு—விரும்பினாற்போல, செய்து ஒழுகும் பேதையும்—செய்யாநின்று நடக்கும் அறிவில்லானும், முட்டு இன்றி—தடையில்லாமல், அல்லவை செய்யும்—தீங்குகளைச் செய்யும், அலவலையும்—பேச்சுக்காரனும், இம்மூவர்—ஆகிய இம்மூவரும், நல் உலகம்—நல்ல உலகங்களை, சேராதவர்—சேராதவராவர். (அதாவது நரகத்தைச் சேர்தற்குரிய ராவ ரென்பது).

பத்திமை சான்ற படையும், பலர்தொகினும்
எத்துணையு மஞ்சா வெயிலரணும்,—வைத்தமைந்த
எண்ணி னுலவா விழுநிதியும், இம்மூன்றும்
மண்ணுளும் வேந்தர்க் குறுப்பு. 100

(ப—ரை.) பத்திமை சான்ற—(தம்மேல்) அன்புநிறைந்த, படையும்—சேனையும்; பலர் தொகினும்—பகைவர் பலர்கூடி எதிர்ப்பினும், எத்துணையும்—எவ்வளவு சிறிதும், அஞ்சா—பயப்படவேண்டாத, எயில் அரணும்—மதில் கோட்டையும்; வைத்து—வைக்கப்பட்டு, அமைந்த—நிறைந்துள்ள, எண்ணின்—எண்ணப்புகின், உலவா—முற்றுப்பெறுத, விழு நிதியும்—சிறப்பாகிய பொருள் வைப்பும்; இம் மூன்றும்—ஆகிய இம்மூன்றும், மண் ஆளும்—பூமியை ஆளுகின்ற, வேந்தர்க்கு—அரசத் தன்மையுடையார்க்கு, உறுப்பு—அங்கங்களாம்.

நான்மணிக் கடிகை

கடவுள்வாழ்த்து.

மதிமன்னு மாயவன் வாண்முக மொக்கும்;
கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கர மொக்கும்;
முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளின்
எதிர்மலர் மற்றவன் கண்ணெக்கும்; பூவைப்
புதுமல ரொக்கு நிறம். 1

(பதவுரை.) மதி–சந்திரனை, மன்னும்–அழியாத, மாயவன்–விசித்திர சக்தியையுடைய இறைவனது, வாள்முகம் ஒக்கும்–விளக்கமாகிய முகம் ஒத்திருக்கும்; கதிர் சேர்ந்த ஞாயிறு–கிரணங்கள் நிரம்பிய சூரியனை, சக்கரம் ஒக்கும்–(அவனது சுதரிசனமென்னும்) சக்கரம் ஒத்திருக்கும்; முது நீர்–நிலையாயுள்ள நீரையுடைய, பழனத்து–வயலில்முளைத்த, தாளின்–தாளிலிருந்து, எதிர் – மேலெழுந்த, தாமரைமலர் – தாமரைப் பூவை, அவன் கண் ஒக்கும்–அவனது கண்களொத்திருக்கும்; பூவைப் புது மலர் – காயாவினது புதியமலரை, நிறம் ஒக்கும் – அவனது திருமேனி ஒத்திருக்கும்.

*படியை மடியகத் திட்டான்; அடியினுல்
முக்காற் கடந்தான் முழுநிலம்: அக்காலத்
†தானிரை தாங்கிய குன்றெடுத்தான்; சோவின்
அருமை யழித்த மகன். 2

(ப–ரை.) படியை – (அவ்விறைவன்) உலகத்தை, மடியகத்து – (தனது) வயிற்றினுள், இட்டான்–(உண்டு அடக்கி) வைத்தான்; அடியினுல்–தனது சீர்பாதங்களினுல், முழு நிலம்–எல்லாவுலகங்களையும், முக்கால்–மூன்று அடியாக, கடந்தான்–தாவியளந்தான்; அக்காலத்து–இந்தி

* 'படையை மடியகத்திட்டான்' எனவும் பாடம் உண்டு. இதற்கு '(சுதரிசனம் என்னும்) ஆயுதத்தை, (பாரதப்போரில்) ஒளியின் சிறுமையில் வைத்தான்' என்று பொருள் கொள்க.

† 'ஆபனி தாங்கிய' என்பதும் பாடம். இதற்கு 'பசுக்களினது நடுக்கத்தை எற்றுக் கொள்வதற்கு' எனப் பொருள் கொள்க.

ரன் மழைபெய்வித்த காலத்தில், ஆன்நிரை பசுக்களினது கூட்டத்தை, தாங்கிய – பாதுகாத்தற்கு, குன்று எடுத்தான் – கோவர்த்தனகிரியைக் குடையாக எடுத்தான்; சோவின் அருமை – (பாணசுரனுடைய) நெருப்புமதிலினது அருமையை, அழித்த மகன் – அழியச்செய்த (மகா) புருஷன்.

நூல்.

எள்ளற்க வென்று மெளியாரென்று; என்பெறினும்
கொள்ளற்க கொள்ளார்கைம் மேலவா:–உள்சுடினும்
சீறற்க சிற்றிற் பிறந்தாரை; கூறற்க
கூறல்ல வற்றை விரைந்து. 1

(ப–ரை.) என்றும் – நட்பாகவருங் காலத்திலும், எளியார் எஞ்ஞா– (வலிமுதலியன) குறைந்தவரென்று, எள்ளற்க–(பகைவரை ஒருவன்) இகழாதிருக்கக்கடவன்; என் பெறினும்–சிறந்தபொருளைப் பெறுவதா யிருந்தாலும், கொள்ளார் கை–கொள்ளத்தகாதவருடைய கைகள், மேல ஆ–(தன் கைகளுக்கு) மேற்பட்டன ஆகும்படி, கொள்ளற்க–(அப்பொ ருளை) இரவாதிருக்கக்கடவன்; உள் சுடினும்–(வறிய குடியிற்பிறந்தார் செய்கை) மனத்தை வருத்தினும், சிறு இல் பிறந்தாரை – அவ்வறிய குடியிற் பிறந்தவரை, சீறற்க – சீறாதிருக்கக்கடவன்; கூறு அல்லவற் றை – சொல்லத்தகாத சொற்களை, விரைந்து கூறற்க – (சொல்வதில்) விரைந்து சொல்லாதிருக்கக்கடவன்.

பறைபட வாழா வசுணமா; உள்ளம்
குறைபட வாழார் பெரியோர்;—நிறைவனத்து
நெற்பட்டக் கண்ணே வெதிர்சாம்; தனக்கோவ்வாச்
சொற்பட வாழாதாஞ் சால்பு. 2

(ப–ரை.) அசுணமா – கேகயப்பறவைகள், பறைபட – பறையி னொலி (செவியில்) பட்டால், வாழா – உயிர்வாழா; பெரியோர் – மிக்க மானமுடையோர், உள்ளம் குறைபட – (மானக்கேட்டால்) தமது ஊக் கம் சுருங்கும்படி, வாழார் – உயிர்வாழார்; நிறை வனத்து – (மரங்கள் அடர்ந்தவனத்தில், வெதிர்–மூங்கில், நெற்பட்டக்கண்ணே–நெல்லுண் டானபோதே, சாம்–அழியும்; சால்பு–(பல நற்குணங்களாலும்) நிறைந்த வன், தனக்கு ஒவ்வாத–தன்னிறைவுக்குத் தகாத, சொல்பட வாழாது– சொல்லுண்டாக உயிர்வாழான்:

மண்ணி யறிப மணிநலம்; பண்ணமைத்
தேறிய பின்னறிப மாநலம்; மாசறச்
சுட்டறிப பொன்னி னலங்காண்பார்; கெட்டறிப
கேளிரா லாய பயன். 3

(ப–ரை.) மணி நலம் (காண்பார்) – இரத்தினத்தினது குணத்தை அறியு மியல்பினர், மண்ணி அறிப – கழுவி அறிவார்கள்; மா நலம் (காண்பார்) – குதிரையினது குணத்தை அறியுமியல்பினர், பண் அமைத்து – சேணத்தை (அதன்மேல்) பொருந்தவைத்து, ஏறியபின் – ஏறின பின், அறிப – அறிவார்கள்; பொன்னின் நலம் காண்பார் – பொன்னினது குணத்தை அறியு மியல்பினர், மாசு அற – தற்றம் நீங்கும்படி, சுட்டு அறிப – தீயிற்சுட்டு அறிவார்கள்; கேளிரால் – உறவினரால், ஆய பயன் (காண்பார்) – உண்டாகும் பயனை அறியும் இயல்பினர், கெட்டு அறிப – (தமது செல்வம்) கெட அறிவார்கள்.

கள்ளி வயிற்றி னகில்பிறக்கும்; மான்வயிற்றின்
ஒள்ளரி தாரம் பிறக்கும்; பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும்; அறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி? 4

(ப–ரை.) அகில் – அகிற்கட்டை, கள்ளி வயிற்றின் பிறக்கும் – கள்ளிமரத்தினுள்ளே பிறக்கும்; ஒள் அரிதாரம் – ஒண்மையாகிய அரிதாரம், மான் வயிற்றின் பிறக்கும் – மான் வயிற்றிற் பிறக்கும்; பல் விலைய முத்தம் – மிக்க விலையுள்ள முத்துகள், பெருங்கடலுள் பிறக்கும் – பெருமையாகிய கடலிற் பிறக்கும்; நல் ஆள் – நற்குண நற்செய்கைகளே ஆளுதலுடையான், பிறக்கும் குடி – பிறக்குங் குடியை, அறிவார் யார் – முன் அறியவல்லவர் யாவர்? (ஒருவருமிலர்).

கல்லிற் பிறக்குங் கதிர்மணி; காதலி
சொல்லிற் பிறக்கு முயர்மதம்; மெல்லென்
றருளிற் பிறக்கு மறநெறி; எல்லாம்
பொருளிற் பிறந்து விடும். 5

(ப–ரை.) கதிர்மணி – கிரணங்களையுடைய இரத்தினம், கல்லில் பிறக்கும் – மலையில் பிறக்கும்; உயர் மதம் – மிக்க மயக்கம், காதலி – விரும்பப்பட்ட நாயகியினது, சொல்லில் பிறக்கும் – இன்சொல்லிலே பிறக்கும்; அற நெறி – தருமம் நடக்கும் வழி, மெல் என்ற – மென்மையான, அருளில் பிறக்கும் – கருணையில் பிறக்கும்; எல்லாம் – (அறமுத

லிய) எல்லாம், பொருளில் பிறந்துவிடும்–செல்வப்பொருளில் பிறந்து விடும்.

திருவொக்குந் தீதி லொழுக்கம்; பெரிய
அறனெக்கு மாற்றி னொழுகல்;—பிறனைக்
கொலையொக்குங் கொண்டுகண் மாறல்; புலையொக்கும்
போற்றுதார் முன்னர்ச் செலவு. 6

(ப–ரை.) தீது இல் ஒழுக்கம்–(ஒருவர் தம் வருணத்துக்குக்) குற்றம் உண்டாகாத ஒழுக்கம், திரு ஒக்கும்–செல்வத்தை ஒக்கும்; ஆற்றின்–இல்லறவழியில், ஒழுகல்–(தவறுமல்) நடத்தல், பெரிய அறன் ஒக்கும்–சிறந்த துறவறத்தை ஒக்கும்; பிறனைக் கொண்டு–(ஆராயாமல்) பிறனொருவனை நட்புக்கொண்டு, கண்மாறல்–புறங்கூறல், கொலை ஒக்கும்–கொலையை ஒக்கும்; போற்றுதார் முன்னர் செலவு–(ஒரு பயன் பெறவேண்டிப்) பகைவரிடத்துச் செல்லுதல், புலை ஒக்கும்–(கீழ்மை ஆது) இழிதன்மையை ஒக்கும்.

கள்வமென் பார்க்குந் துயிலில்லை; காதலிமாட்
டுள்ளம்வைப் பார்க்குந் துயிலில்லை; ஒண்பொருள்
செய்வமென் பார்க்குந் துயிலில்லை; அப்பொருள்
காப்பார்க்கு மில்லை துயில். 7

(ப–ரை.) கள்வம் என்பார்க்கும்–(பிறர் பொருளைக்) களவு செய்வோமென்று சோர்வு பார்ப்பவருக்கும், துயில் இல்லை–நித்திரையில்லை; காதலிமாட்டு–விரும்பப்பட்ட நாயகியினிடத்து, உள்ளம் வைப் பார்க்கும்–உள்ளத்தை (இடைவிடாது) வைப்பவருக்கும், துயில் இல்லை–நித்திரையில்லை; ஒள் பொருள்–ஒள்ளியபொருளை, செய்வம் என்பார்க்கும்–தேடுவோமென்று கருதுவார்க்கும், துயில் இல்லை–நித்திரையில்லை; அப்பொருள் காப்பார்க்கும்–தேடியபொருளைக் (கள்ளர் கொள்ளாமல்) காப்பவர்க்கும், துயில் இல்லை–நித்திரையில்லை.

கற்றூர்முற் றேன்று கழிவிரக்கம்; காதலித்தொன்
றுற்றூர்முற் றேன்று வுருமுதல்;—தெற்றென
அல்ல புரிந்தார்க் கறந்தோன்று; எல்லாம்
வெகுண்டார்முற் றேன்றுக் கெடும். 8

(ப–ரை.) கற்றூர்முன்–(நூல்களைக்) கற்றறிந்தவரிடத்து, கழிவு இரக்கம்–கழிந்தபொருளுக்கு இரங்குதல், தோன்று–உண்டாகா; காதலித்த ஒன்று–விரும்பப்பட்ட ஒருபொருளை, உற்றூர்முன்–தேடத்

தொடங்கினரிடத்து, உரைமுதல்–(அப்பொருள்) கிடையாத காரணங்கள், தோன்றா–உண்டாகமாட்டா; தெற்றென–தெளிய, அல்ல புரிந்தார்க்கு–தீவினைகளே விரும்பிச் செய்தவர்க்கு, அறம் தோன்றா–அறச் செய்கைகள் தோன்றமாட்டா; வெகுண்டார்முன்–கோபித்தவரிடத்து, எல்லாம்–(பிறர்கூறும்) நன்மைகளெல்லாம், தோன்றா கெடும்–தோன்றுதனவாகிக் கெடும்.

நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்பும்;
குளத்துக் கணியென்ப தாமரை; பெண்மை
நலத்துக் கணியென்ப நாணம்; தனக்கணிதான்
செல்லு முலகத்த தாம். 9

(ப–ரை.) நிலத்துக்கு–மருதநிலத்துக்கு, நெல்லும் கரும்பும்–நெற் பயிரையும் கரும்பின் பயிரையும், அணி என்ப–அழகென்று சொல்லுவர்; குளத்துக்குத் தாமரை–குளத்தினுக்குத் தாமரைமலரை, அணி என்ப–அழகென்று சொல்லுவர்; பெண்மை நலத்துக்கு–பெண்தன்மைக்குரிய கற்பாகிய நன்மைக்கு, நாணம்–நாணமுடைமை, அணி என்ப–அழகென்று சொல்லுவர்; தனக்கு அணி–(அக்கற்புடையாளோடு கூடிய) ஒருவனுக்கு அழகாவது, செல்லும் உலகத்தது (என்ப)–இனிச் செல்லும் உலகத்துக்குத் துணையாகிய அறமென்று சொல்லுவர்.

கந்திற் பிணிப்பர் களிற்றை; கதந்தவிர
மந்திரத் தாற்பிணிப்பர் மாநாகம்;—கொந்தி
இரும்பிற் பிணிப்பர் கயத்தை;சான் றோரை
நயத்திற் பிணித்து விடல். 10

(ப–ரை.) களிற்றை–யானையை, கந்தின் பிணிப்பர்–(பாகர்கள்) கட்டுத்தறியினாலே தம் வசப்படுத்துவார்; மாநாகம்–சிறந்த சர்ப்பத்தை, கதம் தவிர–அதன் கோபம் நீங்கும்படி, மந்திரத்தால் பிணிப்பர்–(மாந்திரிகர்) மந்திரத்தினால் தம் வசப்படுத்துவார்; கயத்தை–கீழ்மக்களை, கொந்தி–(அரசர் ஆயுதங்களால் அவருடலைக்) கொத்தி, இரும்பின் பிணிப்பர்–இருப்பு விலங்கால் தம் வசப்படுத்துவார்; சான்றோரை–(கல்வி யறிவு ஒழுக்கங்களால்) நிறைந்தவரை, நயத்தின் பிணித்து விடல்–(அறிவுடையோர்) இன்சொற்களால் தம் வசப்படுத்தி விடக் கடவர்.

கன்முமை வேண்டுங் கடிய; பிறர்செய்த
நன்றியைக் கொல்லாக் கொளல்வேண்டும்; என்றும்
விடல்வேண்டுந் தங்கண் வெகுளி; அடல்வேண்டும்
ஆக்கஞ் சிதைக்கும் வினை. 11

(ப–ரை.) (பிறர் செய்த) கடிய–(ஒருவர் தமக்கு) மற்றவர் செய்த அஞ்சத்தக்க தீச்செயல்களில், கன்முமை வேண்டும்–வயிரங் கொள்ளாதிருத்தலே தகுதி; பிறர் செய்த நன்றியை–(தமக்குப்) பிறர் செய்த உபகாரத்தை, கொல்லாது–சிதைக்காமல், கொளல்வேண்டும்–மறவாதிருத்தலே தகுதி; என்றும்–(பிறர் பொறுக்கக்கூடாத தீங்கு செய்த) காலத்தும், தங்கண் வெகுளி–தம்மிடத்துண்டாகும் கோபத்தை, விடல் வேண்டும்–ஒழிதலே தகுதி; ஆக்கம்–(தமது) செல்வத்தை, சிதைக்கும் வினை–கெடுக்குந் தொழிலை, அடல் வேண்டும்–கெடுத்தலே தகுதி.

பல்லினு னெய்செய்யும் பாம்பெலாம்; கொல்லேற்று
கோட்டானெய் செய்யும்; குறித்தாரை யூடி
முகத்தானெய் செய்வர் மகளிர்; முனிவர்
தவத்தாற் றருகுவர் நோய். 12

(ப–ரை.) பாம்பு எல்லாம்–எல்லாச்சாதிப் பாம்புகளும், பல்லினுல் நோய் செய்யும்–(தீங்குசெய்த பிறரை) விஷப்பல்லால் துன்பஞ்செய்யும்; கொல் ஏறு–கொல்லு மியல்புடைய எருதுகள், குறித்தாரை–(நோய்செய்யக்) குறிக்கப்பட்டவரை, கோட்டால் நோய் செய்யும்–தம் கொம்புகளால் துன்பஞ்செய்யும்; மகளிர்–பெண்கள், ஊடி–பிணங்கி, முகத்தால் நோய் செய்வர்–(ஓர் கணவரை) முகக் குறியால் துன்பஞ் செய்வர், முனிவர்–முனிவர்கள், தவத்தால்–தவத்தின் வல்லமையால், நோய் தருகுவர்–(தம்மை அவமதித்தவருக்குத்) துன்பத்தைக் கொடுப்பார்.

பறைநன்று பண்ணமையா யாழின்; நிறைநின்ற
பெண்ணன்று, பீடிலா மாந்தரின்;—பண்ணழிந்
தார்தலி னன்று பசித்தல்; பசைந்தாரின்
நீர்தலிற் றீப்புகுத னன்று. 13

(ப–ரை.) பண் அமையா–சுரம்பிழுல் கட்டுதலமையாத, யாழின்–யாழிசையினும், பறை நன்று–பறையோசை நன்மை யுடையது; பீடு இ(ல்)லா(த) மாந்தரின்–பெருங்குணமில்லாத ஆடவர் தன்மையினும், நிறை நின்ற–மனத்தைக் கற்புவழியில் நிறுத்தலமைந்த, பெண் நன்று–

பெண்தன்மை நன்மையுடையது; பண் அழிந்த–பதனழிந்த உணவுகளை, ஆர்தலின்–உண்ணுதலினும், பசித்தல்–பசியால் வருந்துதல், நன்று–நன்மையுடையது; பசைந்தாரின்–உள்ளன்பு உடையாரினின்றும், தீர்தலின்–நீங்கி உயிர்வாழ்வதினும், தீப்புகுதல் நன்று–தீயில் நுழைதல் நன்மையுடையது.

வளப்பாத்தி யுள்வளரும் வண்மை; கிளைக்குழாம்
இன்சொற் குழியு ளினிதெழூஉம்; வன்சொலாம்
கரவெழூஉங் கண்ணில் குழியுள்; இரவெழூஉம்
இன்மைக் குழியுள் விரைந்து. 14

(ப–ரை.) வண்மை–ஈகையாகிய பயிர், வளப்பாத்தியுள் வளரும்–(நல்லோருடைய) செல்வமாகிய பாத்தியில் வளரும்; கிளைக் குழாம்–சுற்றத்தின் கூட்டமாகிய பயிர், இன்சொல் குழியுள்–இன்சொல்லாகிய பாத்தியில், இனிது எழும்–இடையூறில்லாமல் வளரும்; வன்சொல் ஆம் கா–கடுஞ்சொல்லாகிய சோலை, கண் இல் குழியுள்–கண்ணோட்ட மின்மையாகிய விளைநிலத்தில், எழும்–வளரும்; இரவு–இரத்தலாகிய பயிர், இன்மைக் குழியுள்–வறுமையாகிய பாத்தியில், விரைந்து எழும்–விரைவாக வளரும். ['எழும்' என்பது செய்யுளின்பநோக்கி 'எழூஉம்' என அளபெடுத்தது.]

இன்னுமை வேண்டி னிரவெழூஉ; இந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக; தன்னொடு
செல்வது வேண்டி னறஞ்செய்க; வெல்வது
வேண்டின் வெகுளி விடல். 15

(ப–ரை.) இன்னுமை வேண்டின்–(ஒருவன்) இழிவை விரும்புவானெனில், இரவு எழுக–(மானங்கெடவரும்) இரத்தலுண்டாகக்கடவன்; இந்நிலத்து–இவ்வுலகில், மன்னுதல் வேண்டின்–தான் நிலை பெறுதலை விரும்புவானெனில், இசை நடுக–புகழை நாட்டக்கடவன்; தன்னொடு செல்வது வேண்டின்–(மறுமைக்குத்) தன்னுடனே செல்லுந் துணையாவதனை விரும்புவானெனில், அறம் செய்க – தருமத்தைச் செய்யக்கடவன்; வெல்வது வேண்டின்–(தீய சிந்தைகளை) வெல்லுங் கருவியை விரும்புவானெனில், வெகுளி விடல்–சினத்தை விடக்கடவன்.

கடற்குட்டம் போழ்வர் கலவர்; படைக்குட்டம்
பாய்மா வுடையா னுடைக்கிற்கும்; தோமில்
தவக்குட்டந் தன்னுடையா னீந்தும்; அவைக்குட்டம்
கற்றுன் கடந்து விடும். 16

(ப—ரை.) கலவர்—மாக்கலமுடையார், கடல்—கடலினது, குட்டம்—ஆழமாகிய நீரை, போழ்வர்—ஊடறுத்துச் செல்வர்; பாய் மா உடையான்—(போர்முகத்தில் அஞ்சாமல்) பாயுமியல்புள்ள குதிரையையுடைய வீரன், படைக்குட்டம்—(பகைவரது) சேனையாகிய கடற் கரையை, உடைக்கிற்கும்—உடைக்கமாட்டுவான்; தன் உடையான்—(ஐம்புலன்களிற் செல்லவிடாமல்) மனத்தைத் தன்வசப்படுத்தினவன், தோம் இல்—குற்றமில்லாத, தவக்குட்டம்—தவமாகியகடலை, நீந்தும்—நீந்துவான்; கற்றான்—(நூல்களை ஐயமறக்) கற்றுணர்ந்தவன், அவைக்குட்டம்—(கற்றவர்கூடிய) சபையாகிய கடலை, கடந்துவிடும்—தாண்டிவிடுவான்.

பொய்த்த லிறுவாய நட்புகள்; மெய்த்தாக
மூத்த லிறுவாய்த் திளைநலம்; தூக்கில்
மிகுதி யிறுவாய செல்வங்கள்; தத்தம்
தகுதி யிறுவாய்த் துயிர். 17

(ப—ரை.) நட்பு—நட்புக்கள், பொய்த்தல்—பொய்யாக ஒழுகுதலாகிய, இறுவாய—இறுதியுடையன; இளை நலம்—இளமைப்பருவத்தினழகு, கண்மெய்த்து ஆக—(காண்போர்) கண்களுக்கு மெய்மையுடையதாக, மூத்தல் இறுவாய்த்து—மூப்பாகிய இறுதியையுடையது; செல்வங்கள்—செல்வங்கள், தூக்கு இல்—(இம்மை மறுமைப்பயன்களை) ஆராய்தலில்லாத, மிகுதி இறுவாய—வேண்டாத செய்கையாகிய இறுதியையுடையன; தத்தம்—தங்கள் தங்களது இருவினைக்கும், தகுதி இறுவாய்த்து உயிர்—தகுந்த வாழ்நாளாகிய இறுதியையுடையது உயிர்.

மனைக்காக்க மாண்ட மகளிர்; ஒருவன்
வினைக்காக்கஞ் செவ்விய னுதல்; சினச்செவ்வேல்
நாட்டாக்க நல்லனிவ் வேந்தென்றல்; கேட்டாக்கம்
கேளி ரொரீஇ விடல். 18

(ப—ரை.) மாண்ட மகளிர்—நற்குண நற்செய்கையுடைய பெண்டிருத்தல், மனைக்கு ஆக்கம் — (கொண்டவனுடைய) மனைக்கு உயர்வைத் தருவதாகும்; சினம் — கோபமமைந்த, செம் வேல் — (பகைவருதிரத்தில் தோய்ந்ததினால்) செந்நிறமாகிய படைத்தொழிலில் ஒருவன், செவ்வியன் ஆதல் — ஒருவன் தேர்ச்சியுடையவனாகுதல், வினைக்கு ஆக்கம் — போருக்கு உயர்வைத் தருவதாகும்; இவ்வேந்து — இவ்

வரசன், நல்லன் என்றல் – நல்லவனென்று (குடிகளால்) சொல்லப் படுதல், நாடு ஆக்கம்–(அவனுளும்) நாட்டுக்கு உயர்வைத் தருவதாகும்; கேளிர் – சுற்றத்தாரை, ஓரீஇ விடல் – (ஒருவன்) நீங்கிவிடுதல், கேடு ஆக்கம்–(அவனுக்கு வரும்) கேட்டுக்கு உயர்வைத் தரும் (அதாவது மிக்க கேட்டை விளைக்கும் என்பதாம்).

பெற்ரு னதிர்ப்பிற் பிணையன்னு டானதிர்க்கும்;
கற்ரு னதிர்ப்பிற் பொரு ளதிர்க்கும்; பாரிய
மண்ணதிர்ப்பின் மன்னவன் கோலதிர்க்கும்; பண்ணதிர்ப்பின்
பாட லதிர்ந்து விடும். 19

(ப–ரை) பெற்ரூன்–கொண்ட கணவன், அதிர்ப்பின்–(இல்லறத் துக்குரிய ஒழுக்கத்தினின்று) கலங்குவானுயின், பிணை அன்னுள்– பெண்மானை ஒத்த அவன் மனையாளும், அதிர்க்கும் – (அவ்வொழுக் கத்தினின்று) கலங்குவாள்; கற்ரூன் அதிர்ப்பின் – (நூல்களைக் கற் றுணர்ந்தவன் (அறிவு) கலங்குவானுயின், பொருள் அதிர்க்கும் – (அந் நூலா லுணர்த்தப்பட்ட) பொருள்களும் கலங்கும்; பாரிய மண் அதிர்ப்பின்–தன் பெரிய நாட்டிலுள்ளார் (தன் ஆளுகைக்குள் அமை யாமல்) கலங்குவாரானுல், மன்னவன் கோல் அதிர்க்கும்–அரசனுடைய ஆளுமுறையுங் கலங்கும்; பண் அதிர்ப்பின் – யாழின் கட்டுநிலை கலங்குமானுல், பாடல் அதிர்ந்துவிடும் – பாடுதற்ரொழிலும் கலங்கி விடும்.

மனைக்குப்பாழ் வாணுத லின்மை;தான் செல்லும்
திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை; இருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை யின்மை; தனக்குப்பாழ்
கற்றறி வில்லா வுடம்பு. 20

(ப–ரை.) மனைக்குப் பாழ் – வீட்டுக்குப் பொலிவின்மையாவது, வாணுதல் இன்மை–(நற்குண நற்செய்கையுடைய) மனையாளையுடைய தாயிராமை; தான் செல்லும் திசைக்குப் பாழ்–(ஒருவன்) தான் சென்ற இடத்துக்குப் பொலிவின்மையாவது, நட்டோரை இன்மை–(தன்னு டன்) நட்புக்கொண்டவரை உடையனுயிராமை; இருந்த அவைக்குப் பாழ்–(பலர்) கூடின சபைக்குப் பொலிவின்மையாவது, மூத்தோரை இன்மை–(கல்வியறிவு கேள்விகளால்) முதிர்ந்தவரை உடையதாயிரா மை; தனக்குப் பாழ்–தனக்குப் பொலிவின்மையாவது, கற்று அறிவு இல்லா உடம்பு–(பல நூல்களையும்) கற்றும் அறிதலில்லாத உடம்பி னையிருத்தல்.

171 ஆஎ

மொய்சிதைக்கு மொற்றுமை யின்மை; ஒருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலு மேனியை; பெய்த
கலஞ்சிதைக்கும் பாலின் சுவையை; குலஞ்சிதைக்கும்
கூடார்கட் கூடி விடின். 21

(ப–ரை.) ஒற்றுமை இன்மை–(தகுந்தவரோடு) ஒருமைப்பாடில் லாமை, மொய் சிதைக்கும்–தன் வலியை அழிக்கும்; பொய்–பொய் யானது, ஒருவனைப் பொன்போலும் மேனியை – (தன்னைக் கூறிய) ஒருவனது பொன்னை ஒக்கும் (உடலினது) நிறத்தை, சிதைக்கும்– அழிக்கும்; பெய்த கலம்–(பாலை) வார்த்த (கெட்ட) பாத்திரமானது, பாலின் சுவையைச் சிதைக்கும்–அப்பாலினது மதுரத்தை அழிக்கும்; கூடார்கண் – நட்புச்செய்யத்தகாதவரிடத்து, கூடிவிடின் – நட்புச் செய்துவிட்டால், குலம் சிதைக்கும்–(அந்நட்பானது) தன் குலத்தி னது பெருமையை அழிக்கும்.

புகழ்செய்யும் பொய்யா விளக்கம்; இகந்தோருவர்ப்
பேணது செய்வது பேதைமை; காணக்
குருடனைச் செய்வது மம்மர்; இருடீர்ந்த
கண்ணராச் செய்வது கற்பு. 22

(ப–ரை.) பொய்யா விளக்கம்–பொய் சொல்லாமையாகிய விளக் கம், புகழ் செய்யும்–புகழை உண்டாக்கும்; பேதைமை–யாதும் அறியா மை, ஒருவர் பேணுது–பெரியாரொருவரை (த்துணையாக) விரும்பா மல், இகந்து – (அறத்தினெல்லை) கடந்து, செய்வது – (தீங்கினைச்) செய்யவல்லது; மம்மர் – (கல்லாமையால் வரும்) மயக்கம், காணுத– (செல்லும் வழியினியல்பை) அறியாத, குருடன் ஆக செய்வது – (ஒருவனைக்) குருடனாகச் செய்யவல்லது; கற்பு–கல்வியறிவு, இருள் தீர்ந்த–மயக்கத்தினின்று நீங்கிய, கண்ணர் ஆக செய்வது–கண்களு டையராகச் செய்யவல்லது.

மலைப்பினும் வாரணந் தாங்கும்; அலைப்பினும்
அன்னையென் றேடுங் குழவி; சிலைப்பினும்
நட்டார் நடுங்கும் வினைசெய்யார்; ஒட்டார்
உடனுறையுங் காலமு மில். 23

(ப–ரை.) மலைப்பினும்–(தன்னோடு பாகன்) போர் செய்தாலும், வாரணம் தாங்கும்–யானை (அவனைத்) தாங்காநிற்கும்; அலைப்பினும்– (தன்னைத் தாய்) அடித்து வருத்தினாலும், குழவி–பிள்ளை, அன்னை

என்று ஓடும்–தாயே என்று சொல்லிக்கொண்டு (அவள் பின்னே) ஓடும்; நட்டார் – நட்புக்கொண்டவர், சிலப்பினும்–(ஒரு பொருளைப் பற்றித் தம்மில் கோபங்கொண்டு) உரத்துப்பேசினும், நடுங்கும் வினை செய்யார் – ஒருவருக்கு (ஒருவர்) நடுங்குதற்கேதுவாகிய தொழிலைச் செய்யார்; ஒட்டாரும்–பகைவரும், உடன் உறையும்–(ஒருவரை ஒருவர் மனத்தால்) பிரியாமல் நட்புக்கொள்ளும், காலம் இல்–காலமில்லை.

நகைநல நட்டார்க ணைந்தும்; சிறந்த
அவைநல மன்பின் விளங்கும்; விசைமாண்ட
தேர்நலம் பாகனூற் பாடெய்தும்; ஊர்நலம்
உள்ளாளு ளுள்ளப் படும். 24

(ப–ரை.) நகை நலம்–முகமலர்ச்சியினது நன்மை, நட்டார்கண்–நட்புக்கொண்டவர்களுக்குள், நந்தும்–சிறக்கும்; சிறந்த அவை நலம்–(கற்றறிந்தவர் கூடியதனுல்) சிறந்த சபையினது நன்மை, அன்பின் விளங்கும்–(அக்கற்றவர்கள் ஒருவர்பால் ஒருவர் வைத்த) அன்பினுலே விளங்கும்; விசை மாண்ட–விரைந்தோடுதல் மிகுந்த, தேர் நலம்–தேரினது நன்மை, பாகனுல் – (நடத்துந் தேர்ச்சியுள்ள) சாரதியினுல், பாடு எய்தும்–பெருமையடையும்; ஊர் நலம்–நாட்டினது நன்மை, உள்ளாளுல்–உடைய அரசனுல், உள்ளப்படும்–நன்கு மதிக்கப்படும்.

அஞ்சாமை யஞ்சுதி; ஒன்றிற் றனக்கொத்த
எஞ்சாமை யெஞ்ச லளவெல்லாம்; நெஞ்சறியக்
கோடர்மை கோடி; பொருள்பெறினு நாடாதி
நட்டார்கண் விட்ட வினை. 25

(ப–ரை.) அஞ்சாமை–(பழிபாவங்களே) அஞ்சாதிருத்தலை, அஞ்சுதி–அஞ்சுவாய்; அளவு எல்லாம் – (தேகத்தோடு கூடிவாழ) அளவு செய்த நாளெல்லாம், ஒன்றின்–கூடுமாயின், தனக்கு ஒத்த–வருணத்துக்குத் தகுந்த ஒழுக்கங்களினின்று, எஞ்சாமை–சுருங்காமை, எஞ்சல்–சுருங்காதே; நெஞ்சு அறிய–மனமறிய, கோடாமை–(யாவரிடத்தும்) நடுவாக நிற்றலை, கோடி–கொள்ளுவாய்; பொருள் பெறினும்–மிக்கபொருள் பெறுவதாயிருப்பினும், நட்டார்கண்–(தேறிக்கொண்ட) நட்பினரிடத்து, விட்டவினை – செய்யவிட்ட தொழிலை, நாடாதி–ஆராயாமலிரு.

அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்;
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்;
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்;
கொலைப்பாலுங் குற்றமே யாம். 26

(ப–ரை.) பிற உயிரை – (தன்னின்) வேறுயினவாகிய பிராணிகளை, அலைப்பான்–கொல்லுதற்பொருட்டு, ஆக்கலும் – வளர்த்தலும், குற்றம்–குற்றமான காரியமாகும்; ஊன்–மாமிசத்தை, விலைப்பாலில்–விலையினது உரிமையினால், கொண்டு–வாங்கி, மிசைதலும்–உண்ணுதலும், குற்றம்–குற்றமான காரியமாகும்; சொலல்பால – சொல்லுதற்குரிய தன்மையையுடையன, அல்லாத–அல்லாதனவாகிய சொற்களை, சொல்லுதலும்–சொல்லுதலும், குற்றம்–குற்றமான காரியமாகும்; கொலைப்பாலும் – (ஒருயிரைக்) கொல்லுதலாகிய தன்மையும், குற்றமே ஆம்–குற்றமான காரியமேயாகும்.

கோனோக்கி வாழுங் குடியெல்லாம்; தாய்தரூஉம்
பானோக்கி வாழுங் குழவிகள்; வானத்
துளிநோக்கி வாழு முலகம்; உலக
விளிநோக்கி யின்புறூஉங் கூற்று. 27

(ப–ரை.) குடி எல்லாம் – குடிகளெல்லாம், கோல் நோக்கி வாழும்–(தம்மரசனது) செங்கோலை நோக்கி வாழாநிற்கும்; குழவிகள் (எல்லாம்) – இளம்பிள்ளைகளெல்லாம், தாய் – தங்கள் தாய், தரூஉம் பால் நோக்கி – தருகின்றபாலை நோக்கி, வாழும் – வாழாநிற்கும்; உலகம் (எல்லாம்)–உலகத்துயிர்களெல்லாம், வானத் துளி நோக்கி–மேகத்தினது பெயலை நோக்கி, வாழும்–வாழாநிற்கும்; கூற்று–யமன், உலக விளி நோக்கி–உலகத்துயிர்களினது சாதலை நோக்கி, இன்பு உறும்–மகிழாநிற்பன்.

கற்பக் கழிமட மஃகும்; மடமஃகப்
புற்பந்தீர்ந் தில்வுலகின் கோளுணரும்; கோளுணர்ந்தான்
தத்துவ மான நெறிபடரும்; அந்நெறி
இப்பா லுலகி னிசைநிறீஇ யுப்பால்
உயர்ந்த வுலகம் புகும். 28

(ப–ரை.) கற்ப–(ஒருவன் நூல்களை) கற்பதினால், கழி மடம் – மிகுதியாகிய பேதைமை, அஃகும் – குறைவான்; மடம் அஃக–அறியாமை நீங்குவதினால், புற்பம் தீர்ந்து – புல்லறிவு நீங்கி, இவ்வுலகின்

கோள்–இவ்வுலகத்தினது இயல்பினை, உணரும் – அறிவான்; கோள் உணர்ந்தான்–அவ்வியற்கையை உணர்ந்தவன், தத்துவம் ஆன நெறி–உண்மையாகிய வழியில், படரும் – செல்லுவான்; அந்நெறி – சென்ற அவ்வழியினால், இப்பால் – இம்மையில், உலகின்–உலகத்தில், இசை நிறீஇ – புகழை நிலைபெறச்செய்து, உப்பால் – மறுமையில், உயர்ந்த உலகம் – (எல்லாவுலகங்களினும்) உயர்ந்த முத்தியுலகத்தில், புகும் – புகுவான்.

குழித்துழி நிற்பது நீர்;தன்னைப் பல்லோர்
பழித்துழி நிற்பது பாவம்;—அழித்துச்
செறிவுழி நிற்பது காமம், தனக்கொன்
றுறுவுழி நிற்ப தறிவு. 29

(ப–ரை.) நீர்–நீரானது, குழித்த உழி – குழிசெய்யப்பட்ட இடத்திலே, நிற்பது – நிற்கும் இயல்புடையது; பாவம் – பாவமானது, பல்லோர்–(அறிவுடையோர்) பலராலும், பழித்த உழி – பழிக்கப்பட்டவனிடத்து, நிற்பது – நிற்கும் இயல்புடையது; காமம் – காமமானது, அழித்து – (உயர்ந்த தவ வொழுக்கத்தைக்) கெடுத்து, செறிவுழி – (தீய ஒழுக்கத்தில்) சேர்ந்தவனிடத்து, நிற்பது – நிற்கும் இயல்புடையது; அறிவு – கல்வியறிவானது, தனக்கு ஒன்று – கற்ற தனக்கொரு துன்பம், உறு உழி – வந்தகாலத்தில், நிற்பது – உதவி நிற்கும் இயல்புடையது.

திருவிற் றிறலுடைய தில்லை யொருவற்கு;
கற்றலின் வாய்த்த பிறவில்லை;—எற்றுள்ளும்
இன்மையி னின்னுத தில்லை;இல் லென்னுத
வன்மையின் வன்பாட தில். 30

(ப–ரை.) ஒருவற்கு – ஒருவனுக்கு, திருவின் – செல்வப்பொருள் போல, திறல் உடையது இல்லை – வலியுடையது (பிறிது) இல்லை; கற்றலின் – கல்வியறிவுபோல, வாய்த்த – நீங்காத துணைகள், பிற இல்லை – வேறில்லை, எற்றுள்ளும் – (துன்பந்தருவன ஆகிய) எல்லாவற்றிலும், இன்மையின் – வறுமைபோல, இன்னுதது இல்லை – துன்பந்தருவது வேறு இல்லை; இல் என்னுத – (அவ்வறியவர்க்கு) இல்லை என்று சொல்லாத, வன்மையின்–வல்லமைபோல, வன்பாடது இல்–வேறு வல்லமையானது இல்லை.

புகைவித்தாப் பொங்கழ லேன்றும்; சிறந்த
நகைவித்தாத் தோன்று முவகை;-பகையொருவன்
முன்னம்வித் தாக முளைக்கும்; முளைத்தபின்
இன்னுவித் தாகி விடும். 31

(ப–ரை.) பொங்கு அழல்–(மடைப்பள்ளியில்) எரிகின்ற தீயினது இருப்பு, புகைவித்து ஆக – (புறத்தில்) புகைகாரணமாக, தோன்றும்–விளங்கும்; உவகை–(உள்ளத்தில்) மகிழ்வினது இருப்பு, சிறந்த நகை–(புறத்தில்) மிக்கமுகமலர்ச்சி, வித்து ஆக – காரணமாக, தோன்றும்–விளங்கும்; பகை – (உள்ளத்திலுள்ள) பகைமைக்குணம், ஒருவன் முன்னம் – ஒருவனது குறிப்புச்செய்கை, வித்து ஆக – காரணமாக, முளைக்கும்–(புறத்தில்) தோன்றும்; முளைத்த பின்–தோன்றின பிற்காலத்து, இன்னு வித்து ஆகிவிடும்–(செய்யப்படும்) துன்பந்தருஞ் செய்கைகளுக்கு (அப்பகைமை) காரணமாய் முடியும்.

பிணியன்னர் பின்னேக்காப் பெண்டிர்; உலகிற்
கணியன்ன ரன்புடை மாக்கள்;—பிணிபயிரின்
புல்லன்னர் புல்லறிவி னுடவர்; கல்லன்னர்
வல்லென்ற நெஞ்சத் தவர். 32

(ப–ரை.) பின் நோக்காத பெண்டிர் – மேல்விளைவை ஆராயாத பெண்டிர்கள், பிணி அன்னர் – (கொண்ட கணவருக்கு) நோயை ஒப்பாவர்; அன்பு உடைய மாக்கள்–(சம்பந்தமுடையாரிடத்து) அன்புடைய மனிதர், உலகிற்கு – உலகத்துயிர்களுக்கு, அணி அன்னர்–ஆபரணத்தை ஒப்பாவார்; புல் அறிவின் ஆடவர் – சிற்றறிவையுடைய ஆண்மக்கள், பிணி பயிரின் – (நீரைக்) கட்டுகின்ற பயிரிலுள்ள, புல் அன்னர் – புல்லை ஒப்பாவர்; வல் என்ற – இளகுதலில்லாத, நெஞ்சத் தவர்–மனமுடையார், கல் அன்னர்–கல்லை ஒப்பாவர்.

அந்தணரி னல்ல பிறப்பில்லை; என்செயினும்
தாயிற் சிறந்த தமரில்லை; யாதும்.
வளமையோ டொக்கும் வனப்பில்லை; எண்ணின்
இளமையோ டொப்பதூஉ மில். 33

(ப–ரை.) அந்தணரின் பார்ப்பாரைப்போல, நல்ல பிறப்பு–உயர்ந்த பிறப்பினர், இல்லை – இலர்; என் செயினும் – (தனக்கு) என்ன தீங்கைச் செய்தாலும், தாயின் – தாயைப்போல, சிறந்த தமர் இல்லை–சிறந்த உறவினரிலர்; யாதும்–சிறிதும், வளமையோடு–செல்வத்தோடு,

ஒக்கும் – ஒப்பாகும், வனப்பு இல்லை – அழகு இலது; எண்ணின்– ஆராய்ந்தால், இளமையோடு – (எல்லா இன்பங்களையும் அநுபவித்தற் குரியதாகிய) இளமைப் பருவத்தோடு, ஒப்பதும் – ஒத்த பருவமும், இல்–இலது.

இரும்பி னிரும்பிடை போழ்ப; பெருஞ்சிறப்பின்
நீருண்டார் நீரான்வாய் பூசுப; தேரின்
அரிய வரியவற்றுற் கொள்ப; பெரிய
பெரியரா னெய்தப் படும். 34

(ப–ரை.) இரும்பு – இரும்பினை, இரும்பின் – இரும்பாற் செய்த கருவியால், இடை போழ்ப – (கொல்லர்) நடுவில் துண்டிப்பர்; பெரு சிறப்பின் – மிக்க சிறப்பினையுடைய, நீர்–(சோற்றோடு கூடிய) நீரை, உண்டார்–உண்டவர், நீரால்–நீரினாலே, வாய் பூசுப–உண்டவாயினைக் கழுவுவர்; தேரின் – ஆராயுமிடத்து, அரிய – (பிறரால் அடைதற்கு) அரிய பொருள்களை, அரியவற்றுல் – அருமையாகிய முயற்சிகளால், கொள்ப – (அறிவுடையோர்) செய்துகொள்வர்; பெரிய – பெரும் பேறுகள், பெரியரால் எய்தப்படும் – பேரறிவுடையோரால் அடையப்படும்.

மறக்களி மன்னர்முற் றோன்றும்; சிறந்த
அறக்களி யல்லாதார்க் கீயுமுற் றோன்றும்;
வியக்களி நல்கூர்ந்தார் மேற்றும்; கயக்களி
ஊரிற் பிளிற்றி விடும். 35

(ப–ரை.) மறக்களி – (வீரர்களுக்கு) வீரத்தால் வரும் களிப்பு, மன்னர்முன் – (தம்மையுடைய) அரசர்க்குமுன்னே, தோன்றும் – உண்டாம்; சிறந்த அறக்களி – (ஒருவன் மனத்தில்) மிக்க அறத்தால் வருங் களிப்பு, அல்லாதார்க்கு –.(மாறு ஈய) வலியில்லாதவர்க்கு, ஈயுமுன்–ஈயுமிடத்து, தோன்றும்–உண்டாம்; வியக்களி – பொருளுடையானுக்கு) ஏவுதலால்வருங்களிப்பு, நல்கூர்ந்தார் மேற்று ஆம் – (அவ்வேவுதல்) வறியாரிடத்ததாலுல் தோன்றும்; கயக்களி–கீழ்மைக்குணத்தால் வருங்களிப்பு, ஊரில் – (அக்குணமுடையோன் வாழும்) ஊரில், பிளிற்றிவிடும்–இரையும் (பலரும் அறியத்தோன்றும்.)

மையாற் றளிர்க்கு மலர்க்கண்கள்; மாலிருள்
நெய்யாற் றளிர்க்கு நிமிர்சுடர்; பெய்யல்
முழங்கத் தளிர்க்குங் குருகிலை; நட்டார்
வழங்கத் தளிர்க்குமா மேல். 36

(ப–ரை.) மலர் கண்கள் – (நீலோற்பலத்தின்) மலர்போலுங் கண்கள், மையால் தளிர்க்கும் – மையினால் நன்கு விளங்கும்; மால் இருள்–பேரிருளில், நிமிர் சுடர் – ஒளி மிகுகின்ற விளக்கம், நெய்யால் தளிர்க்கும் – நெய்யினால் நன்கு விளங்கும்; குருகு – குருக்கத்தி, பெய்யல் முழங்க–(மேகம்) பெய்தலுக்கு முழங்கினால், இலை தளிர்க்கும் – இலைகள் தளிர்க்கும்; மேல் – மேன்மைக்குணமுடையோர், நட்டார் வழங்க – உறவாயினர்க்கு வழங்கும்பொருட்டு, தளிர்க்கும்–பொருள் சிறப்பர்.

நகையினிது நட்டார் நடுவண்; பொருளின்
தொகையினிது தொட்டு வழங்கின்: வகையுடைப்
பெண்ணினிது பேணி வழிபடில்: பண்ணினிது
பாட லுணர்வா ரகத்து. 37

(ப–ரை.) நகை – முகமலர்ச்சி, நட்டார் நடுவண் – நட்பாயினர்க்குள், இனிது – (அவர்க்கு) இன்பந் தருவதாகும்; பொருளின் தொகை – பொருளின் திரள், தொட்டு – (வெறுப்பில்லாமல்) எடுத்து, வழங்கின் – (உடையோரால் அறத்தின்பொருட்டுக்) கொடுக்கப்பட்டால், இனிது – இன்பந்தருவதாகும்; வகை உடை – (குணத்தின்) வகையையுடைய, பெண் – பெண்ணினது தன்மை, பேணி – (கணவனை உண்டி முதலியவற்றால்) காத்து, வழிபடின்–(அவனைத் செய்வமாகக் கருதி) வழிபாடுசெய்தால், இனிது – (யாவர்க்கும்) இன்பந் தருவது; பண் – பாலையாழ் முதலிபவை, பாடல் உணர்வாரகத்து–பாடுதற்றொழிலை அறிபவரிடத்து, இனிது–இன்பந்தருவன ஆகும்.

கரப்பவர்க்குச் செல்சார் கவிழ்தல்: எஞ் ஞான்றும்
இரப்பவர்க்குச் செல்சாரொன் றீவார்:–பரப்பமைந்த
தானைக்குச் செல்சார் தறுகண்மை: ஊனுண்டல்
செய்யாமை செல்சா ருயிர்க்கு. 38

(ப–ரை.) எஞ்ஞான்றும் – எந்நாளிலும், கரப்பவர்க்கு – ஒன்றும் ஈயாமல்) ஒளித்துவைக்கு மியல்புடையார்க்கு, செல் சார் – செல்லுதற்குரிய பற்றுக்கோடு, கவிழ்தல் – (அவரைக் கண்டவளவில்) முகங் கவிழ்தலாம்; இரப்பவர்க்கு – யாசிக்கு மியல்புடையார்க்கு, செல்சார்–செல்லுதற்குரிய பற்றுக்கோடு, ஒன்று ஈவார் – (அவர் வேண்டிய தாகிய) ஒரு பொருளைக் கொடுக்கு மியல்புடையார்; பரப்பு அமைந்த–போரில்) சோம்பலின்மையுள்ள, தானைக்குச் செல் சார்–சேனைக்குச் செல்லுதற்குரிய பற்றுக்கோடு, தறுகண்மை–(போர்முகத்தில்) இரக்க

மின்மை; உயிர்க்குச் செல் சார் – (ஒருவனது) உயிர்க்குச் செல்லுதற் குரிய பற்றுக்கோடு, ஊன் உண்டல் செய்யாமை – (மற்ற வுயிர்களி னது) தசையை உண்ணுமை.

கண்டதே செய்பவாங் கம்மியர்; உண்டெனக்
கேட்டதே செய்ப புலனுள்வார்; வேட்ட
இனியவே செய்ப வமைந்தார்; முனியாதார்
முன்னியவே செய்யுந் திரு. 39

(ப–ரை.) கம்மியர்–கம்மாளர், கண்டதே–(தாம்) கண்ட பொருள் போல்வதனையே, செய்ப–செய்யவல்லார்; புலன் ஆள்வார்–அறிவினை யாளுதலுடையார், உண்டு என–(பெரும்பயன்) உள்ளதென்று, கேட் டதே–(பெரியோர்பால்) கேட்ட அறத்தையே, செய்ப–செய்யவல்லார்; அமைந்தார் – (நற்குணங்களால்) நிறைந்தவர், வேட்ட – (தாம்) விரும் பினவற்றுள், இனியவே – (பிறர்க்கு) இனிமையாயினவற்றையே, செய்ப–செய்யவல்லார்; திரு–திருமகள், முனியாதார்–(தம்மின் எளி யாரிடத்தும்) கோபஞ் செய்யாதவர், முன்னியவே – கருதினவற்றை யே, செய்யும்–செய்வள்.

திருவுந் திணைவகையா னில்லா; பெருவலிக்
கூற்றமுங் கூறுவ செய்துண்ணு;—தாற்றி
மறைக்க மறையாதாங் காமம்; முறையும்
இறைவகையா னின்று விடும். 40

(ப–ரை.) திருவும்–செல்வங்களும், திணை வகையால்–குடியினது வகைகளில், நில்லா – (தக்கபடி) நிலைபெறு; பெரு வலி – மிக்க வலி யையுடைய, கூற்றமும் – யமனும், கூறுவ – (தன்னால் உண்ணப்படு பவனால்) சொல்லப்படுவனவற்றை, செய்து உண்ணுது – செய்து (பின் அவனுயிரைக்) கொள்ளான்; காமம் – காமமும், ஆற்ற மறைக்க வும் – மிகுதியாக மறைக்கவும், மறையாது–மறைபடாது; முறையும்– செங்கோலும், இறை வகையால்–அரசனது செய்கைவகையால், நின்று விடும்–நிலைத்துவிடும்.

பிறக்குங்காற் பேரெனவும் பேரா(து); இறக்குங்கால்
நில்லெனவு நில்லா(து) உயிரேனுத்தும்;—நல்லாள்
உடன்படிற் றானே பெருகும்; கெடும்பொழுதில்
கண்டனவுங் காணாக் கெடும். 41

(ப–ரை.) உயிர் – உயிரானது, பிறக்கும்கால் – பிறக்குங் காலத்தில், பேர்–(இவ்வுடலை விட்டு) நீங்கு, எனவும் – என்று வேண்டிக் கொள்ளவும், (எனைத்தும்) போாது–எவ்வளவாயினும் நீங்காது; இறக்குங்கால்–இறக்கின்ற காலத்தில், நில் எனவும்–(நீங்காது) நில் என்று வேண்டிக்கொள்ளவும், எனைத்தும் நில்லாது – எவ்வளவாயினும் நீங்காதிராது; நல்லாள்–திருமகள், உடன்படின்–உடன்பட்டுச் சேர்ந்தால், தானே பெருகும் – (செல்வம்) தானே வளரும்; கெடும்பொழுதில் – (அத்திருமகள்) நீங்குங்காலத்தில், கண்டனவும்–காணப்பட்ட பொருள்களும், காணா–காணப்படாதன ஆகி, கெடும்–அழியும்.

போரறின் வாடும் பொருநர்சீர்; கீழ்வீழ்ந்த
வேரறின் வாடு மரமெல்லாம், நீர்பாய்
மடையறி னீணெய்தல் வாடும்; படையறின்
மன்னர்சீர் வாடி விடும். 42

(ப–ரை.) பொருநர் – போர் செய்யவல்ல வீரர்களது, சீர் – வீரத்தின் சிறப்பு, போர் அறின் – போர் இலதானால், வாடும் – வருந்தும்; மரம் எல்லாம் – மாங்களெல்லாம், கீழ் வீழ்ந்த – கீழே பாய்ந்த, வேர் அறின் – வேரறுந்தால், வாடும் – உலரும்; நீள் நெய்தல் – (நீரினளவு) வளர்கின்ற நெய்தற்கோடி, நீர் பாய் – (வருவாயின் வழியே) நீர் பாய்கின்ற, மடை அறின் – குளம் நீர்வற்றினால், வாடும்–உலரும்; மன்னர் சீர் – அரசரது செல்வம், படை அறின் – சேனையிலதானால், வாடி விடும்–நீங்கிப்போம்.

ஏதிலா ரென்பா ரியைபிலார்; யார்யார்க்கும்
காதலா ரென்பார் தகவுடையார்; மேதக்க
தந்தை யுபாத்தி யெனப்படுவான்; தாயென்ப
முந்துதாஞ் செய்த வினை. 43

(ப–ரை.) யார்யார்க்கும்–எல்லாருக்கும், எதிலார் என்பார்–அயலாரெனப்படுவார், இயைபு இலார்–நட்பின்தன்மை யில்லாதவர்; (யார்யார்க்கும்) காதலார்–எல்லாருக்கும் அன்புள்ளார், என்பார் – எனப்படுவார், தகவு உடையார் – நடுவுநிலைமையுடையார்; மேதக்க – மேன்மையுள்ள, (யார்யார்க்கும்) தந்தை எனப்படுவான் – (கற்றவர்) எல்லார்க்கும் பிதா என்று சொல்லப்படுவான், உபாத்தி – நூல்களைக் கற்பித்தவன்; (யார்யார்க்கும்) தாய் என்ப – பிறந்த எல்லார்க்கும் தாயென்று சொல்லப்படுவன, முந்து – முற்பிறப்பில், தாம் செய்த வினை – தாம் செய்த நல்வினைகள்.

பொறிகெடு நாணற்ற போழ்தே; நெறிபட்ட
ஐவராற் றானே வினைகெடும்; பொய்யா
நலங்கெடு நீரற்ற பைங்கூழ்; நலமாறின்
நண்பினர் நண்பு கெடும். 44

(ப–ரை.) நாண் – (தனக்கு ஒவ்வாத இழிதொழிலில் ஒருவன்) நாணுதல், அற்றபோழ்தே – நீங்கினபோதே, பொறி கெடும் – (அவனது புகழாகிய) செல்வங் கெடும்; நெறிபட்ட – நல்வழியிலமைந்த, ஐவரால் – ஐம்பொறிகளால், வினை தானே கெடும் – தீவினை முயற்சியில்லாமலே கெடும்; நீர் அற்ற பைங்கூழ் – நீரைப்பெறாத பயிர், பொய்யா–பொய்க்காத, நலம் கெடும் – விளைவு கெடும்; நலம் மாறின் – (ஒருவனது) நற்குணம் வேறுபட்டால், நண்பினர் நண்பு கெடும்– (தன்னுடைய) சினேகர் கொண்ட சினேகம் கெடும்.

நன்றிசா நன்றறியா தார்முன்னர்; சென்ற
விருந்தும் விருப்பிலார் முற்சாம்; அரும்புணர்ப்பின்
பாடல்சாம்பண்ணறியாதார்முன்னர்; ஊடல்சாம்
ஊட லுணரா ரகத்து. 45

(ப–ரை.) நன்று அறியாதார் முன்னர் – (ஒருவர் செய்த) உபகாரத்தை மறுக்குமியல்பினரிடத்து, நன்றி சாம்–செய்த உபகாரம் அழியும்; விருப்பு இலார் முன்–அன்பில்லாதவரிடத்து, சென்ற விருந்தும்–சென்ற விருந்தினரும், சாம் – வாடுவர்; பண் அறியாதார் முன்னர்–பாலையாழ் முதலிய பண்ணையறியாரிடத்து, அரு புணர்ப்பின்–(பண்ணோடு) அருமையாகிய பொருத்தத்தையுடைய, பாடல் சாம்–பாடுதற் றொழில் கெடும்; ஊடல் – ஊடுதலை, உணராரகத்து – அளவறிந்து நீங்காத நாயகரிடத்தில், ஊடல் சாம்–ஊடுதல் பயன்படாமல் அழியும்.

நாற்ற முரைக்கு மலருண்மை; கூறியது
மாற்ற முரைக்கும் வினைநலம்; தூக்கின்
அகம்பொதிந்த தின்மை மனமுரைக்கும்; முன்னம்
முகம்போல முன்னுரைப்ப தில். 46

(ப–ரை.) தூக்கின் – ஆராயுமிடத்து, மலர் உண்மை – நல்ல மலர்களின்து இருப்பை, நாற்றம் உரைக்கும் – (அம்மலர்களின்) மணமானது அறிவிக்கும்; வினைநலம் – (ஒருவனுடைய) செய்கையினது நன்மை, கூறிய மாற்றம்–(அவன்) பேசிய சொல், உரைக்கும் – அறிவிக்கும்; அகம் – (ஒருவன் பிறர்க்குத் தோன்றுமல்) தன்னுள், பொதி

ந்த–மறைத்துவைத்த, தின்மை – தீமையை, மனம் உரைக்கும் – (அவனுக்குத்) தன் மனமே அறிவிக்கும்; முன்னம்–(ஒருவனது) கருத்தை, முகம்போல – முகத்தைப்போல, முன் உரைப்பது – முன்னே தெரிவிக்கவல்லது, இல்–இல்லை.

மழையின்றி மாநிலத்தார்க் கில்லை; மழையும்
தவமிலா ரில்வழி யில்லை; தவமும்
அரசிலா ரில்வழி யில்லை; அரசனும்
இல்வாழ்வா ரில்வழி யில். 47

(ப–ரை) மழை இன்றி–மழை இல்லாவிட்டால், மாநிலத்தார்க்கு–பெரிய பூமியிலுள்ளார்க்கு, இல்லை–(பொருளும் இன்பமுமாகிய உலகியல்) இலதாகும்; மழையும் – (அத்தன்மையதாகிய) மழையும், தவமிலார் – தவஞ்செயலுடையார், இல்வழி – இல்லாத இடத்து, இல்லை–பெய்தலில்லை; தவமும்–(அத்தன்மையதாகிய) தவமும், அரசிலார் இல்வழி–(நீதிதவறு தாளுகின்ற) அரசரில்லாவிடத்து, இல்லை–நடத்தலிலது; அரசனும்–அவ்வரசனும், இல் வாழ்வார் – இல்லறத்தோடுகூடி வாழ்பவர், இல்வழி–இல்லாவிடத்து, இல்–இலனுவான்.

போதினு னந்துப் புனைதண்டார்; மற்றதன்
தாதினு னந்துஞ் சுரும்பெல்லாம்; தீதில்
வினையினு னந்துவர் மாக்களும்; தத்தம்
நனையினு னந்து நறு. 48

(ப–ரை.) போதினுல்–பூரரும்பினுல், புனை தண் தார்–தொடுக்கப்பட்ட மாலை, நந்தும்–மிகுதியாக விளங்கும்; அதன் தாதினுல்–அம்மலர்களினுடைய தாதுக்களின் மணத்தினுல், சுரும்பு எல்லாம்–வண்டெலெல்லாம், நந்தும் – (அப்போரும்புகளில்) வந்து சேரும்; தீது இல்–தீங்கில்லாத, வினையினுல்–நற்செய்கையினுல், மாக்களும்–மனிதர்களும், நந்துவர்–உயர்வர்; தத்தம்–மரமுதலியவற்றின், நனையினுல்–அரும்பின் செழுமையினுல், நறு நந்தும்–தேன் பெருகும்.

சிறந்தார்க் கரிய செறுதல்; எஞ்ஞான்றும்
பிறந்தார்க் கரிய துணைதுறந்து வாழ்தல்;
வரைந்தார்க் கரிய வகுத்தாண்; இரந்தார்க்கொன்
றில்லென்றல் யார்க்கு மரிது. 49

(ப–ரை.) சிறந்தார்க்கு–நட்பு மிகுந்தவர்க்கு, எஞ்ஞான்றும்–(தம்மூள் ஒருவர்) பொறுத்தற்கரிய குற்றஞ் செய்தகாலத்தும், செறுதல்–

(அவரது நட்பை) விட்டொழிதல்கள், அரிய–உண்டாகா; பிறந்தார்க்கு –(உயர்குடியில்) பிறந்தவர்க்கு, (எஞ்ஞான்றும்) – (பரத்தையால் மிக்க செல்வம் பெறவந்த காலத்தும்), துணை–(இல்லறத்துக்குத்) துணையாகிய மனையாளை, துறந்து–கைவிட்டு, வாழ்தல்–(அப்பரத்தையோடு கூடி) வாழ்தல்கள், அரிய–உண்டாகா; வரைந்தார்க்கு – (தம் உணவின் பொருட்செலவை) அளவுசெய்து வாழ்வார்க்கு, (எஞ்ஞான்றும்–மிக்க செல்வம்பெற்ற காலத்தும்), வகுத்து ஊண் – (விருந்தினர் முதலானோர்க்குப்) பகுத்துத் தாம் உண்ணுதல்கள், அரிய–உண்டாகா; யார்க்கும்–(அருளுடையார்) எல்லார்க்கும், (எஞ்ஞான்றும் – வறியான காலத்தும்), ஒன்று–(அவர்க்கு வேண்டியதாகிய) ஒரு பொருளை, இரந்தார்க்கு–யாசித்தவர்க்கு, இல் என்றல்–இல்லை என்று மறுத்தல், அரிது–உண்டாகாது.

இரைசுடு மின்புரு யரக்கையுட் பட்டால்;
உன்ரசுடு மொண்மையி லாரை; வரைகொளா
மூன்னை யொருவன் வினைசுடும்; வேந்தனையும்
தன்னடைந்த சேனை சுடும். 50

(ப–ரை.) இரை–கொழுமையான உணவு, இன்பு உருத–(பிணியால்) துன்பப்படுகின்ற, யாக்கையுள் பட்டால்–உடலினுள் சேர்ந்தால், சுடும்–வருத்தும்; உரை–(அறிவுடையோரது) சொல், ஒண்மை இல்லாரை–அறிவில்லாரை, சுடும்–வருத்தும்; ஒருவன்–ஒருவனது, வரைகொளா(த)–அறத்தினது எல்லையைக்கொள்ளாத, மூன்னைவினை–முற்பிறப்பிற் செய்த தீவினையானது, சுடும்–(அவனை இம்மையில்) வருத்தும்; வேந்தனையும்–அரசனையும், தன் அடைந்த சேனை–அவனைச் சார்ந்து வாழ்கின்ற சேனை, சுடும்–(முறையறிந்து காக்காவிட்டால்) வருத்தும்.

எள்ளற் பொருள திகழ்த லொருவனை;
உள்ளற் பொருள துறுதிச்சொல்;—உள்ளறிந்து
சேர்தற் பொருள தறநெறி; பன்னூலும்
தேர்தற் பொருள் பொருள். 51

(ப–ரை.) ஒருவனை இகழ்தல் – பிறனொருவனை (ஒருவன்) அவமதித்தல், எள்ளற்பொருளது–(தன்னை அறிவுடையோர்) நிந்தித்தலாகிய பொருளமைந்தது; உறுதிச்சொல்–(ஒருவன் சொல்லும்) நன்மையாகிய சொல், உள்ளற்பொருளது–(அவனை) நன்குமதித்தலாகிய பொருளமைந்தது; அறநெறி–அறத்தினது வழி, உள் அறிந்து–(ஒருவன் தன்) உள்ளத்தில் தெளிந்து, சேர்தற்பொருளது–(பின் அதில்) சேர்

ந்து நடப்பதாகிய பொருளமைந்தது; பொருள்–மெய்ப்பொருள்கள், பல் நூலும்–பல நூல்களும், தேர்தற்பொருள–ஆராய்தலாகிய பொருளமைந்தன.

யாறு ளடங்குங் குளமுள; வீறுசால்
மன்னர் விழையுங் குடியுள; தொன்மரபின்
வேத முறுவன பாட்டுள; வேளாண்மை
வேள்வியோ டொப்ப வுள. 52

(ப–ரை.) யாறு–நதிகள், உள் அடங்கும்–தம்முள் அடங்குகின்ற, குளம் உள–பெருங்குளங்கள் உள்ளன; வீறுசால்–எல்லாப் பெருமைகளும் நிறைந்த, மன்னர்–அரசர், விழையும்–விரும்பித்தழுவும், குடி உள–குடிகளுள்ளன; தொல் மரபின் – பழமையாகிய முறைமையையுடைய, வேதம் – வேதத்தின் பொருள், உறுவன – பொருந்துவன ஆகிய, பாட்டு உள–செய்யுள்களுள்ளன; வேள்வியோடு ஒப்ப–யாகத்தோடொப்பன ஆகிய, வேளாண்மை உள–ஈகைகள் உள்ளன.

எருதுடையான் வேளாளன்; ஏலாதான் பார்ப்பான்
ஒருதொடையான் வெல்வது கோழி;—உருவோ
டறிவுடையா ளில்வாழ்க்கைப் பெண்ணென்பாள்; சேனை
செறிவுடையான் சேஞ பதி. 53

(ப–ரை) எருது உடையான்–மிக்க உழுமாடுகளுடையான், வேளாளன்–வேளாளனுவான்; ஒரு தொடையான்–ஒரு தொடையின் வல்லமையாலே, வெல்வது–வெல்ல வல்லதாகிய, கோழி–சேவல்போல, ஏலாதான்.–(ஒருவரது பகையை) ஏற்றுக்கொளலில்லாதவன், பார்ப்பான்–பிராமணனுவான்; உருவோடு – (கணவன் விரும்பத்தக்க) உருவத்தோடு, அறிவு உடையாள் – (இல்லற வொழுக்கத்தை) அறிதலுடையவள், இல்வாழ்க்கை–இல்வாழ்க்கைக்குரிய, பெண் என்பாள்–பெண்ணென்று சொல்லப்படுவாள்; சேனை – (போர்முகத்தில்) தன் படையை, செறிவு உடையான்–விட்டு நீங்காமையை உடையவன், சேஞபதி–படைத்தலைவனுவான்.

யானை யுடையார் கதனுவப்பர்; மன்னர்
கடும்பரிமா காதலித் தூர்வர்; கொடுங்குழைய
நல்லாரை நல்லவர் நாணுவப்பர்; அல்லாரை
அல்லா ருவப்பது கேடு. 54

(ப–ரை.) யானை உடையார்–யானையை ஆளுதலுடைய அரசர், கதன் உவப்பர்–(போர்முகத்தில் அதனது) கோபித்தலை மகிழ்வார்; மன்னர்–அரசர், கடு பரிமா–(ஓடுதலில்) வேகமாகிய குதிரையை, காதலித்து–விரும்பி, ஊர்வர்–நடத்துவார்; கொடு குழைய – வளைவாகிய காதணியணிந்த நல்லாரை–சிறந்த அழகுடைய மாதரை, நல்லவர்–நற்குணமுடையார், நாண் உவப்பர்–(அம்மாதரிடத்துள்ள) நாணமென்னுங் குணத்தினால் மகிழ்வார்; அல்லாரை – தீயாரிடத்து, அல்லார்–தீயோரால், உவப்பது – விரும்பப்படுவது, கேடு – கேட்டைத்தருஞ் செய்கையாம்.

கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை; கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை; மக்களின்
ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை; ஈன்றாளின்
எண்ணக் கடவுளு மில்.* 55

(ப–ரை.) கண்ணின் சிறந்த – (உயிர்களுக்குக்) கண்ணைப்போல் மேம்பட்ட, உறுப்பு இல்லை–வேறு அவயவமில்லை; கொண்டானின்–குலமகளுக்குக்) கணவனைப்போல, துன்னிய கேளிர் – நெருங்கிய உறவினர், பிறர் இல்லை–மற்றவரில்லை; மக்களின்–(தாய் தந்தையர்க்கு) நற்குணமுள்ள பிள்ளைகளைப்போல, ஒண்மைய ஆய்–ஒளியுள்ளன ஆகி, சான்ற பொருள் இல்லை–நிறைந்த பொருள்கள் வேறில்லை; ஈன்றாளின்–(பிள்ளைகளுக்குத்) தாயைப்போல, எண்ணக் கடவுளும் இல்–(உயர்வாக) மதிப்பதற்குரிய கடவுளுமில்லை.

கற்றன்னர் கற்றுரைக் காதலர்; கண்ணோடார்
செற்றன்னர்; செற்றுரைச் சேர்ந்தவர் தெற்றென
உற்ற துரையாதார்; உள்கரந்து பாம்புறையும்
புற்றன்னர் புல்லறிவி னார். 56

(ப–ரை.) கற்றுரை – கற்றுணர்ந்தவரை; காதலர்–விரும்பி அவரைப் பிரியாதவர், கற்றல் அன்னர்–கற்றலொத்த அறிவினராவர்; கண்ணோடார்–தாட்சணியமில்லாதவர், செற்றல் அன்னர்–கொன்றலொத்த கெடுதியுடையார்; உற்றது–நடந்த செய்தியை, தெற்றென–தெளிவாக, உரையாதார்–(சாட்சியாகும்போது) சொல்லாதவர், செற்

---

* "கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை கல்வியின்
நுண்ணிய வாய பொருளில்லை—கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை யீன்றாளோ
டென்னக் கடவுளு மில்." என்பதம் பாடம்.

முரைச் சேர்ந்தவர்–பகைவரைச் சார்ந்தவர்; புல் அறிவினர் – சிற்றறிவினர், உள் கரந்து–உள்ளே மறைந்து, பாம்பு உறையும்–பாம்பு தங்குகின்ற, புற்று அன்னர்–புற்றை ஒப்பர்.

மாண்டவர் மாண்ட வினைபெறுப; வேண்டாதார்
வேண்டா வினையும் பெறுபவே:—யாண்டும்
பிறப்பார் பிறப்பா ரறனின் புறுவர்;
துறப்பார் துறக்கத் தவர். 57

(ப–ரை.) மாண்டவர் – (அறிவால்) மாட்சிமைப்பட்டவர், யாண்டும்–எக்காலத்தும், மாண்ட வினை – மாட்சிமைப்பட்ட செய்கைகளை, பெறுப–செய்யப்பெறுவர்; வேண்டாதார்–(நல்வினையை) விரும்பாதவர், வேண்டா வினையும்–(தம்மால்) வேண்டப்படாத தீவினைப்பயனையும், பெறுப–பெறுவார்கள்; பிறப்பார்–பிறப்பவர், பிறப்பு–அப்பிறப்பில் செய்த, ஆர் அறன்–அருமையாகிய அறத்திலால், இன்பு உறுவர்–(மறுமையில் தேவராய்) இன்பத்தை அடைவர்; துறப்பார்–(யானென்னும் அகப்பற்றையும் எனதென்னும் புறப்பற்றையும்) துறப்பவர், துறக்கத்தவர்–முத்தியுலகத்தாராவர்.

என்று முளவாகு நாளு மிருசுடரும்;
என்றும் பிணியுந் தொழிலொக்கும்;—என்றும்
கொடுப்பாருங் கொள்வாரு மன்னர்; பிறப்பாரும்
சாவாரு மென்று முளர். 58

(ப–ரை.) என்றும்–எக்காலத்தும், நாளும்–நாண்மீன்களும், இருசுடரும்–சந்திரனும் சூரியனும், உள ஆகும்– உள்ளன ஆகும்; என்றும்–எக்காலத்தும், பிணியும் – (தொழிலுண்டாகாமைக்குக் காரணமாகிய) நோயும், தொழில்–(உழவுமுதலிய) தொழிலும், ஒக்கும் – உள்ளன ஆகும்; என்றும் – எக்காலத்தும், கொடுப்பாரும்–(ஒளிக்காமல்) கொடுப்பவர்களும், கொள்வாரும்–ஏற்போரும், அன்னர்–உளர் ஆவர்; என்றும்–எக்காலத்தும், பிறப்பாரும்–பிறப்பவர்களும், சாவாரும்–இறப்பவர்களும், உளர்–உள்ளனர்.

இனிதுண்பா னென்பா னுயிர்கொல்லா துண்பான்;
முனிதக்கா னென்பான் முகனெழிந்து வாழ்வான்;
தனிய னெனப்படுவான் செய்தநன் றில்லான்;
இனிய னெனப்படுவான் யார்யார்க்கே யானும்
முனியா வொழுக்கத் தவன். 59

(ப–ரை.) இனிது உண்பான் என்பான்–நல்லுணவை உண்பவனென்று சொல்லப்படுவோன், உயிர் கொல்லாது – பிற உயிர்களைக் கொல்லாமையாலாகிய உணவை, உண்பான்–உண்டுவாழ்பவன்; முனிதக்கான் என்பான்–(யாவராலும்) வெறுக்கத்தகுந்தவனென்று சொல்லப்படுவோன், முகன் ஒழிந்து முகமலர்ச்சியில்லாதவனாகி, வாழ்வான்–வாழ்பவன்; தனியன் எனப்படுவான் – துணையில்லாதவனென்று சொல்லப்படுவோன், செய்த நன்று இல்லான்–(பிறர்க்கு) உபகாரஞ் செய்தலில்லாதவன்; இனியன் எனப்படுவான்–நல்லானென்று சொல்லப்படுவோன், யார் யார்க்கே ஆனும்–எவரெவரிடத்தே ஆனாலும், முனியாத–வெறுக்கப்படாத, ஒழுக்கத்தவன்–நடையையுடையவன்.

ஈத்துண்பா னென்பா னிசைநடுவான்; மற்றவன்
கைத்துண்பான் காங்கி யெனப்படுவான்; தெற்ற
நகையாகு நண்ணார்முற் சேறல்; பகையாகும்
பாடறியா தானை யிரவு. 60

(ப–ரை.) ஈந்து–(வறியார்க்குக்) கொடுத்து, உண்பான் என்பான்–(தானும்) அநுபவிப்பவனென்று சொல்லப்படுவோன், இசைநடுவான்–புகழை நிறுத்தவல்லவன்; அவன் கைத்து–அவனுடைய பொருளை, உண்பான்–உண்பவன், காங்கி எனப்படுவான் – குடம்போலுஞ் சுதந்தரமில்லானென்று சொல்லப்படுவோன்; நண்ணார்முன் – பகைவரிடத்து, சேறல் – (ஒருவன் நட்பை விரும்பிச்) செல்லுதல், தெற்ற நகை ஆகும்–(பிறர் தன்னைத்) தெளிய அவமதித்துச் சிரித்தற்குக் காரணமாகும்; பாடு–(பிறருடைய) வறுமைத் துன்பத்தை, அறியாதானை–உணரமாட்டாதவனிடத்து, இரவு–இரத்தல், பகை ஆகும்–இரப்போனுக்கு விரோதமாகும். [‘ஈந்து’ என்பது ‘ஈத்து’ என வலித்தல் விகாரமாயிற்று.]

நெய்விதிர்ப்ப நந்து நெருப்பழல்; சேர்ந்து
வழுத்த வரங்கொடுப்பர் தேவர்; தொழுத்திறந்து
கன்றூட்ட நந்துங் கறவை; கலம்பரப்பி
நன்றூட்ட நந்தும் விருந்து. 61

(ப–ரை.) நெருப்பு அழல் – தீயினது சுடர், நெய் விதிர்ப்ப–நெய்யைச் சிந்த, நந்தும்–ஓங்கும்; தேவர் – தேவர்கள், சேர்ந்து – (தம்மை ஒருவன்) அடைந்து, வழுத்த–துதிக்க, வரம் கொடுப்பர்–(அவன் வேண்டிய) வரத்தைக் கொடுப்பார்; கறவை–கறக்கும் பசு, தொழு திறந்து – கொட்டிலைத் திறந்து, கன்று ஊட்ட–கன்றினை

உண்பிக்க, நந்தும்–பால் பெருகும்; விருந்து–விருந்தாக வந்தவன், கலம் பரப்பி–உண்கலத்தை விரித்து, நன்று ஊட்ட–இனிமையாக உண்பிக்க, நந்தும்–மனங்களிப்பான்.

பழியின்மை மக்களாற் காண்க; ஒருவன்
கெழியின்மை கேட்டா லறிக; பொருளின்
நிகழ்ச்சியா லாக்க மறிக; புகழ்ச்சியால்
போற்றூதார் போற்றப் படும். 62

(ப–ரை.) பழி இன்மை–(ஒருவர்) பழிக்கப்படுங் குணமிலராயிருத்தலை, மக்களால்–(அவருக்கு) நன்மக்களுளராயிருத்தலால், ஒருவன் காண்க–ஒருவன் அறியக்கடவன்; கெழி இன்மை–(ஒருவர்) தன்னிடத்து நட்புரிமை இலராயிருத்தலை, கேட்டால்–தான் செல்வமிழத்தலால், (ஒருவன்) அறிக–(ஒருவன்) அறியக்கடவன்; ஆக்கம்–(ஒருவரது) நல்வினையை, பொருளின் நிகழ்ச்சியால்–(அவரிடத்துப்) பொருளினது நீங்காமையினலே, (ஒருவன்) அறிக–(ஒருவன்) அறியக்கடவன்; புகழ்ச்சியால்–(ஒருவன் பலராலும்) புகழப்படுதலாலே, போற்றூதார்–பகைவராலும், போற்றப்படும்–வணங்கப்படுவான்.

கண்ணுள்ளுங் காண்புழிக் காதற்றும்; பெண்ணின்
உருவின்றி மாண்ட வுளவாம்; ஒருவழி
நாட்டுள்ளு நல்ல பதியுள; பாட்டுள்ளும்
பாடெய்தும் பாட லுள. 63

(ப–ரை.) கண்ணுள்ளும்–(மக்களுடைய) கண்களிலும், காண்புழி–ஆராய்ந்தால், ஒருவழி–சிறுபான்மை, காதற்று–(கண்டோரால்) விரும்பப்படுங்கண், ஆம்–உளது; பெண்ணின்–பெண்களுள்ளும், உரு இன்றி–அழகிய உருவமில்லாதிருந்தும், (ஆராய்ந்தால் சிலரிடத்து) மாண்ட–மாட்சிமைப்பட்ட (குணமுஞ் செய்கையும்), உள–உண்டு; நாட்டுள்ளும்–நாடுகளிலும், நல்ல பதி–(ஆராய்ந்தால் சிறுபான்மை) நல்ல நாடுகள், உள–உண்டு; பாட்டுள்ளும்–பாட்டுகளிலும், பாடு எய்தும்–(ஆராய்ந்தறிந்தால் சிறுபான்மை) பேரழகு அமைந்திருக்கும், பாடல் உள–பாட்டுகள் உண்டு.

திரியழல் காணிற் றெழுப; விறகின்
எரியழல் காணி னிகழ்ப; ஒருகுடியில்
கல்லாது மூத்தானைக் கைவிடுப, கற்றூன்
இளமைபா ராட்டு முலகு. 64

(ப–ரை.) திரி–திரித்தநூலி லேற்றிய, அழல் காணின்–விளக்குச் சுடரைக் கண்டால், உலகு தொழுப–தேயத்தார் மதித்துக் கை கூப்புவர்; விறகின்–விறகினிடத்து, எரி அழல் காணின்–எரிகின்ற சுடரைக் கண்டால், இகழ்ப–அவமதிப்பர்; ஒரு குடியில்–ஒரு குடும் பத்தில், கல்லாது–(கல்வியைக்) கற்காமல், மூத்தானை–முதிர்ந்தவனை, உலகு கைவிடுப–தேயத்தார் ஏற்றுக்கொள்ளார்; கற்றான்–கல்வியை யறிந்தவனிடத்துள்ள, இளமை–இளமைப்பருவத்தை, உலகு பாராட் டும்–தேயத்தார் மதித்து ஏற்றுக்கொள்வர்.

கைத்துடையான் காமுற்ற துண்டாகும்; வித்தின்
மூலைக்குழா நீருண்டே லுண்டாம்; திருக்குழாம்
ஒண்செய்யாள் பார்த்துறி னுண்டாகும்; மற்றவள்
துன்புறுவ ளாயிற் கெடும். 65

(ப–ரை.) கைத்து உடையான்–பொருளை யுடையவன், காமுற் றது–விரும்பிய பொருள், உண்டு ஆகும்–கிடைக்கும்; நீர் உண்டு எல்–(தன்னிடத்து) நீருள்ளதாயிருந்தால், வித்தின் மூலைக்குழாம் உண்டு ஆம்–விதைகளினது மூலைகளின் திரள் தோன்றும்; ஒள் செய்யாள்–அழகிய திருமகள், பார்த்து–(ஒருவனது நன்மையைக் கண்டு, உறின்–சேர்ந்தால், திருக்குழாம்–பெருஞ்செல்வம், உண்டு ஆகும்–உண்டாகும்; அவள்–அத்திருமகள், துன்பு உறுவள் ஆயின்– (அவனது தீமையைப் பார்த்துத்) துன்பப்படுவாளாஞல், கெடும்– (அப்பெருஞ் செல்வம்) இலதாகும்.

ஊனுண் டுழுவை நிறம்பெற்றூஉம்; நீர்நிலத்துப்
புல்லிஞ னின்புறூஉங் காலேயம்; நெல்லின்
அரிசியா னின்புறூஉங் கீழெல்லாம்; தத்தம்
வரிசையா னின்புறூஉ மேல். 66

(ப–ரை.) ஊன் உண்டு–தசையையுண்டு, உழுவை–புலிகள், நிறம் பெறும்–(உடலின்) ஒளியை அடையும்; காலேயம்–பசுக்கூட்டம், நீர் நிலத்து–நீர்வளமுள்ள நிலத்தில் மூலைத்த, புல்லிஞன் இன்புறூஉம்– புல்லிஞலே சுகித்திருக்கும்; கீழ் எல்ல ம்–கீழ்மக்களெல்லாம், நெல் லின் அரிசியான்–நெல்லிலுண்டாகிய அரிசியிஞல், இன்புறூஉம்– உள்ள மகிழ்வர்; மேல்–மேன்மக்கள், தத்தம்–(பிறரால் செய்யப்படும்) தத்தமக்குரிய, வரிசைய ன்–முறையாகிய உபசாரத்திஞல், இன்பு றூம்–உள்ள மகிழ்வர்.

பின்னவாம் பின்னதிர்க்குஞ் செய்வினை: என்பெறினும்
முன்னவா முன்ன மறிந்தார்கட்கு: என்னும்
அவாவா மடைந்தார்கட் குள்ளம்: தவாவாம்
அவாவிலார் செய்யும் வினை. 67

(ப–ரை.) பின்–(செய்யத் தொடங்கிய) பின்பு, அதிர்க்கும்–நடுக்கத்தைத் தருகின்ற, செய் வினை–செய்யப்படும் தொழில்கள், பின்ன–(ஆராய்ந்து துணியாதார்க்குப்) பின் தோன்றுவன; என்பெறினும்–பெரும்பயனை அடையக்கூடுமாயினும், முன்னம்–(செய்யத்தொடங்கும்) முன்னே, அறிந்தார்க்கு–ஆராய்ந்து துணிந்தவர்க்கு, முன்னே–(அச்செய்வினைகள்) முன்னே தோன்றுவன; என்னும்–(பரம்பொருளல்லாத) எதன் விருப்பத்தையும், அடைந்தார்கட்கு–கொண்டவர்க்கு, உள்ளம்–(அதுகாரணமாக) உள்ளத்தில், அவா ஆம்–(விட்ட) விருப்பங்கள் உண்டாகும்; அவா–அவ்விருப்பம், இலார் செய்யும் வினை–இல்லாத துறவிகள் செய்யும் துறவறத்தொழில்கள், தவா ஆம்–கெடாவாம்.

கைத்திலார் நல்லவர் கைத்துண்டாக் காப்பாரின்
வைத்தாரி னல்லர் வறியவர்: பைத்தெழுந்து
வைதாரி னல்லர் பொறுப்பவர்; செய்தாரின்
நல்லர் சிதையா தவர். 68

(ப–ரை.) கைத்து–பொருள், உண்டு ஆக–உண்டாயிருக்க, காப்பாரின்–(பொருளாலாகும் பயனை அடையாமல்) அதைக் காப்பவரினும், கைத்து இலார்–அப்பொருளில்லாதவர், நல்லவர்–(உலகத்தாரால் பழிக்கப்படாமையால்) நல்லவராவர்; வைத்தாரின்–(பொருளை) வைத்து இறந்தவரினும், வறியவர்–தரித்திரர், நல்லர்–(வைத்து இறவாமையால்) நல்லவராவர்; பைத்து எழுந்து, –கோபித்து எழுந்து, வைதாரின்–நிந்தித்தவரினும், பொறுப்பவர்–(அந்நிந்தையைப்) பொறுத்துக்கொண்டிருப்பவர், நல்லர்–நல்லவராவர்; செய்தாரின்–உபகாரம் செய்தவரினும், சிதையாதவர்–அவ்வுபகாரத்தை மறவாதவர், நல்லர்–நல்லவராவர்.

மகனுரைக்குந் தந்தை நலத்தை ஒருவன்
முகனுரைக்கு முன்னின்ற வேட்கை; அகனீர்ப்
பில்த்தியல் புக்கா னுரைக்கும்: நிலத்தியல்பு
வான முரைத்து விடும். 69

(ப–ரை.) மகன்–புத்திரன், தந்தை–தந்தையினுடைய, நலத்தை–நற்குணத்தை, உரைக்கும்–(தான் நற்குண முடைமையால் பிறர்க்கு) அறிவிப்பான்; ஒருவன்முகன்–ஒருவனுடைய முகம், முன் நின்ற வேட்கை–(அவனது) மனத்திலுள்ள விருப்பத்தை, உரைக்கும்–(பிறர்க்கு) அறிவிக்கும்; அகல் நீர்–பரவின நீரையுடைய, பிலத்து இயல்–பள்ளத்தினது நிலையை, புக்கான் உரைக்கும்–(அதில்) இறங்கினவன் (பிறர்க்கு) அறிவிப்பான்; நிலத்து இயல்பு–நிலத்திலுள்ள மக்களது தன்மையை, வானம்–மழை, உரைத்துவிடும்–(பெய்தும் பெய்யாதும் அவர்க்கு) அறிவிக்கும்.

பதிநன்று பல்லா ருறையின்; ஒருவன்
மதிநன்று மாசறக் கற்பின்;—நுதிமருப்பின்
ஏற்றுரன்வீ றெய்து மினநிரை; தான்கொடுக்கும்
சோற்றுரன்வீ றெய்துங் குடி. 70

(ப–ரை.) பல்லார்–(முயற்சியுடைய) பலகுடிகள், உறையின்–வசித்தால், பதி நன்று–நாடு சிறப்புடையதாகும்; மாசு அற–(விபரீதம் ஐயம் ஆகிய) குற்றமில்லாமல், கற்பின்–(கற்கத்தகும் நூல்களைக்) கற்றால், மதி நன்று–(ஒருவனது) அறிவு தெளிவுடையதாகும்; நிரை இனம்–பசுக்கூட்டம் நுதிமருப்பின்–கூர்மையாகிய கொம்புகளுடைய, ஏற்றுரன்–ரிஷபத்தினாலே, வீறு எய்தும்–(அச்சமில்லாமல்) தைரியத்தை யடைந்திருக்கும்; குடி–தன் குடும்பம், தான் கொடுக்கும்–(முயற்சியுடைய ஒருவன்) தான் கொடுக்கின்ற, சோற்றுரன்–உண்டியினால், வீறு எய்தும்–பெருமை யடைந்திருக்கும்.

ஊர்ந்தான் வகைய கலினமா; நேர்ந்தொருவன்
ஆற்றல் வகைய வறஞ்செய்கை; தொட்ட
குளத்தனைய தூம்பி னகலங்கள்; தத்தம்
வளத்தனைய வாழ்வார் வழக்கு. 71

(ப–ரை.) கலினமா–கடிவாளம் பூண்ட குதிரைகள், ஊர்ந்தான்–(தம்மேல்) ஏறி நடத்துவோனுடைய, வகைய–(நடத்தும்) வகைக்கிசைந்தன ஆம்; அறம் செய்கை–துறவறத்தைச் செய்யுஞ் செய்கைகள், நேர்ந்து ஒருவன்–(செய்ய) உடன்பட்ட ஒருவனது, ஆற்றல் வகைய–வலியின் வகைக்கிசைந்தன; தூம்பின் அகலங்கள்–கால்வாய்களினுடைய விரிவுகள், தொட்ட–தோண்டப்பட்ட, குளத்து அனைய–குளங்களின் அளவின ஆம்; வாழ்வார்–(இல்லாளோடு கூடி) வாழ்வாரது, வழக்கு–செய்கைகள், தத்தம் வளத்து அனைய–தம்முடைய வருவாயின் அளவின ஆம்.

ஊழியு மாண்டெண்ணி யாத்தன; யாமமும்
நாழிகை யானே நடந்தன; தாழ்வியாத்
தெற்றென்றூர் கண்ணே தெளிந்தனர்; வேற்றென்றூர்
வெஞ்சொலா லின்புறு வார். 72

(ப–ரை.) ஊழியும்–யுகமுடிவுகளும், ஆண்டு எண்ணி–வருடங்களால் எண்ணப்பட்டு, யாத்தன–அளவு செய்யப்பட்டன; யாமமும்–சாமப்பொழுதும், நாழிகையானே–(ஏழரை) நாழிகையிலேயே, நடந்தன–(அளவு செய்யப்பட்டுக்) கழிந்தன; தாழ்வியாமல்–காலத்தை நீட்டிக்காமல், (விரைவில்) தெற்றென்றூர் கண்ணே–தெளிந்தவரிடத்திலே, தெளிந்தனர்–(நல்லோர்) ஐயமறக் கற்றனர்; வெற்றென்றூர்–அறிவாகிய பயனில்லாதவர், வெம் சொலால்–(பிறரை வைத) கடுஞ் சொற்களினால், இன்பு உறுவார்–உள்ள மகிழ்வார்.

கற்றூன் றளரி னெழுந்திருக்கும்; கல்லாத
பேதையான் வீழ்வானேற் கான்முரியும்; எல்லாம்
ஒருமைதான் செய்த கருவி; தெரிவெண்ணின்
பொய்யாவித் தாகி விடும். 73

(ப–ரை.) கற்றூன்–கல்வியறிவுடையான், தளரின்–(ஒருகாலத்தில்) தளர்ச்சியடைவானாயின், எழுந்திருக்கும்–(அத்தளர்ச்சியினின்று) நீங்குவான்; கல்லாத–கல்வியறிவில்லாத, பேதையான்–பேதையானவன், வீழ்வான் ஏல்–(தன்னிலையினின்றும்) தளர்ந்தால், கால் முரியும்–(அதற்கு) ஊன்றுகோலாகிய முயற்சி கெடுவான்; ஒருமை–ஒருபிறப்பிலே, தான் செய்த எல்லாம்–ஒருவன் செய்தன ஆகிய வினைகளெல்லாம், கருவி–(மறுமைப்பயனுக்குக்) காரணங்களாகும்; எண்ணின்–ஆராயுமிடத்து, தெரிவு–(ஐயமில்லாமல் தெளிந்த) தெளிவு, பொய்யாவித்து–(முத்தியடைதற்கு) உண்மையாகிய காரணம், ஆகிவிடும்–ஆகாமற்போகாது.

தேவ ரனையர் புல்வரும்; தேவர்
தமரனைய ரோரூ ருறைவார்; தமருள்ளும்
பெற்றன்னர் பேணி யொழுகுவார்; கற்றன்னர்
கற்றூரைக் காத லவர். 74

(ப–ரை.) புலவரும்–அறிவுடையாரும், தேவர் அனையர்–தேவரை ஒப்பாவர்; ஓர் ஊர்–அவ்வறிவுடையோரிருக்கும் ஊரில், உறைவார்–வசிப்பவர், தேவர்–அத்தேவர்களுக்கு, தமர் அனையர்–உறவினரை ஒப்

பாவர்; பேணி–(அவர் நட்பினைப்) பாதுகாத்துக்கொண்டு, ஒழுகுவார்–(அவர் குறிப்பின்படி) நடப்பவர், தமருள்ளும்–அவ்வுறவினருள்ளும், பெற்றன்னர்–(அப்புலவர்களது அறிவைப்) பெற்றாலொப்பர்; கற்றூரை–அக்கல்வியறிவினரை, காதலவர்–விரும்புமாணாக்கர், கற்றன்னர்–(எல்லா நூல்களையும்) கற்றாற்போல்வர்.

தூர்ந்தழியும் பொய்பிறந்த போழ்தே; மருத்துவன்
சொல்கென்ற போழ்தே பிணியுரைக்கும்; நல்லார்
விடுகென்ற போழ்தே விடுக; உரியான்
தருகெனிற் முயம் வகுத்து. 75

(ப–ரை.) பொய் – (நட்புக்கொண்ட இருவரில் ஒருவனிடத்துப்) பொய், பிறந்தபோழ்தே–முளைத்தபோதே, தூர்ந்தழியும்–(நட்பாகிய பாத்தி) தூர்ந்துபோம்; மருத்துவன் – வைத்தியன், சொல்க என்ற போழ்தே – (பிணியாளியை நோக்கிச்) சொல்லுக என்று கேட்ட போதே, பிணி உரைக்கும் – (அவன்) நோயைச் சொல்லுவான்; நல்லார் – நல்லறிவினர், விடுக என்றபோழ்தே – தீச்செயலை ஒழிக என்று சொல்லியபோதே, விடுக – (அதை) ஒருவன் ஒழியக்கடவன்; உரியான் – பாத்தியதையுடையவனை, தருக என்னின் – (தன் பாகத்தைத்) தரக்கடவாயென்று கேட்டால், தாயம் வகுத்து – உரிமைப் பொருளைப் பங்கிட்டு, (விடுக)–(ஒருவன்) தரக்கடவன்.

நாக்கி னறிப வினியசுவை; மூக்கினன்
மோந்தறிப வெல்லா மலர்களும்; நோக்குள்ள
கண்ணினுற் காண்ப வணியவற்றை; தொக்கிருந்
தெண்ணினு னெண்ணப் படும். 76

(ப–ரை.) இனிய சுவை – இனிய சுவையுடைய பொருள்களை, நாக்கின் – நாக்கினால், அறிப – (யாவரும்) அறிவார்கள்; எல்லா மலர்களும்–எல்லா நன்மலரின் மணத்தையும், மூக்கினன் மோந்து அறிப–மூக்கினால் மோந்து அறிவார்கள்; அணியவற்றை–அழகுள்ள பொருள்களை, நோக்கு உள்ள–நாணுந்தொழிலமைந்த, கண்ணினன் காண்ப–கண்களினால் காண்பார்கள்; தொக்கு இருந்து – (அறிவுடையோர் பலரோடு) கூடியிருந்து, எண்ணினன் – கருத்தினால், எண்ணப்படும்–(கருத்துப்பொருள்) ஆராய்ந்தறியப்படும்.

சாவாத வில்லை பிறந்த வுயிரெல்லாம்;
தாவாத வில்லை வலிகளும்: மூவா
திளமை யியைந்தாரு மில்லை; வளமையில
கேடின்றிச் சென்றாரு மில். 77

(ப–ரை.) பிறந்த உயிர் எல்லாம் – பிறந்த எல்லா வுயிர்களிலும், சாவாத இல்லை – சாகாதவை இல்லை; வலிகளும் – வன்மைகளிலும், தாவாத இல்லை – கெடாதவைகளில்லை; மூவாது – மூத்துக்கழியாமல், இளமை இயைந்தாரும் இல்லை – இளமை நிலைக்கப்பெற்றவருமில்லை; வளமையில் – (பெற்ற) செல்வங்களில், கேடு இன்றி – (இடையே) அழிவை யடையாமல், சென்றாரும் இல் – முற்றும் அநுபவித்தவரும் இல்லை.

சொல்லா னறிப வொருவனை; மெல்லென்ற
நீரா னறிப மடவினை; யார்கண்ணும்
ஒப்புரவி னறிப சான்றாண்மை; மெய்க்கண்
மகிழா னறிப நரை. 78

(ப–ரை.) ஒருவனை – ஒருவனது தன்மையை, சொல்லான் – (அவன் பேசும்) சொல்லினாலே, அறிப – (அறிவுடையோர்) அறிவார்கள்; மடவினை–மடவினது தன்மையை, மெல் என்ற–மென்மையாகிய, நீரான் அறிப–(அதிலுள்ள) நீரினாலே அறிவார்கள்; சான்று ஆண்மை–பல குணங்களாலும் நிறைந்து அவற்றை யாளுந்தன்மையை, யார் கண்ணும்–எவரிடத்தும், ஒப்புரவினான்–(ஒப்ப நடக்கும்) உலக நடையினால், அறிப – அறிவார்கள்; நரை – (ஒருவன்) மது உண்டமையை, மெய்க்கண் – (அவனது) உடலிற்றோன்றும், மகிழான் – களிப்பின் குறியால், அறிப–அறிவார்கள்.

நாவன்றோ நட்பறுக்கும்? தேற்றமில் பேதை
விடுமன்றோ வீங்கிப் பிணிப்பின்? அவாஅப்
படுமன்றோ பன்னூல் வலையில்? கெடுமன்றோ
மாறு ணிறுக்குந் துணிவு? 79

(ப–ரை.) நா–(இதம் பேசாத) நாக்கு, நட்பு அறுக்கும் அன்றோ–(ஒருவரோடு கொண்ட) நட்பினை நீங்கச் செய்யுமன்றோ? வீங்கி–(ஒருவர் அன்பு) மிகுந்து, பிணிப்பின்–(சினேகத்தால்) கட்டினும், தேற்றம் இல்–(நட்பின் தன்மையை) அறியமாட்டாத, பேதை–அறிவிலி, விடும் அன்றோ–(அந்நட்பை) ஒழிவானல்லனோ? அவா–நன்மாணாக்கனுடைய) விருப்பம், பல் நூல் வலையில்–பலநூல்களா

கிய வலியில், படும் அன்றே–உட்படுமன்றே? மாறுள்–(பலரோடு கொள்ளும்) பகையில், நிறுக்கும்–நிறுத்தவல்ல, துணிவு–துணிவினால், கெடும் அன்றே–(அத்துணிவுடையான்) கெடுவானல்லனே? (ஆம்).

கொடுப்பி னசனங் கொடுக்க; விடுப்பின்
உயிரிடை யிட்ட விடுக்க; எடுப்பின்
கிளையுட் கழிந்தா ரெடுக்க; கெடுப்பின்
வெகுளி கெடுத்து விடல். 80

(ப–ரை.) கொடுப்பின்–(ஒருவன் ஒருவருக்கு ஒரு பொருளைக்) கொடுக்க வேண்டினால், அசனம் கொடுக்க–உணவைக் கொடுக்கக் கடவன்; விடுப்பின்–துறக்கவேண்டினால், உயிரிடை–உயிரினிடத்து, இட்ட–வைக்கப்பட்ட (குற்றங்களைந்தையும்), விடுக்க–துறக்கக்கடவன்; எடுப்பின்–தாங்கவேண்டினால், கிளையுள்–சுற்றத்தாருள், கழிந்தார்–பொருளில்லாரை, எடுக்க – தாங்கக்கடவன்; கெடுப்பின் –, கெடுக்க வேண்டினால், வெகுளி கெடுத்துவிடல்–கோபத்தைக் கெடுத்துவிடக் கடவன்.

நலனு மிளமையு நல்குரவின் கீழ்ச்சாம்;
குலனுங் குடிமையுங் கல்லாமைக் கீழ்ச்சாம்;
வளமில் குளத்தின்கீழ் நெற்சாம்; பரமல்லற்
பண்டத்தின் கீழ்ச்சாம் பகடு. 81

(ப–ரை.) நல்குரவின் கீழ்–வறுமையின் கீழமைந்த, நலனும்–நற்குணமும், இளமையும்–இளமையுருவும், சாம்–விளங்கமாட்டா; கல்லாமைக் கீழ்–கல்வியறியாமையின் கீழமைந்த, குலனும்–உயர்குலமும், குடிமையும்–உயர்குடிப்பிறப்பும், சாம்–விளங்கமாட்டா; வளம் இல்–நீராகிய வளப்பமில்லாத, குளத்தின் கீழ்–குளத்தின் கீழமைந்த, நெல் சாம்–நெற்பயிர் விளையமாட்டா; பரம் மல்லல்–பார மிகுதியாகிய, பண்டத்தின் கீழ்–பொருளின் சுமையின் கீழமைந்த, பகடு–எருதுகள், சாம்–விரைந்து செல்லமாட்டா.

நல்லார்க்குந் தம்மூரென் றூரில்லை; நன்னெறிச்
செல்வார்க்குந் தம்மூரென் றூரில்லை; அல்லாக்
கடைகட்குந் தம்மூரென் றூரில்லை; தங்கைத்
துடையார்க்குந் தம்மூரென் றில். 82

(ப–ரை.) நல்லார்க்கும்–மிக்க கல்வி யறிவுடையார்க்கும், தம் ஊர் என்று–தமதூரென்று, ஊர் இல்லை–ஒரூரில்லை; நல் நெறி–துறவற வழியில், செல்வார்க்கும்–நடப்பவர்க்கும், தம் ஊர் என்று–தமதூரென்று, ஊர் இலை – ஒரூரில்லை; அல்லாத–(மேன்மையுடையார்) அல்லாத, கடைகட்கும்–கீழானவர்க்கும், தம் ஊர் என்று–தமதூரென்று, ஊர் இல்லை–ஒரூரில்லை; தம் கைத்து–தமது கையில், உடையார்க்கும் – பொருளுடையாருக்கும், தம் ஊர் என்று – தமதூரென்று, இல்–ஒரூரில்லை.

கல்லா வொருவர்க்குத் தம்வாயிற் சொற்கூற்றம்;
*மெல்லிலை வாழைக்குத் தானீன்றகாய்கூற்றம்;
†அல்லவை செய்வார்க் கறங்கூற்றம்; கூற்றமே
இல்லிருந்து தீங்கொழுகு வாள். 83

(ப–ரை.) கல்லாத ஒருவர்க்கு–கல்வியறிவில்லாத ஒருவருக்கு, தம் வாயில்–தமது வாயிற்பிறந்த, சொல் கூற்றம்–சொல் கூற்றுவனும்; மெல்லிலை வாழைக்கு – மென்மையான இலையுள்ள வாழைமரத்துக்கு, தான் ஈன்ற–தான் பெற்ற, காய் கூற்றம்–காய் கூற்றுவனும்; அல்லவை செய்வார்க்கு–பாவத்தொழிலைச் செய்பவருக்கு, அறம் கூற்றம்–அறம் கூற்றுவனும்; இல்–தன் குடும்பத்துக்கு, இருந்து–அக்குடும்பத்தி லிருந்துகொண்டு, தீங்கு ஒழுகுவாள்–கெட்டவழியில் நடப்பவள், கூற்றமே–கூற்றுவனேயாம்.

நீரான்வீ றெய்தும் விளைநிலம்; நீர்வழங்கும்
பண்டத்தாற்பாடெய்தும் பட்டினம்; கோண்டாளும்
நாட்டான்வீ றெய்துவர் மன்னவர்; கூத்தொருவன்
ஆடலாற் பாடு பெறும். 84

(ப–ரை.) விளை நிலம்–விளைநிலத்துப் பயிர், நீரான்–(தன்னில் பாய்கின்ற) நீரினால், வீறு எய்தும்–செழிப்பை அடையும்; பட்டினம்–பட்டினமானது, நீர் வழங்கும்–கடலால் வழங்கப்படும், பண்டத்தான்–பொருள்களால், பாடு எய்தும்–பெருமைபெறும்; மன்னவர்–அரசர், கொண்டு ஆளும்–தமக்குள்ளாக்கி ஆளுகின்ற, நாட்டான்–நாட்டிலுள்ள குடிகளால், வீறு எய்துவர்–பெருமை பெறுவர்; கூத்து–கூத்தாடுதல் செய்யும் சபை, ஒருவன் ஆடலால்–(நடனத்தில் வல்ல) ஒருவனது கூத்தினாலே, பாடு பெறும்–பெருமை பெறும்.

---

* 'மெல்லியவாழை' என்பதும் பாடம்.
† 'அல்லவை செய்தார்' என்பதும் பாடம்.

ஒன்றூக்கல் பெண்டிர் தொழினலம்; என்றும்
அறனூக்க லந்தண ருள்ளம்; பிறனூலும்
நாடுகோண் மன்னர் தொழினலம்; கேடூக்கம்
கேளி ரொரீஇ விடல். 85

(ப–ரை.) பெண்டிர்–குலப்பெண்களுடைய, தொழில்–தொழில்களில், நலம்–சிறப்புள்ளது, என்றும்–(கணவன் அழகு செல்வ முதலிய கெட்ட) காலத்தும், ஒன்று ஊக்கல்–கற்பாகிய ஒன்றை மனவெழுச்சியோடு காத்தல்; அந்தணர் உள்ளம்–பிராமணருடைய ஊக்கம், (என்றும்–மிக்க வறுமை வந்தகாலத்தும்), அறன்–தம் குல தருமத்தை, ஊக்கல் – மனவெழுச்சியோடு செய்தல்; மன்னர் – அரசர்களது, தொழில்–தொழில்களில், நலம்–சிறப்புள்ளது, (என்றும்–பெருஞ் செல்வத்தை அடைந்தகாலத்தும்), பிறன் ஆளும்–பகைவனுல் ஆளப்படும் நாடு–நாட்டை, கோள்–(அவனை வென்று) தம் வசப்படுத்துதல்; கேளிர்– ஒருவன்) ஈறவினரை, ஒரீஇவிடல்–நீங்கிவிடுதல், (என்றும்–மிக்க வலியுடையனுகிய காலத்தும்), கேடு ஊக்கம்–(தனக்கு) வரும் கேட்டை மனவெழுச்சியோடு செய்தலாம்.

கள்ளாமை வேண்டுங் கடிய வருதலால்;
தள்ளாமை வேண்டுந் தகுதி யுடையன;
நள்ளாமைவேண்டுஞ்சிறியாரோ(டு);யார்மாட்டும்
கொள்ளாமை வேண்டும் பகை. 86

(ப–ரை.) கடிய–(பிறர் பொருளைக் களவு செய்தால் பின்) அஞ்சத்தக்கவை, வருதலால்–நேரிடுதலால், கள்ளாமை வேண்டும்–களவு செய்யாமையே தகுதி; தகுதி உடையன–(பெரியோரால் சொல்லப்படும்) தகுதியுடைய சொற்களே, தள்ளாமை வேண்டும்–தள்ளாமல் கொள்ளலே தகுதி; சிறியாரோடு–பேதையாரிடத்தில், நள்ளாமை வேண்டும்–சினேகியாமையே தகுதி; யார்மாட்டும்–இவையாரிடத்தும், பகை கொள்ளாமை வேண்டும்–பகை கொள்ளாதிருத்தலே தகுதி.

பெருக்குக நட்டாரை நன்றின்பா லுய்த்து;
தருக்குக வொட்டாரைக் கால மறிந்தாங்(கு);
அருக்குக யார்மாட்டு முண்டி; சுருக்குக
செல்லா விடத்துச் சினம். 87

(ப–ரை.) நட்டாரை–சினேகரை, நன்றின்பால்–சுகவாழ்க்கையில், உய்த்து–நடத்தி, பெருக்குக–(ஒருவன்) பெருகச் செய்யக்கடவன்;

காலம் அறிந்து–(பகைவர்மேல் செல்லும்) காலத்தை அறிந்து, ஆங்கு–அந்தக்காலத்தில், ஓட்டாரைத் தருக்குக–பகைவரிடத்துக் களிப்போடு (போர்க்குச்) செல்லக்கடவன்; யார்மாட்டும்–மிக்க நட்பினரிடத்தும், உண்டி–(பலமுறை சென்று) உண்ணுதலை, அருக்குக–தவிரக்கடவன்; சினம் செல்லாத இடத்து–(தன்) கோபம் செல்லுதற்குரியதாகாத இடத்தில், சுருக்குக–(அதைத்) தணியச் செய்யக்கடவன்.

மடிமை கெடுவார்க ணிற்கும்: கொடுமைதான்
பேணுமை செய்வார்க ணிற்குமாம்: பேணினுன்
நாணின் வரைநிற்பர் நற்பெண்டிர்: நட்டமைந்த
தூணின்க ணிற்குங் களிறு. 88

(ப–ரை.) மடிமை – சோம்புந்தன்மை, கெடுவார்கண் – (கல்வி, செல்வம் முதலியவை) கெடுவாரிடத்து, நிற்கும்–நிலைபெறும்; கொடுமை–தீமை, பேணுமை–(காக்கவேண்டு மவற்றைக்) காவாமையை, செய்வார்கண்–செய்யும் பேதையரிடத்து, நிற்கும்–நிலைபெறும்; நல் பெண்டிர்–நல்ல பெண்கள், பேணினுன் (வரை)–விரும்பிக்கொண் டவனது எல்லையிலும், நாணின் வரை–நாணத்தினது எல்லையிலும், நிற்பர்–நிலைபெறுவர்; களிறு–யானை, நட்டு–நடப்பட்டு, அமைந்த–(தனக்குத்) தகுந்த அளவாயுள்ள, தூணின்கண் நிற்கும்–தூணின் நிலை பெறும்.

மறையறிப வந்தண் புலவர்: முறையொடு
வென்றி யறிப வரசர்க ளென்றும்:
வணங்க லணிகலஞ் சான்றோர்க்(கு) அஃதன்றி
அணங்கை வணங்கலள் பெண். 89

(ப–ரை.) அம்தண்–அழகிய கருணையையும், புலவர்–அறிவையு முடைய பிராமணர், மறை அறிப–வேதங்களை யாராய்வார்; அரசர் கள் – அரசர்கள், முறையோடு – (குடிகளைக்காக்கும்) முறையோடு, வென்றி–(பகைவரை) வெல்லுந் தொழிலையும், என்றும் – எக்காலத் தும், அறிப–ஆராய்வார்; சான்றோர்க்கு–(கல்வியறிவு கேள்விகளால்) நிறைந்தவர்க்கு அணிகலம்–அணிதற்குரிய ஆபரணம், வணங்கல்–(யாவருக்கும்) பணிவுடையாரா யிருத்தலாம்; பெண்–பெண்ணெனப் பட்டவள், (என்றும்–எக்காலத்தும்), அஃது அன்றி–(தன் கணவ னை) அத்தெய்வத்தை அல்லாமல், அணங்கை–வேறு தெய்வத்தை, வணங்கலள்–வணங்கல் செய்யாள்.

பட்டாங்கே பட்டொழுகும் பண்புடையாள்; காப்பினும்
பெட்டாங்கே பெட்கும் பிணையிலி; மூட்டுறினும்
சென்றுங்கே சென்றொழுகுங் காமம்; கரப்பினும்
கொன்றுன்மே னிற்குங் கொலை. 90

(ப–ரை.) பண்பு உடையாள்–நற்குணமுடைய பெண், பட்டாங்கே–(காவல் செய்யாவிடினும்) தன்னியற்கையாகிய கற்புக்கே, பட்டு–உட்பட்டு, ஒழுகும் – நடப்பாள்; பிணையிலி – (கணவனோடு) உடன்படுதலில்லாதவள், காப்பினும்–காவல் செய்தாலும், பெட்டாங்கே–(காவல் செய்வதற்கு முன் சோரர்களை) விரும்பினற்போலவே, பெட்கும்–விரும்பி நடப்பாள்; காமம்–(ஒருவனுடைய) காமம், மூட்டுறினும் இடையூறு நேரிடினும், சென்றுங்கே–(இடையூறு நேரிடுதற்கு முன்) சென்றற்போலவே, சென்று–போய், ஒழுகும்–(தீய வொழுக்கத்தில்) நடக்கும்; கொலை–கொலைப்பாதகம், கரப்பினும்–(பலர் நின்று) மறைக்கினும், கொன்றுன்மேல்–அக்கொலை செய்தவன்மேல், நிற்கும்–நிலைபெறும்.

வன்கண் பெருகின் வலிபெருகும்; பான்மொழியார்
இன்கண் பெருகி னினம்பெருகும்; அச்சான்ற
மென்கண் பெருகி னறம்பெருகும்; வன்கட்
கயம்பெருகிற் பாவம் பெரிது. 91

(ப–ரை.) வன்கண் – (சேனைக்கு) வீரம், பெருகின் – மிகுந்தால், வலி பெருகும்–(அரசனுக்கு) வலி மிகும்; பால்–பால்போலுஞ் சுவையுள்ள, மொழியார் – சொல்லையுடைய மனைவியரிடத்து, இன்கண் – (கடுகடுத்து நோக்காத) இனிய பார்வை, பெருகின்–மிகுந்தால், இனம் பெருகும்–(கொண்டவனுக்கு) நல்லுறவினர் மிகுவார்; சான்ற–நிறைந்த, மெல்–மென்மையாகிய, அக்கண்–அவ்வருள், பெருகின்–(ஒருவனிடத்து) மிகுமானால், அறம் பெருகும்–(அவன் மேற் கொண்ட) தருமம் மிகும்; வன்கண் – கொடுமையுள்ள, கயம்–கீழாகியதன்மை, பெருகின்–(ஒருவனிடத்து) மிகுமானால், பாவம் பெரிது–பாவம் மிகும்.

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்;
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்;
கிளைஞரில் போழ்திற் சினங்குற்றம்; குற்றம்
தமரல்லார் கைத்துள்ள தூண். 92

(ப–ரை.) இளமைப் பருவத்து–(கல்வி யேறுதற்குரிய) இளமைப் பருவத்தில், கல்லாமை–(அக் கல்வியைக்) கற்காமல் விடுதல், குற்றம்–குற்றமாம்; வளம்–பொருள், இல்லாத போழ்ததத்து–இல்லாத காலத்தில், வள்ளண்மை குற்றம்–ஈகைக்குணம் உடைமை குற்றமாம்; கிளைஞர் இல் போழ்தில்–உறவினர் (தன் பக்கத்தில்) இல்லாத காலத்தில், சினம்–(பகைவர்மேற் கொள்ளும்) கோபம், குற்றம்–குற்றமாம்; தமர் அல்லார்–உள்ளன்பில்லாருடைய, கைத்து உள்ளது–இடத்திலுள்ள உணவை, ஊண்–உண்ணுதல், குற்றம்–குற்றமாம்.

எல்லா விடத்துங் கொலேதீது; மக்களைக்
கல்லா வளர விடறீது; நல்லார்
நலந்தீது நாணற்று நிற்பின்; குலந்தீது
கொள்கை யழிந்த விடத்து. 93

(ப–ரை.) எல்லா இடத்தும்–(வேள்வி முதலிய) எல்லா இடங்களிலும், கொலை–(ஒருயிரைக்) கொலை செய்வது, தீது–(செய்தானுக்குத்) தீயதாகும்; மக்களை–தன் புத்திரர்களை, கல்லா(மல்) வளர–(கல்வியைக்) கற்காமலே வளரும்படி, விடல் தீது–(தந்தை) விடுதல் (தனக்கே அன்றி அச்சிறுவர்க்கும்) தீயதாகும்; நல்லார்–மாதர்கள், நாண் அற்று–நாணமில்லாமல், நிற்பின்–(பல ஆடவர் முன்னும்) நின்றால், நலம்–(அவருடைய) அழகு, தீது–(அவர்க்கே அன்றித் தங் கணவருக்கும்) தீயதாகும்; கொள்கை–(வருணத்துக்குத் தக்கபடி) கொண்ட ஒழுக்கம், அழிந்தவிடத்து–கெட்டபின், குலம்–(அக்கெட்டோனுடைய) குலம், தீது–கெட்டதாகும்.

ஆசார மென்பது கல்வி; அறஞ்சேர்ந்த
போக முடைமை பொருள்; ஆட்சி யார்கண்ணும்
கண்ணோட்ட மின்மை; முறைமை தெரிந்தாள்வான்
உண்ணோட்ட மின்மையு மில். 94

(ப–ரை.) ஆசாரம் என்பது–நல்லொழுக்கமென்று சொல்லப்படுவது, கல்வி–(ஒருவன் கற்ற) கல்விப்பயனாகும்; அறம் சேர்ந்த–அறத்தோடு பொருந்திய, போகம் உடைமை–சுகானுபவம், பொருள்–உடைய பொருளின் பயனாகும்; யார்கண்ணும்–எல்லாரிடத்தும், கண்ணோட்டம் இன்மை–தாட்சணிய மில்லாதிருத்தல், ஆட்சி–ஆளுகையாம்; உள் நாட்டம் இன்மை–(குடிகளுடைய நன்மையைத் தன்னுள்ளத்தில்) ஆராய்த லில்லாமை, இல்–இல்லாதிருத்தல், தெரிந்து ஆள்வான்–(பெரியாரோடு) எண்ணி அரசாள்வானது, முறைமை–நீதியாம்.

கள்ளி னிடும்பை களியறியும்; நீரிடும்பை
புள்ளினு ளோங்க லறியும்; நிரப்பிடும்பை
பல்பெண்டி ராள னறியும்; கரப்பிடும்பை
கள்வ னறிந்து விடும். 95

(ப–ரை.) கள்ளின் இடும்பை–கள்ளிலு லுண்டாகும் துன்பம், களி–கள்ளுண்டு களிப்பவன், அறியும்–அறிவான்; நீர் இடும்பை–நீரிலுலுண்டாம் துன்பத்தை, புள்ளினுள்–பறவைகளுள், ஓங்கல் அறியும்–உயர்ந்து பறக்கும் சாதகப்பறவை அறியும்; நிரப்பு இடும்பை–(மனக் குறைவுகளே) நிரம்பச் செய்தலிலு லுண்டாம் துன்பத்தை, பல் பெண்டிர் ஆளன்–பல மனைவியரை ஆளுகின்ற கணவன், அறியும்–அறிவான்; கரப்பு–(உடையவன் தன் பொருளை) ஒளித்து வைப்பதிலுலுண்டாம், இடும்பை–துன்பத்தை, கள்வன்–பொருளைக் களவு செய்வோன், அறிந்துவிடும்–அறியாமலிரான்.

வடுச்சொ னயமிலார் வாய்த்தோன்றும்; கற்றூர்வாய்ச்
சாயினுந் தோன்று கரப்புச்சொல்; தீய
பரப்புச்சொல் சான்றூர்வாய்த் தோன்று; கரப்புச்சொல்
கீழ்கள்வாய்த் தோன்றி விடும். 96

(ப–ரை.) வடுச்சொல்–(பிறருடைய) குற்றத்தை வெளிப்படுக்குஞ் சொற்கள், நயம் இலார் வாய்–நீதியில்லாதவருடைய வாயில், தோன்றும்–பிறக்கும்; கரப்புச் சொல்–வஞ்சித்தலமைந்த சொற்கள், கற்றூர் வாய்–(அறநூல்களை) கற்றவர் வாயில், சாயினும்–செல்வங் கெடுவாராயினும், தோன்று–பிறவா; தீய–(ஒருவர்க்குத்) தீமையாயின வற்றை, பரப்புச் சொல்–மிகுத்தலைச் செய்கின்ற சொற்கள், சான்றூர் வாய் (நற்குணங்களால்) நிறைந்தோரது வாயில், தோற்று–பிறவா; கரப்புச் சொல்–(இரப்பவர்க்குப்) பொருளை மறைத்து மறுக்குஞ் சொற்கள், கீழ்கள் வாய்–கீழ்மக்கள் வாயில், தோன்றிவிடும்–பிறந்துவிடும்.

வாலிழையார் முன்னர் வனப்பிலார் பாடிலர்;
சாலு மவைப்படிற் கல்லாதான் பாடிலன்;
கற்று ளொருவனும் பாடிலன் கல்லாதார்
பேதையார் முன்னர்ப் படின். 97

(ப–ரை.) வால் இழையார் முன்னர்–குற்றமில்லாத ஆபரணத்தை அணிந்த மாதரிடத்து, வனப்பு இலார்–அழகில்லாத ஆடவர், பாடு

இலர்–பெருமையடைதலில்லார்; கல்லாதான்–(பல நூல்களைக்) கற்காதவன், சாலும்–(கல்வியறிவு கேள்விகளால்) நிறைந்த, அவைப்படின்–சபையில் சேர்ந்தால், பாடு இலன்–பெருமையடைதலிலன்; கற்றான்–கல்வியறிவுடையானுகிய ஒருவனும், கல்லாதார் (முன்னர்ப் படின்)–கல்வியில்லாரிடத்துச் சேர்ந்தால், பாடு இலன்–பெருமையடைதலிலன்; பேதையார் முன்னர்ப் படின்–யாதும் அறியாரிடத்துச் சேர்ந்தாலும், (பாடு இலன்)–பெருமையடைதலிலன்.

மாசு படினு மணிதன்சீர் குன்றுதாம்;
பூசிக் கொளினு மிரும்பின்கண் மாசோடும்;
பாசத்து ளிட்டு விளக்கினுங் கீழ்தன்னை
மாசுடைமை காட்டி விடும். 98

(ப–ரை.) மணி – இரத்தினம், மாசு படினும்–அழுக்குச் சேர்ந்தாலும், தன் சீர் குன்றுது ஆம்–தன்னுடைய ஒளி குறையாத தாகும்; பூசிக் கொளினும்–(ஒருவன்) கழுவிக்கொண்டாலும், இரும்பின்கண்–இரும்பில், மாசு ஓடும்–துருப்பரவும்; கீழ்–கீழ்மகன், தன்னைப் பாசத்துள் இட்டு–தன்னைத் தலையிலிட்டு, விளக்கினும்–அறிவு விளங்கச் செய்தாலும், மாசு உடைமை–(தான்) குற்றமுடையனுயிருத்தலை, காட்டி விடும்–(பிறர்க்குக்) காட்டாமலிரான்.

எண்ணெக்குஞ் சான்றோ ரரியராத் தீராமை;
புண்ணெக்கும் போற்றூ ருடனுறைவு; பண்ணிய
யாழொக்கு நட்டார் கழறுஞ்சொல்; பாழொக்கும்
பண்புடையா ளில்லா மனை. 99

(ப–ரை.) சான்றோர்–(கல்வியறிவு கேள்விகளால்) நிறைந்தவரை, அரியர் ஆக–(கிடைத்தற்கு) அருமையுடையாராக, தீராமை–(ஒருவன்) நீங்காதிருக்குங் கருத்து, எண் ஒக்கும்–ஆராய்ச்சியை ஒக்கும்; போற்றூ ருடன்–பகைவரோடு, உறைவு–வசித்தல், புண் ஒக்கும்–புண்போலத் துன்பஞ் செய்வதாகும்; நட்டார்–சினேகர், கழறும் சொல்–இடித்துச் சொல்லுஞ் சொல், பண்ணிய–குறைவில்லாத நரம்புக்கட்டமைந்த, யாழ் ஒக்கும்–யாழினிசைபோல் (செவிக்கு) இனியதாகும்; பண்பு உடையாள் – நற்குணமுடைய மனைவி, இல்லா மனை–இல்லாதவீடு, பாழ் ஒக்கும்–பாழாகிய மனையை ஒத்திருக்கும்.

ஏரி சிறிதாயி னீரருகும்; இல்லத்து
வாரி சிறிதாயிற் பெண்ணூரும்; மேலத்
தவஞ்சிறி தாயின் வினையூரும்; ஊரும்
மூரண்சிறி தாயிற் பகை. 100

(ப–ரை.) ஏரி – (ஊரிலுள்ள) ஏரியானது, சிறிது ஆயின்–நீர் குறைந்ததாலல், நீர் அருகும்–(அவ்வூர்க் கிணறு முதலியவற்றின்) நீர் குறையும்; இல்லத்து–இல்வாழ்க்கையில், வாரி–(கணவனுக்கு) வருவாய்ப் பொருள், சிறிது ஆயின்–குறைந்ததாலல், பெண்–மனையாள், ஊரும்–(அவனை) மேற்கொள்வாள்; மேலத்தவம்–முற்பிறப்பிற் செய்த நல்வினை, சிறிது ஆயின்–(ஒருவனுக்குக்) குறைந்ததாலல், வினை ஊரும்–தீவினை (அவனை) மேற்கொள்ளும்; மூரண்–(அரசனுக்குப் படைமுதலான) வலி, சிறிது ஆயின்–குறைந்ததாலல், பகை–பகைவர், ஊரும்–(அவ்வரசனை) மேற்கொள்வர்.

வைததனு லாகும் வசையே; வணக்கமது
செய்ததனு லாகுஞ் செழுங்கிளை; செய்த
பொருளினு லாகுமாம் போகம்; நெகிழ்ந்த
அருளினு லாகு மறம். 101

(ப–ரை.) வசை–(ஒருவனுக்கு) நிந்தை, வைததனால்–(பிறனை) நிந்தித்ததனால், ஆகும்–உண்டாகும்; செழு கிளை–மிக்க உறவு, வணக்கமது–(தகுந்தவர்க்கு) வணக்கத்தை, செய்ததனால்–செய்தமையால், ஆகும்–உண்டாகும்; போகம்–சுகம், செய்த பொருளினால்–தேடிய பொருளால், ஆகும்–உண்டாகும்; அறம்–தருமமானது, நெகிழ்ந்த–(பிறவுயிர்களின் துன்பத்தைக் கண்டவிடத்து மனம்) தளர்தற்குக் காரணமாகிய, அருளினால் ஆகும்–கருணையினால் உண்டாகும்.

ஒருவ னறிவானு மெல்லாம், யாதொன்றும்
ஒருவ னறியா தவனும், ஒருவன்
குணனடங்கக் குற்றமு ளானும், ஒருவன்
கணனடங்கக் கற்றனு மில். 102

(ப–ரை.) எல்லாம்–எல்லாக் கலைகளையும், அறிவான் ஒருவனும்–அறிந்திருப்பவனாகிய ஒருவனும், யாது ஒன்றும்–ஏதொருகல்வியையும், அறியாதவன் ஒருவனும்–அறியாதவனாகிய ஒருவனும், குணன் அடங்க–நல்லியற்கை இல்லாதிருக்க, குற்றம் உளான் ஒருவனும்–குற்றமுள்ளவனாகிய ஒருவனும், கணன் அடங்க–(சந்தேக விபரீத

மாகிய) சிறுமையில்லாதிருக்க, கற்றான் ஒருவனும்–கற்றறிந்தவனுகிய ஒருவனும், இல்–(இவ்வுலகத்தில்) இல்லே.

மனைக்கு விளக்க மடவார்; மடவார்
தமக்குத் தகைசால் புதல்வர்; மனக்கினிய
காதற் புதல்வர்க்குக் கல்வியே; கல்விக்கும்
ஓதிற் புகழ்சா லுணர்வு. 103

(ப–ரை.) மனைக்கு–இல்லறத்துக்கு, விளக்கம்–தீபம், மடவார்–கற்புடையபெண்டிர்; மடவார்தமக்கு–அக்கற்பையுடைய பெண்டிருக்கு (தீபம்), தகை சால்–நற்குணம் நிறைந்த, புதல்வர்–புத்திரர்; மனக்கு–(தாய்தந்தையருடைய) மனத்துக்கு, இனிய காதல்–இனிமையான ஆசையுள்ள, புதல்வர்க்கு–அப்புத்திரருக்கு (தீபம்), கல்வியே–(தாம் கற்ற) கல்வியே ஆம்; கல்விக்கும்–அக்கல்விக்கும், ஓதின்–சொல்லுமிடத்து (த்தீபம்), புகழ் சால்–புகழ் நிறைதற்குக் காரணமாகிய, உணர்வு–அறிவே ஆம்.

இன்சொலா னுகுங் கிழமை; இனிப்பிலா
வன்சொலா னுகும் வசைமனம்; மென்சொலின்
நாவினு னுகு மருண்மனம்; அம்மனத்தான்
வீவிலா வீடாய் விடும். 104

(ப–ரை.) இன் சொலான்–(பிறரிடத்து ஒருவன் பேசும்) இன் சொற்களால், கிழமை–(அவர் தனக்கு) உரியராகுதல், ஆகும்–உண்டாகும்; இனிப்பு இலா–(பிறருடைய செவிக்கு) இனித்தலில்லாத, வல் சொலான்–கடுஞ் சொற்களால், வசை மனம்–குற்றமான எண்ணம், ஆகும்–உண்டாகும்; மென் சொலின்–மிருதுவாகிய சொற்களேப் பேசுகின்ற, நாவினன்–நாவினது அடக்கத்தினுல், அருள் மனம்–(பிறவுயிர்களின்மேல் வைக்கும்) கருணேயுள்ள மனம், ஆகும்–உண்டாகும்; அம் மனத்தான்–அருளுடைய மனத்தினுல், வீவு இலாத–அழிவில்லாத, வீடு ஆய் விடும்–முத்தியுலகம் உண்டாகிவிடும்.

செய்யுள் முதற்குறிப்பகராதி

	பக்கம்.		பக்கம்.
அச்சமலை ..	.. 28	உளனுண்டு ..	.. 68
அஞ்சாமையஞ்சுதி ..	.. 52	உளனுண்டு ..	.. 17
அந்தணரினல்ல ..	.. 55	எண்ணெக்கும் ..	.. 81
அருந்ததி ..	.. 3	எதிர்நிற்கும் ..	.. 28
அருந்தொழில் ..	.. 29	எருதுடையான் ..	.. 63
அருமறை ..	.. 24	எல்லாவிடத்தும் ..	.. 79
அருளினை ..	.. 37	எள்ளற்பொருளது ..	.. 62
அலந்தார்க்கு ..	.. 19	எள்ளற்கவென்றும் ..	.. 43
அலப்பான்பிறிதுயிரை ..	53	எள்ளப்படு ..	.. 35
அற்புப்பெரும் ..	.. 36	என்றுமுள ..	.. 65
அறிவழுங்க ..	.. 39	ஏதிலாரென்பார் ..	.. 59
ஆசாரமென்பது ..	.. 79	ஏரிசிறிதாயின் ..	.. 82
ஆசைபிறன்கண் ..	.. 10	ஏவாதமாற்றும் ..	.. 22
ஆற்றினை ..	.. 20	ஐங்குரவர் ..	.. 40
இரந்துகொண்டு ..	.. 31	ஐயறிவம் ..	.. 26
இரும்பினிரும்பு ..	.. 56	ஒருதலையான் ..	.. 10
இருளாய்க் ..	.. 38	ஒருவனறிவானும் ..	.. 82
இரைசுடும் ..	.. 62	ஒன்றாக்கல் ..	.. 76
இல்லார்க்கொன்று ..	.. 29	ஒல்வதறியும் ..	.. 13
இழுக்கல் ..	.. 8	கடற்குட்டம் ..	.. 48
இளமைப்பருவத்து ..	.. 78	கண்டதேசெய்ப ..	.. 58
இனிதுண்பான் ..	.. 65	கணக்காயர் ..	.. 7
இன்சொலான் ..	.. 83	கண்ணகன் ..	.. 3
இன்னுமைவேண்டின் ..	48	கண்ணிற்சிறந்த ..	.. 64
ஈதற்குச் ..	.. 37	கண்ணுக்கணிகலம் ..	.. 23
ஈத்துண்பான் ..	.. 66	கண்ணுள்ளும் ..	.. 67
உடுத்தாடை ..	.. 30	கந்திற் பிணிப்பர் ..	.. 46
உண்பொழுது ..	.. 13	கயவரைக் ..	.. 32
உப்பின் ..	.. 34	கரப்பவர்க்கு ..	.. 37
உளர்த்தான் ..	.. 70	கல்லார்க்கு ..	.. 4
உழியுமாண்டு ..	.. 71	கல்லாவொருவர்க்கு ..	.. 75

	பக்கல்.
கல்லிற்பிறக்கும் ..	.. 44
கழகத்தால் ..	.. 19
கள்வமென்பார்க்கும் ..	.. 45
கள்ளாமை ..	.. 76
கள்ளினிடும்பை ..	.. 80
கள்ளிவயிற்றின் ..	.. 44
கற்பக்கழிமடம் ..	.. 53
கற்றன்னர் ..	.. 64
கற்றுரைக் ..	.. 41
கற்றூர்முற்றூன்று ..	.. 45
கற்றுன்றளரின் ..	.. 71
கன்றுமைவேண்டும் ..	.. 47
காண்டகு ..	.. 12
காவோடறக்குளம் ..	.. 29
காறாய்மை ..	.. 20
கீளுஞர்க்கு ..	.. 25
கூருடன்மனையாள் ..	.. 23
குழித்துழி ..	.. 54
குறளையுள் ..	.. 17
கைத்திலார் ..	.. 69
கைத்துடையான் ..	.. 68
கொடுப்பின் ..	.. 74
கொட்டியளந்து ..	.. 25
கொண்டான் ..	.. 39
கொலைநின்று ..	.. 31
கொல்யானைக்கு ..	.. 10
கொல்வது ..	.. 36
கொழுனை ..	.. 28
கொள்பொருள் ..	.. 22
கோலஞ்சி ..	.. 15
கோளைக்கி ..	.. 53
சாவாதவில்லை ..	.. 73
சான்றருள் ..	.. 34
சில்சொற்பெரும் ..	.. 21
சிறந்தார்க்கரிய ..	.. 61
சீலமறிவான் ..	.. 8
சுந்தீ ..	.. 40

	பக்கம்.
செருக்கிலுல் ..	.. 12
சொல்லானறிப ..	.. 73
தன்குணம் ..	.. 4
தன்பயம் ..	.. 24
தன்னச்சி ..	.. 14
தன்னெவியந்து ..	.. 17
தாளாளன் ..	.. 7
தானங்கொடுக்கும் ..	.. 12
தீரியழல் ..	.. 67
திருவிற்றிரல் ..	.. 54
திருவுந்தினவகை ..	.. 58
திருவொக்கும் ..	.. 45
தூய்மையுடைமை ..	.. 33
தூர்ந்தழியும் ..	.. 72
தூர்ந்தொழுகி ..	.. 22
தேவரனையர் ..	.. 71
தோல்லவையுள் ..	.. 6
நகையினிது ..	.. 57
நகைநலன் ..	.. 52
நண்பிலார் ..	.. 39
நலனுமிளமையும் ..	.. 74
நல்லர்க்கும் ..	.. 74
நல்விருந்து ..	.. 27
நன்றிசாம் ..	.. 60
நன்றிப்பயன் ..	.. 26
நாக்கினறிப ..	.. 72
நாவன்றூ ..	.. 73
நாற்றமுரைக்கும் ..	.. 60
நிலத்திற்கணி ..	.. 46
நிறைநெஞ்சு ..	.. 30
நீரான்வீறு ..	.. 75
நுண்மொழி ..	.. 15
நெய்விதிர்ப்ப ..	.. 66
நோவஞ்சாதாரோடு ..	.. 27
பகைமுன்னர் ..	.. 4
படியைமடியகத்து ..	.. 42

	பக்கம்.		பக்கம்.
பட்டாங்கே	78	மழையின்றி	61
பதிநன்று	70	மனைக்காக்க	49
பத்திமை	41	மனைக்குப்பாழ்	50
பழமையை	25	மனைக்குவிளக்கம்	83
பழியஞ்சான்	33	மறக்களி	56
பழியின்மை	67	மறையறிப	77
பல்லவையுள்	15	மாசுபடினும்	81
பல்லினுளெய்	47	மாண்டவர்	65
பறைநன்று	47	மாரிநாள்	32
பறைபட	43	முந்தை	24
பற்றென்னும்	11	முந்நீர்த்திரை	16
பிணிதன்னை	36	முறைசெய்யான்	33
பிணியன்னார்	55	முப்பின்கண்	9
பிறர்தன்னைப்	5	மூன்றுகடன்	16
பிறக்குங்கால்	58	மையாற்றளிர்க்கும்	56
பின்னவாம்	69	மொய்சிதைக்கும்	51
புகழ்செய்யும்	51	யாறுளடங்கும்	63
புகைவித்தாப்	55	யானையுடையார்	63
புலமையக்கம்	18	வடுச்சொல்	80
பெண்விழைந்து	14	வருவாயுள்	11
பெருக்குக	76	வழங்காத்துறை	5
பெருமையுடையார்	6	வளப்பாத்தியுள்	48
பெறுதிக்கண்	37	வளனன்மை	31
பெற்றுன்றிர்ப்பின்	50	வன்கண்	78
பேஎய்ப்பிறப்பில்	26	வாயினடங்குதல்	19
பொய்த்தலிறுவாய	49	வாய்நன்கு	35
பொய்வழங்கி	8	வாள்வீசி	34
பொறிகெடு	60	வாலிழையார்	80
போதிலுல்	61	வாளாமீன்	5
போரறிந்	59	விழுத்தினை	38
மகனுரைக்கும்	69	விருந்தின்றி	20
மடிமைகெடுவார்	77	விளியாதான்	7
மண்ணியறிப	44	வெகுளி	18
மண்ணின்மேல்	9	வெல்வதுவேண்டி	13
மதிமன்னும்	42	வைததனுல்	82
மலைப்பினும்	51	வைததனை	21

17408

Printed at the S.P.C.K. Press, Vepery, Madras— B. 9311.

திவான் பஹதூர்—வி. கிருஷ்ணமாச்சாரியார் இயற்றிய

நீதி கதா கிருதிகள்.

'ஈஸாப் கதைகள்' என்று நீதி புகட்டும் பல சிறு கதைகள் வழங்கி வருவதைப் பலரும் அறிந்திருக்கலாம். அக் கதைகள் பல நூற்றாண்டுகளுக்கு முன் இயற்றப்பட்டவை. அவைகளின் அருமை பெருமைகளால் அவை இன்றும் அழியாமல் உலகம் முழுவதும் பிரபலமாய் வழங்கி வருகின்றன. அநேகமாய் முக்கியமான பாஷைகள் பலவற்றிலும் அவை மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு அவை மிகவும் ஏற்றவையாயிருக்கின்றன. ஆதலால், காலஞ்சென்ற திவான் பஹதூர்—வி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள், அக்கதைகளிற் சிலவற்றை, சிறுவர்கள் இசையுடன் பாடுவதற்கேற்ற கீர்த்தனைகளாக, எளிய நடையில் இயற்றியுள்ளார். அவை, இப்பொழுது நல்ல கடிதத்தில் படங்களுடன் நீதி கதா கிருதிகள் என்னும் புத்தகமாகப் பதிக்கப்பட்டுள்ளன. விலை, 4 அணா.

பாலநீதிச் செய்யுள் நூற்றிரட்டு.

ஔவையார், அதிவீரராம பாண்டியன் முதலிய முற்கால வித்வசிரோமணிகள் எழுதிவைத்த அருமையான நீதி நூல்கள், சிறுவர்கள் மனத்திலும் பதியக்கூடியவாறு தெளிவான எளியநடையில், மனப்பாடம் பண்ணுவதற்கு அனுகூலமான செய்யுள் வடிவில் அமைந்திருக்கின்றன. ஆதரிப்பாரில்லாமல் அந்நூல்கள் இப்பொழுது பாடசாலைகளில் அதிகமாகப் போதிக்கப்படவில்லை. தங்களைக் கல்விமான்கள் என்று மதித்திருக்கும் பல தமிழ் மக்கள்கூடத் தங்கள் முன்னோர்களுக்கு அரிச்சுவடிப் பாடமான இவ்வரிய நூல்களைக் கண்ணாலும் கண்டறியாதவர்களாயிருக்கிறார்கள். இது தமிழ் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் மிகவும் மானக்கேடான விஷயமன்றோ? இக் குறைபாட்டை நிவர்த்திக்கக் கருதி அவ்வரிய நீதிநூல்களை, சிறுவர்களும் பிறரும் படிப்படியாய்க் கற்று அறிந்து கொள்வதற்கேற்றவாறு பல பகுதிகளாகப் பிரித்து, பதவுரையுடன் நல்ல கடிதத்தில் தெளிவான எழுத்துக்களால் அழகாக அச்சிடலாயிற்று. அந் நீதிநூல்களின் பகுப்பும் அடக்கமும் வருமாறு:

	ரூ.	அ.	பை.
முதற்படி (ஜூனியர்—Junior).			
பகுதி—1. உலகநீதி, ஆத்திசூடி	0	2	0
பகுதி—2. கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை ..	0	2	6
பகுதி—3. வாக்குண்டாம், நல்வழி	0	2	6
இடைப்படி (இண்டர்மீடியேட்—Intermediate).			
பகுதி—1. நீதிவெண்பா	0	3	0
பகுதி—2. நன்னெறி, இனிது 40, இன்னா 40 ..	0	3	0
உயர்படி (ஸீனியர்—Senior).			
பகுதி—1. மூதுரைமொழிக்காஞ்சி, நீதிநெறி விளக்கம் ..	0	4	0
பகுதி—2. திரிகடுகம், நான்மணிக்கடிகை	0	5	0